3 FEB 1940
ADRAS

கலைமகள்

மாதப் பத்திரிகை

பிரமாதி ௵ மாசி ௴

*

கூஅ

முக்கிய விஷயங்கள்

உத்தம ஸம்பாவனை
(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

போர்நதாத்
(தி. நா. சுப்பிரமணியன்)

சிகிரியா
(இலங்கையர்கோன்)

நிர்மலா—தொடர்கதை
(ப்ரேம்சந்த்)

ருஷ சந்தா ரூ. 4—0—0 * தனிப்பிரதி அணா ஆறு

சென்னை கெயிட்டியில் மகத்தான ஆரம்பவிழா

பிப்ரவரி **10உ** சனி முதல்

புராணங்களில் சிறந்தது! படங்களில் உயர்ந்தது! கானமிர்தத்தைப் பொழிவது! கலகலவென்று சிரிப்பை மூட்டுவது!

மாணிக்கவாசகர்

தினசரி 3 காட்சிகள்

எம். எம். தண்டபாணி தேசிகர் - | சி. வி. வி. பந்துலு -
எம். எஸ். தேவசேனை - | என். எஸ். கிருஷ்ணன் -
பி. பி. ரங்காச்சாரி - | டி. ஏ. மதுரம் -

முதலியோர் நடித்தது.

*

ஸ்டூடியோ:
மாடர்ன் தியேட்டர்ஸ்,
சேலம்.

டைரக்ஷன்:
டி. ஆர். சுந்தரம்,
பி.ஏ., பி எஸ்ஸி. (Leeds)

இப்பொழுது காஞ்சீவரத்தில் 7-வது வாரம்

*

புதுச்சேரி — கமர்ஷியல் டாக்கீஸில் பிப்ரவரி 10உ ஆரம்பம்
எதிர்பாருங்கள்!

வேலூர் — ராக்ஸி டாக்கீஸிலும் }
சிதம்பரம் — புஷ்களா டாக்கீஸிலும் } மார்ச் மாதத்தில்

சென்னை, வட, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களுக்கு விநியோக உரிமை பெற்றவர்கள்:

ஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்,
அம்ஜிக்கரை சென்னை

கைவசமிருப்பவை:
ஜயக் கொடி (தமிழ்) பாலாஜி (தெலுங்கு)
செங்கற்பட்டு, வட, தென்னாற்காடு ஜில்லாக்களுக்கு

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்
தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	ரூ. 60,00,000--0—0
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	17,92,762—0—0

செக்ரடரி: N. கோபால அய்யர்





மாடல்
நெ.
656 A.C.

[195-255
வோல்ட்
50-100
ஸைகில்ஸ்]

முக்கிய
அம்சங்கள்

- சகல ரேடியோ உலகையும் 13-2000 மீட்டர்களில் கேட்கலாம்.
- வேண்டிய ஸ்டேஷனைச் சரியாய்க் கண்டெடுத்ததைக் குறிக்கும் கருவி.
- இனிய நாதமளிக்கும் எலிப்டிகல் லவுட் ஸ்பீகர்.

கேட்லாகுக்கு :—
தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்,
த. பெட்டி 705,
கெதீட்ரல், மதறாஸ்.
அல்லது
எந்த எச். எம். வி.
வியாபாரியிடமும்
கிடைக்கும்.

எல்லா "எச். எம். வி." ரேடியோ வியாபாரியிடமும் காணலாம்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

ஜுபிடர் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

தலைமைக் காரியாலயம்: பம்பாய்

1919-ல் ஸ்தாபிக்கப்பட்டது

- 'ஜுபிடர் ஜெனரல்' நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து, தொழிலாளர் காம்பென்ஸேஷன், ஆயுள் முதலான இன்ஷ்யூரன்ஸ் வியாபாரங்களை நடத்துகிறது.

- 'ஜுபிடர் ஜெனரல்' உலகமுழுவதும் கிளைக் காரியாலயங்களும் ஏஜென்ஸிகளும் ஸ்தாபித்து வாரிசுதார்களின் பிராதைக் கவனித்துத் தீர்த்துவைக்கும் ஏஜெண்டுகளை எங்கும் நியமித்திருக்கிறது.

- 'ஜுபிடர் ஜெனரல்' இந்தியாவிலுள்ள முக்கியமான எல்லாவிடங்களிலும் கிளைக்காரியாலயங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் மதராஸ் கிளைக்காரியாலயம் 1939-ஆம் ௵ மே ௴ 10-ஆம் தேதி திறக்கப்பட்டது.

- 'ஜுபிடர் ஜெனரல்' இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் தலைமை ஏஜெண்டுகளாகவும், ஆர்கனைஸர்களாகவும், ஆயுள் ஆர்கனைஸேஷன் இன்ஸ்பெக்டர்களாகவும் விரும்புவோர் கம்பெனியாருக்கு எழுதிக் கேட்கலாம். அவ்விதம் எழுதிக்கேட்போர் அனுபவஸ்தராகவும், பலவிடங்களிலும் பழக்கமுடையவராகவும் இருக்கவேண்டும்.

நிர்வகிக்கும் ஏஜெண்டுகள்:

மேஸ்ஸர்ஸ் லால்ஜி நாரண்ஜீ அண்டு கோ.

காரியதரிசி:
கே. எஸ். ராமசந்திரையர்.

கிளைக்காரியாலய மானேஜர்:
என். வேங்கடராமையர்.

காரியாலயம்:

நெ. 99, அரண்மனைக்காரத் தெரு, சென்னை.

நீங்கள் பாலிஸிதாரராயின்

அதன் சொந்தக்காரருமாவீர்கள்.

பாலிஸிதாரர்களது நலனே
கம்பெனியாரது முக்கிய கவன
மாகும். முதல் 3 மதிப்பீடுகளி
லும் நல்ல லாபங்கள்

பதினைந்து வருஷங்களுக்கு முன், அனு
பவமுள்ள நிர்வாகஸ்தர்கள், ஊழியம்
புரியும் நோக்கமுள்ள டைரக்டர்களது
மேம்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்
பட்ட இந்த அஸோஸியேஷன்,
தினேதினே வலுவுடன் அபிவிருத்தி
யடைந்து வருகின்றது. இதன் அபி
விருத்தி ஆச்சரியகரமானது. இதன்
சட்ட திட்டங்கள், நடைமுறை, செல்
வத்தை முதலீடு செய்வதிலுள்ள
ஜாக்ரதை, இவையே இன்ஷ்யூரன்ஸ்
செய்து கொள்ளும் மக்களுக்கு ஒரு
தூண்டுதலாக இருக்கின்றன. மெம்ப
ராகவாவது அல்லது பிரதிநிதியாக
— வாவது இன்றே சேருங்கள். —

இந்தியன் மியூச்சுவல்

லைப் அஸோஸியேஷன் லிமிடெட்,

10, மவுண்ட் ரோட், : : மதராஸ்

கலைமகள்

தொகுதி கஎ] பிரமாதி-ஹு மாசி மீ [பகுதி கூஉ

பிப்ரவரி, 1940

பொருளடக்கம்

1. உத்தம ஸம்பாவனை—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 171

2. பேர்நதாத் (படத்துடன்)—தி. நா. சுப்பிரமணியன். 178

3. கலையும் யோகமும்—ஸ்ரீ அன்னை (பி. கோதண்டராமன் மொழிபெயர்ப்பு) ... 185

4. குழந்தையும் விளையாட்டும்—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். ... 195

5. வெண்ணிலா—"சுகி" ... 201

6. எதிரி—பி. வி. சுப்பிரமணியன் ... 209

7. வெறும் சோடா (படங்களுடன்)—கே. வீ. வீரராகவையர், எம்.ஏ., எல்.டி. ... 214

8. சிகிரியா—"இலங்கையர்கோன்" ... 223

9. ஏழையின் குழந்தை—ஏ. முகம்மது ரஷீத் ... 231

10. நிர்மலா—ஸ்ரீ ப்ரேம்சந்த் (கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்ப்பு) ... 238

11. வாழ்க்கைமுறை-மூலக்கற்பனை—வே. ஸாரநாதன், எம்.ஏ. ... 254

12. ஏமாற்றின குரங்கு (படத்துடன்)—என். பஞ்சாபகேசன் ... 259

13. மதிப்புரை ... 262

14. குறிப்பும் திரட்டும் ... 266

முகப்புப் படம்

திவான் சேஷையா சாஸ்திரிகள்

விஸ்வா & கோ

ஆர்டிஸ்ட்ஸ், பிளாக் அண்ட் ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்ஸ்

50, வாலாஜா ரோட்,

மவுண்ட் ரோட், மதராஸ்.

கலைமகள்

: உத்தம ஸம்பாவனை :

* மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் *

அமராவதி ஸ்ரீ சேஷையா சாஸ்திரிகளைத் தெரியாதார் தமிழ்நாட்டில் இரார். தென்னுட்டில் தோன்றிய ஆச்சரிய புருஷர்களுள் அவர் ஒருவர். அவர் புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில் திவாஞக இருந்து செய்த திருத்தங்கள் பல. அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் மிக்க சுவையுள்ளன.

இராமச்சந்திரத் தொண்டைமானென்னும் அரசரே சேஷையா சாஸ்திரிகளைத் திவாஞகப் பெற்ற பாக்கியவாஞக இருந்தனர்

புதுக்கோட்டையில் தொன்று தொட்டு வருஷந்தோறும் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெறும். வடமொழி, சங்கீதம் முதலியவற்றில் வல்ல வித்துவான்களும், வேதம், சாஸ்திரங்கள் முதலியவற்றில் தேர்ந்த அறிஞர்களும் அங்கே சென்று தக்க ஸம்மானங்களைப் பெற்றுச் செல்வார்கள். அன்னதானம் விசேஷமாக நடைபெறும். நூற்றுக்கணக்காக வித்துவான்கள் வந்து கூடுவார்கள். வாக்கியார்த்தம் நடைபெறும்; உபந்யாஸங்கள் செய்யப்படும். அவரவர்களுக்குத் தக்கபடி உபசாரம் செய்து அவரவர்கள் தங்கியிருக்க வசதியான இருக்கைகள் அமைக்கப்படும். தங்கியிருக்கும் நாட்களுக்கு உலுப்பைகள் அனுப்புவதுண்டு. சபைகள் நடைபெறுவது மிகவும் விமரிசையாக இருக்கும். விஜயதசமியன்றே மறு

1720
1859

நாளோ அந்த வித்துவான்களு
கள் செய்யப்பெறும்.

சேஷையா சாஸ்திரிகள் திவானாக வந்தபிற
வகையாக உள்ள வித்துவான்களுடைய தகுதியை
பொருட்டு அவர்களுக்கு வினாப்பத்திரங்கள் கொ
பரீக்ஷித்து அவர்கள் பெறும் அம்சத்தின் த
அறிந்து அதற்கேற்ற ஸம்மானம் செய்யும் வழக்க
டாயிற்று. இங்ஙனம் நடைபெறும் பரீக்ஷையில்
பவர்களுக்கு அவர்களுடைய தகுதிக்கேற்ப நூறு ரூ
முதல் பத்து ரூபாய் வரையிற் பரிசு அளிக்கப்படும். நூறு
ரூபாயே உயர்ந்த ஸம்மானம்; அதனை உத்தம ஸம்
பாவனை என்று சொல்வார்கள். பரீக்ஷை நடைபெறும்
போது சாஸ்திரிகள் உடனிருந்து கவனித்துவருவார்.
பிரஸித்தர்களான வித்துவான்களுக்குப் பரீக்ஷையில்லா
மலே ஸம்மானங்கள் அளிக்கப்படும்.

இப்படி நடந்துவந்தமையால் வித்துவான்கள் தங்கள்
தகுதிக்கேற்ற ஸம்மானங்களைப் பெற்றார்கள். தராதர
மறிந்து பரிசளிப்பதையே பெரிதாகக் கருதுபவர்களாகிய
அவர்கள் இந்த முறையின் சிறப்பை அறிந்து மிக மகிழ்ந்
தார்கள். வருஷத்திற்கு வருஷம் அதிகமான வித்துவான்
கள் வரத் தலைப்பட்டனர். இவர்களுக்கெல்லாம் வழக்கப்
படியே மரியாதைகள் செய்யப்பெற்று வந்தன.

ஒரு வருஷம், நவராத்திரியில் சரஸ்வதி பூஜைக்கு
முதல்நாள் சாஸ்திரிகள் வித்தியா மண்டபத்தில் வித்து
வான்களுடைய கூட்டத்தின் நடுவில் அமர்ந்திருந்தார்.
மறுநாள் இன்னார் இன்னாருக்கு இன்ன இன்ன
ஸம்மானம் செய்வதென்று நிச்சயம் செய்துகொண்டிருந்
தார். அப்பொழுது ஒருவர் அவரருகில் வந்து ஒரு
கடிதத்தை நீட்டினார். அதில், ''இதைக்கொண்டு வருபவரை
உத்தமஸம்பாவனை வரிசையில் சேர்த்துக்கொள்ள
வேண்டும்'' என்று எழுதப்பட்டிருந்தது. அதன்கீழ்
அரசருடைய முத்திரை இருந்தது. சாஸ்திரிகள் அதைப்
படித்துப் பார்த்து வியப்புற்றார். படித்தபின்பு கடிதம்
கொணர்ந்தவரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார்.
அந்த மனிதருடைய முகத்தில் ஓரிடத்திலாவது அறிவின்

பிரகாசமே தோற்றவில்லை. சாஸ்திரிகளுக்கு அவரைக் கண்டபோது புன்னகை உண்டாயிற்று; வந்தவரைப் பார்த்து, "சந்தோஷம்! நீர் என்ன வேலை பார்த்து வருகிறீர்?" என்று கேட்டார்.

வந்தவர்: நான் மகாராஜாவுக்கு நீர்மோர் செய்து கொடுப்பேன்.

சாஸ்திரிகள்: அப்படியா! நீர்மோரில் என்ன என்ன சேர்ப்பீர்?

வந்தவர்: பெருங்காயம், சுக்கு, உப்பு, எலுமிச்சம் பழரஸம் முதலியவற்றைப் பக்குவமாகச் சேர்த்துத் தாளிதம் செய்வேன்; மகாராஜாவினுடைய விருப்பமறிந்து வேண்டியதைச் செய்து கொடுப்பேன்.

சாஸ்திரிகள், "நல்ல காரியம். மகாராஜாவின் மனம் கோணுமல் செவ்வையாக நடந்து வாரும்; நல்லபேர் எடும்; போய்வாரும்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

வந்தவர் மிக்க சந்தோஷத்தோடு சென்றார். அவர் போய் ஐந்து நிமிஷங்களுக்குப்பின் மற்றொருவர் வந்தார். அவரும் ஒரு கடிதத்தைச் சாஸ்திரிகளிடம் கொடுத்தார். அதிலும் முன்பு எழுதினபடியே எழுதப்பட்டிருந்தது. சாஸ்திரிகளுக்குப் பின்னும் வியப்பு அதிகமாயிற்று. அவரும் முன்னவரைப் போன்றவரென்றே சாஸ்திரிகள் உணர்ந்து கொண்டார்; அவரைப் பார்த்து, "நீர் மகாராஜாவுக்கு என்ன பணி செய்துவருகிறீர்?" என்று கேட்டார்.

வந்தவர்: நான் நல்ல ரஸம் செய்து கொடுப்பேன். சீரகரஸம், மைசூர் ரஸம் முதலிய பலவகைகளில் மகாராஜாவுக்கு எது பிரீதியோ அதைச் செய்துதருவேன்.

சாஸ்திரிகள்: அப்படியா! சந்தோஷம், மகாராஜாவின் திருவுள்ளத்துக்கு உகந்தபடி தவறுமற் செய்துவாரும்.

வந்தவர் தம்மைச் சாஸ்திரிகள் அங்கீகரித்துக் கொண்டாரென்றெண்ணி ஊக்கத்துடன் போய்விட்டார்.

பிறகு ஒருவர் வந்தார்; மகாராஜாவின் முத்திரையிட்ட கடிதமொன்றை நீட்டினர்; தாம் மகாராஜாவுக்கு

வேப்பிலைக்கட்டி பண்ணித் தருவதாகச் சொன்னார். சாஸ்திரிகள் அவரிடமும் பிரியமாகப் பேசி அனுப்பிவிட்டார். இப்படியே பொடிசெய்து தருபவரும், உடையணிவிப்பவரும், வேறு பணிவிடை செய்பவர்களுமாகப் பத்துப் பேர்வரையில் வந்து சாஸ்திரிகளிடம் கடிதங்களைக் கொடுத்துச் சென்றார்கள். சாஸ்திரிகள் இதில் ஏதோ சூது இருக்க வேண்டுமென்று எண்ணி அவர்கள் கொடுத்த கடிதங்களையெல்லாம் வாங்கி வைத்துக் கொண்டார்.

மறுநாட்காலையில் எட்டுமணிக்குச் சாஸ்திரிகள் அரசரைப் பார்க்கச்சென்றார். சாஸ்திரிகளைக் கண்டவுடன் அரசர் ஆஸனத்தில் இருக்கச்செய்தார். பிறகு, "நவராத்திரி உத்ஸவத்தில் தங்களுக்கு அதிக சிரமம்; எல்லாம் நன்றாய் நடைபெறுகின்றனவா? கோயில்களில் தர்மங்கள் ஒழுங்காகச் செய்யப்பட்டு வருகின்றனவா? வித்வத்கூட்டம் இந்த வருஷம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்.

"எல்லாம் நன்றாக நடக்கின்றன. வித்துவான்கள் சென்ற வருஷத்தைக் காட்டிலும் இப்போது அதிகமாக வந்திருக்கிறார்கள். சுமங்கலிபூஜை, கோயிற் காரியங்கள் முதலிய யாவும் குறைவில்லாமல் நடைபெறுகின்றன. எல்லோரும் திருப்தியாக இருக்கிறார்கள்'' என்றார் சாஸ்திரிகள்.

அரசர்: தாங்கள் கவனித்து வரும்போது குறைவு நேர்வதற்கு நியாயம் இல்லை. தாங்கள் செய்துவரும் உபகாரங்களை இந்த ஸம்ஸ்தானம் என்றைக்கும் மறவாது.

சிறிதுநேரம் அரசரிடம் இவ்வாறு பேசியிருந்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு சேஷையாசாஸ்திரிகள் பத்து அடி நடந்தார். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவர் போலத் திரும்பிவந்தார். அரசர் மிக விரைவாக, "என்ன? என்ன? சாஸ்திரிகள் ஏதாவது சொல்ல வேண்டுமோ?'' என்று கேட்டார்.

சாஸ்திரிகள்: ஆமாம். இப்போது ஒன்று ஞாபகம் வந்தது. அதைச் சொல்லலாமென்று வந்தேன்.

அரசர்: சொல்லலாமே.

சாஸ்திரிகள்: இந்த வருஷம் வந்திருக்கிற வித்துவான்களுடைய கூட்டத்தைப் பார்க்கும்போது எனக்கே உள்ளம் பூரிக்கிறது. நம்முடைய ஸம்ஸ்தானத்துக்கு இந்தப் பெருமை ஒன்றே போதும். விஜயதசமியன்று எல்லா வித்துவான்களையும் ஒரு வரிசையாக வைத்து மகாராஜா அவர்களே பிரதக்ஷிணம் செய்து மரியாதை செய்யும் இந்த வழக்கம் வேறு எந்த இடத்திலும் இல்லை. இதனால் வேறு இடங்களுக்குச் செல்லாத மகா வித்துவான்கள்கூட இங்கே ஸம்மானம் செய்வதைப் பெரிதாக எண்ணி வந்துபோகிறார்கள். வேறு சில ஸம்ஸ்தானங்களில் கிடைக்கும் ஸம்மானங்களைக் காட்டிலும் இங்கே கிடைப்பது குறைவு. ஆனாலும் இதையே உயர்வாகக் கருதி வருகிறார்கள். எவ்வளவோ பிரஸித்த வித்துவான்கள் வந்திருக்கிறார்கள். எல்லாம் நன்றாகவே இருக்கின்றன. ஆனால் இரண்டு தினங்களாகச் சில வார்த்தைகள் என் காதிற் படுகின்றன.

அரசர்: என்ன? என்ன? சொல்லவேண்டும்.

சாஸ்திரிகள்: அடுத்த வருஷம் இப்படி நடப்பது சந்தேகமென்று தோற்றுகிறது.

அரசர்: ஏன்? என்ன காரணம்?

சாஸ்திரிகள்: நான் அங்கங்கே இரகசியமாக ஆள் வைத்து அவரவர்கள் பேசுவதைக் கவனித்து வந்து சொல்லும்படி செய்திருக்கிறேன். அதனால் எனக்கு இந்த விஷயம் தெரிந்தது. முன்பே சொல்ல மறந்து விட்டேன். அவர்கள், 'நாமெல்லாம் இங்கே தாரதம்யம் அறிந்து கௌரவிக்கிறார்களென்று வருகிறோம். இந்த ஸம்மானத்தை உத்தேசித்து வரவில்லை. இந்த வரம்பு இந்த வருஷம் கெட்டுப்போகுமென்று தெரிகிறது. ஆராரோ சாமான்ய மனிதர்களெல்லாம் நம்முடன் வந்து உட்காரப் போகிறார்களாம். இந்த வருஷம் ஏதோ வந்து விட்டோம்; நடுவில் திரும்பிப்போவது நன்றாக இராது. அடுத்த வருஷமுதல் வருவதில்லை; வந்தால மதிப்புக் கெட்டுவிடும்' என்று அங்கங்கே கூடிப் பேசிவருகிறார்கள்.

அரசர்: அப்படி அவர்கள் எண்ணுவதற்கு என்ன காரணம்?

சாஸ்திரிகள்: உத்தமஸம்பாவனை செய்யவேண்டுமென்று மகாராஜாவுடைய உத்தரவைக் கொண்டுவந்து சிலர் என்னிடம் கொடுத்தார்கள். அவர்களோடு சிறிது நேரம் பேசியிருந்து அனுப்பினேன். அவர்கள் தமக்கு உத்தம ஸம்பாவனை கிடைக்கப்போவதாகப் பலரிடம் உத்ஸாகத்தோடு சொல்லிக்கொண்டே போய்விட்டார்களென்று தோற்றுகின்றது. அதைக் கேட்ட வித்துவான்களெல்லாம் அதிருப்தியோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அரசர்: அடடா! நான் அப்படி ஒருவரையும் அனுப்பவில்லையே!

சாஸ்திரிகள் தாம் வாங்கி வைத்திருந்த கடிதங்களை உடனே எடுத்துக் காட்டினார். அரசர் அதைப் பார்த்துத் திகைத்தார்; "நான் அனுப்பவில்லையே; யாரோ பண்ணிய விஷமமென்றே எண்ணுகிறேன்" என்றார் அரசர்.

சாஸ்திரிகள்: இவைகளைக் கொண்டுவந்து கொடுக்கும்போது நான் வேறு என்ன நினைக்கமுடியும்? மகாராஜாவிடம் தொண்டுசெய்பவர்கள் கவலையின்றி இருக்கவேண்டியது அவசியந்தானே? மகாராஜாவினுடைய வேலைக்காரனாகிய நான் மகாராஜாவின் திருவுள்ளத்தின்படி நடக்க வேண்டியவனல்லவா?

அரசர்: அப்படி அவசியமொன்றும் நேரவில்லையே.

சாஸ்திரிகள்: ஒருவேளை யாருக்கேனும் உதவிசெய்ய வேண்டுமென்று மகாராஜாவின் திருவுள்ளத்திற் படுமானால் எனக்குத் தனியே சீட்டு அனுப்பினால் நான் உசிதம்போல அவர்களுக்கு அநுகூலம் செய்வேன். வித்துவான்களுடைய வரிசையில் அவர்களைச் சேர்ப்பது நன்றாக இராது. மகாராஜா உத்தரவின்படி நான் செய்யக் காத்திருக்கிறேன். அவர்களுக்குக் கொடுத்த பணத்தைக் குதிரைக்கான கொள்ளுச்செலவென்று எழுதிக்கொள்ளலாம்; பசுவிற்குப் புல்லுக்குரிய செலவில் சேர்த்துக் கொள்ளலாம்; பருத்திக்கொட்டைச் செலவில் எழுதலாம்; வாணமருந்துச்செலவில் கூட்டிக்கொள்ளச் செய்கிறேன். அதனால் குற்றமில்லை.

அரசர் தம்மிடமுள்ள வேலைக்காரர்களைக் கூப்பிட்டு யார் கடிதம் கொடுத்தாரென்று விசாரித்தார். ஒவ்வொரு

வரும், "நான் அல்ல", "நான் அல்ல" என்றே சொல்லி விட்டனர். பிறகு ஒருவர் மட்டும் தாம் செய்ததாக ஒப்புக் கொண்டார். அரசர் அவரைக் கண்டித்து அனுப்பினர்.

சாஸ்திரிகள் அரசரிடம் விடை பெற்றுச் சென்றூர். வித்துவான்களுடைய ஸம்பாவனையும் வழக்கம்போல் சிறப்பாக நடந்தது.

இந்த வரலாற்றைப் பிற்காலத்தில் என்னிடம் சாஸ்திரிகளே கூறியதுண்டு; அப்பொழுது அவர், "மகாராஜாவை வேலைக்காரர்கள் பலமுறை வற்புறுத்தி யிருக்கலாம். அவர் அவர்களுடைய நச்சுப் பொறுக்க முடியாமல் ஏதாவது அநுகூலமாக விடை கூறியிருப்பார். அதை அறிந்து மகாராஜாவோடு நெருங்கிப் பழகுபவர் யாரோ ராஜாவினுடைய முத்திரையை வைத்துக் கடிதங் களைக் கொடுத்தனுப்பிவிட்டார். நான் ஏமாந்து போக லாமா? இதை ராஜாவுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றே போய்ச் சொன்னேன். அந்தக் கடிதங்கொண்டு வந்தவர் களை, குதிரை, மாடு முதலியவைகளோடு சேர்க்கவேண்டு மேயன்றி வித்துவான்களோடு சேர்க்கக் கூடாதென் பதைக் குறிப்பாக மகாராஜாவிடம் சொல்லிவிட்டேன். மகாராஜாவும் தெரிந்துகொண்டார். நான் சொன்ன விஷயங்களிற் பெரும்பாலும் என் கற்பனை" என்று சொல்லிச் சிரித்தார்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்ற குறள் அப்போது எனக்கு நினைவுக்கு வந்தது.

: பெர்நதாத் :

(தமிழ்நாட்டில் சிறைப்பட்ட ஸ்வீடன் தேச அரசன்)

* தி. நா. சுப்பிரமணியன் *

1

1803-ஆம் வருஷம் ஜூன் மாதம். ஒருநாள் மாலைப்பொழுது. ஜெர்மன் தேசத்துப் பிரதான நகரங்களுள் ஒன்ருன ஹானோவர் (Hanover) மிக்க குதூகலத்துடன் விளங்கியது. வீதிகளில் குறுக்கும் நெடுக்குமாகத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

பெர்நதாத் (Karl Johan XIV)

பாவட்டாக்களும் கொடிகளும் கட்டிடங்களின்மீது பறந்தன. நகர மத்தியில் இருந்த கட்டிடத்தின்மீது ஜெர்மன் கொடியின்றிப் பிரெஞ்சுக் கொடி பறந்துகொண்டிருந்தது.

பிரெஞ்சுக்காரர்கள் அந்த நகரத்தைக் கைப்பற்றிவிட்டனர். அவர்கள் தங்கள் வெற்றியைக் கொண்டாட நிகழ்த்திய விழாவாகும் அது. பிரெஞ்சுக்காரர்களின் நகரப் பிரவேசத்தை வரவேற்று அவர்களைக் கௌரவிப்பதற்காக ஹானௌவர் நகரப்பிரமுகர்கள் நகரமண்டபத்தில் கூடியிருந்தனர். பிரெஞ்சு ஸேனைபதியும் தன் பரிவாரங்கள் புடைசூழ ஊரை வலம்வந்து நகரமண்டபத்தை அடைந்தான்.

நகரமண்டபத்தில் ஒரே ஆரவாரம். இருதரத்தாரும் ஒருவரை ஒருவர் கொண்டாடிக்கொண்டார்கள். நகரமுக்கியஸ்தர்கள் ஒவ்வொருவராகப் பிரெஞ்சுத் தளகர்த்தனுக்குப் பழக்கம் செய்விக்கப்பட்டனர். தளகர்த்தனும் அவர்களுடைய அந்தஸ்துக்கும் பெருமைக்கும் தக்கப்படி அவர்களுடன் சிறிது வார்த்தையாடி வந்தான்.

"இவர் ஜெனரல் வங்கென்ஹைம் (General Wangenheim); பழுத்த போர்வீரர்; இந்தியாவில் சண்டைசெய்து புகழ் சம்பாதித்தவர்."

இவ்விதம் கூறி அறிமுகப்படுத்தினான் நகரசபைத் தலைவன். அந்தப் பெயர் பிரெஞ்சுத் தளகர்த்தனின் உடலில் மின்சாரத்தைப் புகுத்தியதுபோன்ற ஓர் உணர்ச்சியை உண்டுபண்ணியது. அவன் ஜெர்மன் வீரனை நிமிர்ந்து பார்த்தான். அதே முகந்தான்.

"ஆஹா! அப்படியா! மிகவும் சந்தோஷம். நீங்கள் இந்தியாவில் போர்புரிந்திருக்கிறீர்கள் என்பதைக் கேட்டு என் உள்ளம் பூரிப்பை அடைகின்றது. இந்தியாவில் எங்கெங்கே போர் செய்திருக்கிறீர்கள்?"

"இந்தியாவின் தென்பாகத்தில்தான் அதிகமாக இருந்திருக்கிறேன். சென்னைப் படையில் சேர்ந்திருந்தேன். வந்தவாசி, புதுச்சேரி, திருச்சிராப்பள்ளி, கூடலூர் முதலிய இடங்களில் நடந்த போர்களில் சண்டை செய்திருக்கிறேன்."

"கூடலூரிலா? நானும் கூடலூரில் இருந்திருக்கிறேனே."

"இருக்கலாம். நான் அவ்விடத்தில் இருந்தது வெகுகாலத்திற்குமுன்பு; இருபது வருஷகாலம் ஆகிவிட்டது."

ஜெர்மன் ஜெனரலுக்கு அதைப்பற்றி அதிகமாகப் பேச விருப்பமில்லை. அவன் மனம் உள்ளூறக் குமுறிக்கொண்டிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் தந்தை நாட்டைக் கைக்கொண்டுவிட்டது அவனுக்குப் பொறுக்கவில்லை. தங்கள் நகரத்தை ஆக்ரமித்துக் கைக்கொண்ட பிரெஞ்சு ஸேனாதிபதியைத் தான் வரவேற்

பதற்கு வந்துள்ள நிலையைக் கண்டு வருந்தினன். எவ்விதமாயினும் போர்வீரன் உள்ளம் அன்றோ?

"நீங்கள் கூடலூரில் இருந்தபொழுது காயம்பட்ட பிரெஞ்சு ஸார்ஜண்டு ஒருவனைக் காப்பாற்றினீர்களே, ஞாபகம் இருக்கிறதா?"

ஜெனரலுக்கு ஒன்றும் ஞாபகம் இல்லை.

2

இருபது வருஷங்களுக்கு முன்புதான் அது நிகழ்ந்தது; 1783-ஆம் வருஷம்; அதே ஜூன் மாதம். அக்காலத்திலே ஆங்கிலக் கும்பினியாருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் தமிழ் நாட்டில் பெரும் போர் நிகழ்ந்துவந்தது. கும்பினியார் கர்நாடக நவாபான முகம்மது அலியின் ஆதிக்கியத்தை நிலைநிறுத்த அவருக்கு உதவிசெய்வதாகப் பெயர். பிரெஞ்சுக்காரர்களோ அக்காலத்தில் மைசூரின் தளவாயான திப்பு ஸுல்தானுக்கு உதவிசெய்வதாகக் கூறி வந்தார்கள். உண்மையில் அவ்விருவரும் தங்கள் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளவும் பணம் சேர்க்கவும் நாட்டைக் கைப்பற்றவும் நிகழ்த்திய போர்களே அவை.

அவர்கள் இவ்விதம் சண்டைபோடுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதற்கு ஐந்துவருஷங்களுக்கு முன்பு, கி. பி. 1778-ஆம் ஆண்டில், ஐரோப்பாவில் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் யுத்தம் ஏற்பட்டுவிட்டது. அதன்பயனாக அவ்விருவர்களுக்கும் இடையே, உலகத்தில் எந்தப் பாகத்தில் இருந்தபோதிலும், விரோதமும் போரும் மூண்டன.

இந்தச் சண்டை நம்நாட்டுச் சரித்திரத்தில் 'இரண்டாவது மைசூர்யுத்தம்' என்று பெயர்பெறும்.

பிரெஞ்சுக்காரர்கள் கூடலூரைக் கைக்கொண்டு அங்கே ஒரு கோட்டை கட்டியிருந்தனர். அதற்குப் பக்கத்தில் தேவனாம்பட்டணத்தில் இருந்த ஆங்கிலேயர் கோட்டை பாழடைந்துவிட்டது. ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்களை முறியடித்துக் கூடலூர்க் கோட்டையைப் பிடித்துக்கொள்வதற்காக அதனை முற்றுகை இட்டிருந்தனர்.

ஆங்கிலேயப் படையை ஜெனரல் ஸ்டூவர்ட் நடத்திவந்தார். பிரெஞ்சுப் படையைப் புஸ்ஸி (M. Bussy) நடத்திவந்தார். இருவர்பக்கத்திலும் கடற் படையும் இருந்தது. மைசூரார் பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவியாக இருந்தனர்.

கோட்டைக்கு வெளிப்புறத்தில் 25-ஆம் தேதி கடும்போர் நிகழ்ந்தது. பிரெஞ்சுக்காரர்கள் பொழுதுவிடிவதற்கு முன்பாக

இருட்டிலேயே கோட்டையை விட்டு வெளிக்கிளம்பிக் கும்பினி யாரைத் தாக்கினர். அந்த இருட்டில், பிரெஞ்சுக்காரர்களுக்கும் கும்பினிப்படைக்கும் வித்தியாசம் தெரியவில்லை. உயர்ந்த முறையில் நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அந்த எதிர்ப்பு நன்கு நிர்வகிக்கப்படாமையால் பிரெஞ்சுக்காரர்களுக்குப் பெருஞ் சேதம் ஏற்பட்டது; தோல்வி உண்டாயிற்று. அவர்களிற் பலர் சிறைப்பட்டனர். 450 பேர்கள் இறந்தனர் என்றும், 150 பேர் சிறைப்பட்டனர் என்றும் மதிப்பு இடப்பட்டது.

அவ்விதம் காயம்பட்டுப் பிடிபட்டவர்களுள் சிறுவன் ஒருவனும் இருந்தான். அவன் பிரெஞ்சுப் படையில் ஒரு ஸார்ஜண்டு. அவனுக்கு அப்பொழுது வயது இருபது; பார்வைக்கு நல்ல அழகுடையவன். குறுகுறுவென்று களை சொட்டும் முகம். பேசுவதிலும் நல்ல சமர்த்தன். பிறரை வசிகரித்துத் தன்வசப்படுத்தும் சக்தி அவனிடம் இருந்தது.

கர்னல் வங்கென்ஹைம் அவ்விடத்தில் ஆங்கிலேயர் பக்கத்தில் போர் செய்துவந்த ஹானெவர் படைத்தலைவனாக இருந்து வந்தான். அவன், பிடிபட்ட பிரெஞ்சுச் சிறுவனைக்கண்டு முதலில் இளமையைக் குறித்து இரக்கம் கொண்டான். அவன் அடைந்த காயத்தை ஆற்ற விரும்பினான். தன்னுடைய ஆட்களைக்கொண்டு அவனைத் தன் கூடாரத்துக்கு அழைத்துச்சென்று நன்கு கவனிக்க ஏற்பாடு செய்தான்.

கர்னலுக்கு அந்தச் சிறுவனைக் கண்டதுமுதலே அவன்மீது ஒருவிதமான பாசம் ஏற்பட்டுவிட்டது. அவனுடைய அழகும் வாக்குவன்மையும் கர்னல் மனத்தைக் கவர்ந்தன. கர்னல் அச்சிறுவனுக்கு எவ்வித உதவியையும் செய்யத் தயாரானான்.

இளைஞனும் கர்னலுடனேயே தங்கித் தன் உடம்பைக் குணப்படுத்திக்கொண்டான். ஆனால் எவ்வளவுநாள் தங்கி இருக்க முடியும்?

ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதானம் ஏற்பட்டுவிட்டது. அதனால் இங்கேயும் இருவரும் சண்டைபோடுவதை நிறுத்திச் சமாதானமாகப் போய்விட்டார்கள். சிறைப்பட்ட போர்வீரர்களும் விடுதலை செய்யப்பட்டனர். பிரெஞ்சு ஸார்ஜண்டும் அங்ஙனமே விடுதலை அடைந்து மறைந்தான்.

கர்னலால் அப்பொழுது அவனைப் பற்றிய விவரங்களை அதிகமாக அறியமுடியவில்லை. அப்பால் அச்சிறுவனைக் கர்னலால் மறக்க முடியவில்லை. அவன் மனம் சிறுவனைக் காணப் பலமுறை விரும்பியது. எனினும் அவனைப்பற்றிய தகவல்கள் அதிகம் தெரியாமையால், வங்கென்ஹைமினால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

3

அப்பொழுது கர்னலாக இருந்த வங்கென்ஹைம் பின்னால் உயர்ந்த பதவிகளைப் பெற்று ஜெனரல் ஆகி உத்தியோகத்தினின்றும் விலகி ஓய்வு கொண்டிருந்தான். பிற்காலத்தில் அந்தச் சிறுவனைப் பற்றிய செய்தி ஒன்றும் கிடைக்காதபடியால் அவன் இறந்துவிட்டதாகவே ஜெர்மன் ஜெனரல் கருதிவிட்டான்போலும்; வெகுகாலம் ஆகிவிட்டபடியால் அந்தச் சம்பவங்களை மறந்தும்விட்டான்.

சிறிது யோசித்துப் பார்த்தபிறகு ஞாபகம் வந்தது. ஜெனரல் உள்ளத்திலும் ஒரு புதிய உணர்ச்சி தோன்றியது.

"ஆம், ஆம். ஞாபகம் இருக்கிறது. அந்தச் சிறுவனை மறக்க முடியுமோ? நல்ல சாமர்த்தியசாலி. அவனைப்பற்றிய செய்தி ஒன்றுமே பின்னால் தெரியவில்லை. அவனுடைய க்ஷேமத்தை அறியப் பெரிதும் ஆவல் உள்ளவனாகவே இருக்கிறேன்."

"என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு? நான்தான் அந்தச் சிறுவன்."

இது ஜெர்மன் ஜெனரலைத் தூக்கிவாரிப்போட்டது. அவ்விதம் இருக்கும் என்று வங்கென்ஹைம் எதிர்பார்க்கவில்லை.

பிரெஞ்சுத் தளகர்த்தனும் தனக்கு வங்கென்ஹைம் சமயத்தில் செய்த உதவியை மறந்துவிடவில்லை. ஹானொவரில் கூடியிருந்த பிரமுகர்கள் மத்தியில் இந்த நிகழ்ச்சியை விவரித்து உரைத்து ஜெனரலுக்கு நன்றிசெலுத்தினான். பகிரங்கமாக அதனைக் கூறுவதற்கு அவன் வெட்கப்படவில்லை. அதைப் பெருமையுடனே தான் கூறினான்.

4

அந்தப் பிரெஞ்சுத் தளகர்த்தன் பெர்நதாத் (Jean Bernadotte) என்ற பெயர் உள்ளவன். கி.பி. 1763-ஆம் வருஷத்தில் பவ் (Pau) என்னுமிடத்தில் ஒரு சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவன். சாதாரணப் போர்வீரனாகப் பிரெஞ்சுப் படையில் சேர்ந்து பல இடங்களில் சண்டைசெய்து வெற்றிபெற்றுத் தன் சாமர்த்தியத்தால் கொஞ்சங் கொஞ்சமாக உயர்ந்து பிரான்ஸ் தேசத்து ஸேனாநாயகனாக (Marshal) விளங்கினான்.

அக்காலத்தில் ஐரோப்பாவையே கலக்கிவந்த நெப்போலியன் அவனைப் பாண்டி கார்வோ (Ponte Corvo) என்னுமிடத்தின் இளவரசனாகவும் உயர்த்தினான்.

நெப்போலியன் சகோதரன் ஜோஸப் போனபார்ட்டேயும் பெர்நதாத்தும் சகோதரிகளை மணந்துகொண்டிருந்தனர். அதனல் பெர்நதாத் பிரெஞ்சுச் சக்கரவர்த்தியினிடம் நெருங்கிய உறவு கொண்டிருந்தான். எனினும் அவன் எப்பொழுதும் நெப்போலியனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க விரும்பவில்லை. பல சமயங்களில் பிரெஞ்சுச் சக்கரவர்த்தியை எதிர்த்து நின்றிருக்கிருன்.

அக்காலத்திலே ஐரோப்பிய வல்லரசுகள் எல்லாம் நெப்போலியன் தயவையே எதிர்பார்த்து நின்றன. ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்திருந்த பின்லாந்தை ரஷியா கைக்கொண்டுவிட்டது. அதனை எதிர்த்து இழந்தநாட்டைத் திரும்பவும் பெறவிரும்பினர் ஸ்வீடன் தேசத்து மக்கள். ஆனல் அரசனுக இருந்த கஸ்டவஸ் (Gustavas IV) போர்புரிய விரும்பவில்லை. அதனல் குடிமக்கள் கி.பி. 1809-ஆம் ஆண்டில் அவனை நீக்கி அவன் சிற்றப்பனை அரசனுக்கினர்.

புதிதாக வந்த அரசன் வயதானவன். ஆதலின் இளவரசனையும் தேர்ந்து முன்னதாகவே நிச்சயித்துவிட விரும்பினர் மக்கள். டென்மார்க் தேசத்தரசன் சூழ்ச்சியால் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்டியன் அகஸ்ட் மறுவருஷத்திலேயே இறந்துவிட்டான். விரோதிகள் அவனைக் கொன்றுவிட்டதாகவே சிலர் கருதினர்.

இளவரசனுக யார் இருப்பது என்ற பழைய குழப்பம் மறுபடியும் உண்டாயிற்று. அந்தப் பதவிக்கு நால்வர் போட்டியிட்டனர்; டென்மார்க், ரஷியா ஆகிய தேசத்தார் தங்கள் தங்கள் மனிதனைத் தேர்ந்தெடுக்க விரும்பினர். ஆனல் கடைசியில் ஒரு சம்பந்தமுமில்லாத பெர்நதாத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அதுவும் குருட்டு அதிர்ஷ்டமே என்று கூறுவர் சிலர். அது நேர்ந்தது பின்வருமாறு:

இளவரசன் இறந்துபோனவுடன் அச்செய்தியை அறிவித்து யாரை இளவரசனுக நியமிக்கலாம் என்பதைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கொடுக்கவேண்டும் என்று ஸ்வீடன் தேசத்து அரசன் நெப்போலியனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதை எடுத்து வந்தவன் ஸ்வீடன் தேசத்துப் படையைச் சேர்ந்த லெப்டினென்ட் ஒருவன் ஆவன். அவன் நெப்போலியனைப் பார்த்துச் செய்தியைத் தெரிவித்துவிட்டுத் திரும்புங்கால் பெர்நதாத்தைக் கண்டான்.

"ஸ்வீடன் தேசத்து இளவரசுப் பதவி காலியாக இருக்கிறது; நீங்கள் ஏன் அந்தப் பதவிக்கு வரக்கூடாது?" என்று கேட்டான்.

அவன் விளையாட்டாகக் கேட்டானே, வினையாகக் கேட்டானே தெரியாது. ஆனல் அவன் வைத்த தீயானது பற்றிக் கொண்டது. ஸ்வீடன் தேசத்து அரசை அடைவதற்கு உரிய

தகுதிகள் எல்லாம் பெர்நதாத்துக்கு இருந்தன. மக்கள் முக்கியமாக விரும்பியது பின்லாந்தைத் திரும்பவும் தாங்கள் பெறவேண்டும் என்பதே. அதற்குப் போர்வீரன்தான் தேவை.

1810-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 21-ஆம் தேதி ஸ்வீடன் தேசத்தார் பெர்நதாத்தைத் தங்கள் இளவரசனைகத் தேர்ந்தெடுத்தனர். அவன் உடனே பிரான்ஸை விட்டு ஸ்வீடன் தேசத்தை அடைந்தான். ஆனால் பின்லாந்தைத் திரும்பவும் பெறமுடியவில்லை; அதற்குப் பதிலாக அவன் டென்மார்க்கினிடமிருந்து நார்வே தேசத்தைப் பிரித்து ஸ்வீடனுடன் சேர்த்துக்கொண்டான்.

அம்மட்டிலோ! நெப்போலியன் தோல்வியுற்றுப் பிடிபட்ட பிறகு, பெர்நதாத் பிரெஞ்சு ஸிம்மாஸனத்தையும் அடைய முயன்றான். ஆயினும் அது கை கூடவில்லை.

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் நெப்போலியன் நிறுவிய அரசாங்கங்கள் பல. அவனால் மகுடம் சூட்டப் பெற்ற மன்னர்கள் பலர். ஆனால் அவர்கள் அனைவரும் அவனுடன் ஒழிந்தனர். அந்த அரசாங்கங்களும் எப்படி ஏற்பட்டனவோ அப்படியே அழிந்துபோயின.

கடைசியாக எஞ்சிநிற்பது பெர்நதாத் குடும்பம் ஒன்றுதான். பெர்நதாத் கி.பி. 1844-ஆம் ஆண்டில் தன்னுடைய எண்பத்தோராவது வயதில் பிள்ளை பேரன் முதலியோர் அடங்கிய ஒரு பெரிய குடும்பத்தைவிட்டுப் பிரிந்து உயிர் துறந்தான். ஸ்வீடன் தேசத்து மக்களும் அவனுடைய பிரிவுக்குப் பெரிதும் வருந்தினர். இப்பொழுது ஸ்வீடன் தேசத்தை ஆண்டுவரும் மன்னர் அவனுடைய கொட்பேரர் ஆவர்.

: கலையும் யோகமும் :

* ஸ்ரீ அன்னை *

[இது ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்து ஸ்ரீ அன்னையுடன் நடந்த சம்பாஷணைகளில் ஒன்று. அனுமதியுடன் தமிழ்ப் படுத்தப்பட்டது.—பி. கோதண்டராமன்.]

"ஒரு யோகி கலைஞனாகவும், ஒரு கலைஞன் யோகியாகவும் ஆக முடியுமா? கலைக்கும் யோகத்துக்கும் உள்ள சம்பந்தம் என்ன?"

இவை இரண்டும் நீ நினைப்பதைப்போல ஒன்றுக்கொன்று அவ்வளவு நேர்விரோதமானவை அல்ல. ஒரு யோகி கலைஞனாவதற்கோ, ஒரு கலைஞன் யோகியாவதற்கோ யாதொரு தடையும் இல்லை. ஆனால் நீ யோகத்தில் ஈடுபடும்போது, மற்றெல்லா விஷயங்களிலும்போலவே கலையிலும் உனக்குள்ள மதிப்பு பெரிய மாறுதலடைகிறது; கலையை முற்றிலும் வேறானதொரு நோக்குடன் நீ கருதுகிறாய். இனியும் அது உன் கவனம் முழுவதையும் கவர்தற்குரிய மிக மேன்மையான விஷயமாகவும் தனக்குத்தானே ஒரு லட்சியம்போலவும் இருப்பதில்லை. கலை ஒரு கருவி, லக்ஷ்யமல்ல; அது உட்பொருளைப் புறத்தே விளக்குவதற்குரிய ஒரு சாதனம். மேலும், கலைஞன் உலகம் முழுவதுமே தான் செய்வதொன்றையே திருப்பித்திருப்பிப் பார்த்து வருகின்றதென்றோ, இதுவரையில் செய்யப்பட்டவைகளுள் தனது வேலையே மிகவும் முக்கியமானதென்றோ நினைத்துக்கொள்ளுவதில்லை. இனி அவனது தனியான சொரூபம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அவன் ஒரு கர்த்தா (agent) அல்லது வாய்க்காலாகவே ஆகிறான். அவனது கலையானது அவன் கடவுளுடன் வைத்துக்கொண்டுள்ள உறவை வெளிப்படுத்துவதற்கு ஒரு சாதனமாகிறது. அவன் தனக்கு இயற்கையாயுள்ள வேறு சக்திகளை எவ்விதம் இக்காரியத்திற்காக உபயோகித்திருக்கக்கூடுமோ, அவ்விதமாகவே இதையும் உபயோகிக்கிறான்.

கலையின் உன்னதமான தொழில்

"யோகத்தை மேற்கொண்டபின் கலைஞனுக்குச் சிருஷ்டி செய்யும் தூண்டுதல் ஏதேனும் ஏற்படுகின்றதா?"

அவ்விதமான தூண்டுதல் அவனுக்கு ஏன் ஏற்படக்கூடாது? வேறு எந்த வழியிலும் போலவே கலையின் மூலமாகவும் அவன் கடவுளுடன் தனக்குள்ள உறவை வெளிப்படுத்தலாம். கலையானது உண்மையாக ஓர் உன்னதமான கலையாக ஆகவேண்டுமாயின், அது இப்புவிக்குக் கொண்டுவரப்படும் ஒரு தெய்வ உலகின் வெளிப்பாடாக இருக்கவேண்டும். எல்லாக் கலைஞர்களுக்கும், தாங்கள் ஓர் உயர்ந்த லோகத்திற்கும் இப்பௌதிக வாழ்க்கைக்கும் இடையேயுள்ள மத்திமர்கள் (intermediaries) என்னும் ஒருவித எண்ணம் வருவதுண்டு. இந்நோக்கிற் பார்த்தால் கலை யோகத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டதன்று. கலைஞர்களுக்கு அநேகமாக ஒரு தெளிவற்ற உணர்ச்சி

தான் உண்டு. அவர்களுக்கு ஞானம் இல்லை. ஆயினும் ஞானம் பெற்ற சிலரை நான் அறிந்திருக்கிறேன்; அவர்கள் தாங்கள் செய்வது இன்ன தென்பதை அறிந்தே உணர்வுடன் வேலை செய்தனர். தங்களது சிருஷ்டியில் தங்களது தனிச் சொரூபமே ஒரு முக்கியமான அம்சமெனக் கருதி அதை அவர்கள் முன்னே வைத்துக்கொள்ளவில்லை; தங்களது வேலையைக் கடவுளுக்குச் செலுத்தும் ஒரு காணிக்கையாகக் கருதி, அதன் மூலமாகக் கடவுளுடன் தாங்கள் கொண்டுள்ள உறவை வெளிப்படுத்தவே முயன்றனர்.

இடைக்காலத்தில் இதுவே கலையின் செயலெனப் பகிரங்கமாக எல்லோரும் ஒப்புக்கொண்டனர். இடைக்கால ஐரோப்பாவின் பழைய ஓவியர்களுக்கும் கோயிற் சிற்பிகளுக்கும் கலையைப்பற்றிய கருத்து இதுவாகவே இருந்தது. பாரத நாட்டில் கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் இவையெல்லாம் இம்மூலக்கருத்தினின்றே உதித்து இக்குறியைக்கொண்டே இலங்கி வந்தன. மீராபாயின் பாடல்களும், தியாகராஜரின் இசையும், பாரத தேவியின் பக்தர்களாலும் முனிவர்களாலும் ரிஷிகளாலும் ஆக்கப்பெற்ற கவிதைகளும் உலகின் மிக உன்னதமான கலைச் செல்வங்களுடன் சேர்ந்தவை என மதிக்கப்படுகின்றன.

யோகம் கலை ஆக்கத்திற்கு ஆதரவளிப்பது

"கலைஞன் யோகம் பயிலுவதனால் அவனது கலைத்திறன் விருத்தி அடையுமா?"

கலைப்பயிற்சியின் மூலதத்துவமும் யோகப்பயிற்சியின் மூலதத்துவமும் ஒன்றே. இவை இரண்டும் உணர்வை (consciousness) மேன்மேலும் விரிவுபடுத்துவதையே கருத்தாகக் கொண்டுள்ளன. இவை இரண்டிலுமே, சாதாரண விழிக்கும் உணர்ச்சிக்கும் அப்பாலுள்ள ஒன்றைக் காணவும் உணரவும், உள்முகமாகச் சென்று அங்குள்ள ஆழ்ந்த பொருள்களை வெளியே கொண்டுவரவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஓவியர்கள் தங்களது விழியின் உணர்வு விரிவடைவதன்பொருட்டு அநேகமாக யோகத்தைப்போன்றதொரு பயிற்சிமுறையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் உண்மையான கலைஞர்களாக இருந்தும், அப்பாலுள்ளவைகளை நோக்கியும், அக உலகைப் புறத்திலே விளக்கத் தங்களது கலைத்திறனை உபயோகித்தும் வருவார்களானால், இந்த மனவொருமைப்பாட்டினால் அவர்களது உணர்வு விரிவடைகிறது. இவ்வுணர்வின் விரிவு யோகத்தினால் அடையப்பெறும் உணர்வைத் தவிர வேறு என்ன? கலைச் சிருஷ்டிக்கு யோக உணர்வு ஏன் ஓர் உதவியாக இருத்தலாகாது?

வெகு சொற்பப் பயிற்சியும் திறமையும் உடையவராயினும், யோகத்தின் மூலமாக எழுத்திலும் ஓவியம் வரைவதிலும் நுண்மையான திறமையை அடைந்துள்ள சிலரை நான் அறிந்திருக்கிறேன். என்னால் இரண்டு உதாரணங்கள் காட்டமுடியும்: கொஞ்சமேனும் கல்வியறிவு படைத்திராத ஒரு சிறுமியின் உதாரணம் ஒன்று. அவள் ஒரு நடிகை; சற்றேறக்குறைய நன்றாகவே நடனம் செய்வாள். அவள் யோகத்தை மேற்கொண்டபின் தன் நண்பர்களுக்கு முன்பு மட்டுமே நடித்தாள். ஆனால் அவளது நாட்டியம் முன்னே காணப்படாத ஓர் அழகையும் ஆழ்ந்த மெய்ப்பாட்டையும் (depth of expression) அடைந்திருந்தது. அவள் கல்வியற்றவளாயிருந்தும் அற்புதமாக எழுத ஆரம்பித்தாள்; தனது உள்விழியில் கண்டவற்றை மிகவும் அழகான மொழியில் வெளியிட்டாள். ஆனால் யோகத்தில் ஏற்றமும் தாழ்வும் உண்டல்லவா? அவள் நல்ல நிலைமையிலிருந்தபோது அழகுபெற எழுதினாள். அந்நிலைமையிலிருந்து வீழ்ந்து சாதாரண உணர்வு நிலையை

அடைந்தபோது, அவளது சொந்த அறிவு பழையபடியே ஒளி மங்கியதாயும் மதியற்றதாயும் சிருஷ்டிக்கும் சக்தி கொஞ்சமும் இல்லாததாயும் ஆகி விட்டது.

கலையைச் சிறிதளவு பயின்ற ஒரு வாலிபனின் உதாரணம் மற்றொன்று. ஒரு தானைபதியின் மகனான அச்சிறுவன் தானைபத்தியத்திற்காகப் பயிற்சி பெற்றிருந்தான். ஆனால் அவன் சுகவாழ்க்கையில் உழன்று வந்ததால் கலைப் பயிற்சியில் ஆழ்ந்து மனத்தைச் செலுத்தவில்லை. ஆயினும் அவன் யோகத்தை மேற்கொண்ட உடனேயே ஆவேசம் பெற்ற சித்திரங்கள் வரைய ஆரம்பித்தான். இச்சித்திரங்கள் ஆழ்ந்த பொருளைச் சூசகமாகக் குறிக்கும் தன்மையை உடையனவாயும் உண்முக ஞானத்தைப் புறத்தே காட்டுவன வாயும் இருந்தன. கடைசியாக அவன் ஒரு பெரிய கலைஞன் ஆனான்.

கலையும் ஒழுக்கமும்

"கலைஞர் பொதுவாகத் தம் நடத்தையில் ஒழுங்கீனமாயும் குணத்தில் நெறிவழுவியும் இருப்பது ஏன்?"

அவர்கள் பெரும்பாலும் பிராணமயமான உணர்வு நிலையில் (vital plane) இருப்பதுதான் இதற்குக் காரணம். உணர்ச்சி மிகுந்த அவர்களது பிராண ஜீவன் அந்நிலையிலுள்ள சக்திகளுக்கு வசப்படக்கூடியதா யிருக் கிறது. மேலும் அது தன்னால் எவ்விதத்திலாயினும் கட்டுப்படுத்தமுடியாத எல்லா விதமான எண்ணங்களையும், உந்தும் பிரேரணைகளையும் அந்நிலையி னின்றும் பெறுகின்றது. அவர்கள் சாதாரணமாகத் தாராள மனப் பான்மையுடையவர்; சாமானிய மக்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் அற்ப வழக்கங்களில் அவர்கள் நம்பிக்கை வைப்பதில்லை; சம்பிரதாயமான ஆசார விதிகளுக்குக் கட்டுப்பட்டுள்ளதாக நினைப்பதில்லை; இவைகளிருந்த இடத்தில் புதிதாக நிலை நிறுத்தப்படவேண்டிய உயர்ந்த தருமத்தைத் தங்களுக்குள்ளேயே இன்னும் அவர்கள் கண்டு பிடிக்கவில்லை. தங்களது விருப்பத்தின் விருத்திகளைத் தடுக்கக்கூடியது யாதொன்றும் இல்லாததனால், அவர்கள் அளவுக்கு மிஞ்சிய சுயேச்சையும் வழுவிய ஒழுக்கமும் கொண்ட தொரு வாழ்க்கையை ஸகஜமாக நடத்துகின்றனர்.

ஆனால் எல்லோருமே இவ்விதமாக இருக்கின்றனர் என்று சொல்லு வதற்கில்லை. நான் கலைஞர்களின் மத்தியில் பத்து ஆண்டுகள் வசித்திருக் கிறேன். அவர்களில் அநேகர் நடுத்தர வகுப்பினரா யிருந்தனர்; அவர்கள் மணம் புரிந்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் நிலைத்து நல்ல தகப்பன்மார்களாகவும் நல்ல கணவர்களாகவும் இருந்தனர். இது செய்ய லாம், இது செய்யக்கூடாது என விதிக்கும் மிகவும் கண்டிப்பான அறநெறி களுக்கு ஒப்ப ஒழுகினர்.

கலைஞன் பெறும் ஆவேசம்

கலைஞனை உற்பத்தி செய்யுமாறு உந்தும் பிரேரணையை யோகம் ஒரு விதத்தில் தடுக்கக்கூடும். அவனது கலையின் உற்பத்திஸ்தானம் பிராண லோகத்தில் (vital world) இருக்குமாயின் அவன் யோகியானவுடன் தனது ஆவேசத்தை இனியும் அதனின்றும் பெறாது இழந்துவிடுவான்; ஏனெனில் அதுசமயம் பிராணலோகமானது தனது உண்மையான ஒளியுடன் அவனுக் குத் தோன்றும்; தனது உண்மையான மதிப்பையும் அவனுக்குக் காட்டும்; அம்மதிப்புச் சார்புடையது. தாங்களும் கலைஞர்கள் எனக் கூறிக்கொள்ளு பவர்களிற் பலர் தங்களது ஆவேசத்தைப் பிராணலோகத்தினிட மிருந்தே

பெறுகின்றனர்; அந்த ஆவேசம் தன்னுடன் யாதோர் உன்னதமான பொருளையும் கொண்டுவருவதில்லை.

ஆனால் அதைவிட மிக உயர்ந்த லோகத்திலிருந்து தனது ஆவேசத்தை நாடும் ஓர் உண்மையான கலைஞன் யோகத்தை நோக்கித் திரும்புகையில், தான் பெறும் ஆவேசம் மிகவும் நேராகவும் சக்தி வாய்ந்ததாகவும், தனது புற வெளிப்பாடு (expression) மிகவும் தெளிவாகவும் ஆழ்ந்ததாகவும் இருப்பதைக் காண்பான். உண்மையான மதிப்புடையவரிடையே யோகசக்தியானது மதிப்பை அதிகரிக்கச் செய்கின்றது; ஆனால் கலையின் வேஷம் பூணும் பொய்யர்களிடையே அது அவர்களது வேஷத்தைக் கலைத்துவிடுவதுடன் அதன் வசீகரத்தையும் போக்கடித்துவிடுகிறது.

தான் செய்வதைப் பிரபஞ்ச வெளிப்பாட்டுடனும் (universal manifestation), பிரபஞ்ச விருத்தியுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது எவ்வளவு சார்புடையதாக (relative) இருக்கிறது என்பதுதான் யோகத்தில் மனப்பூர்வமாக ஈடுபடும் ஒருவனுக்கு முதன்முதலாகத் தெற்றென விளங்கும் சாமானிய உண்மையாகும். ஆனால் ஒரு கலைஞனே சாதாரணமாகத் தற்பெருமை கொண்டவன். இம்மானிட உலகில் தான் ஏதோ ஒரு பிரதான புருஷனென்றும் ஒருவிதக் குட்டித்தெய்வம் என்றும் அவன் நினைத்துக் கொள்ளுகிறான். தாங்கள் செய்வது அதிமுக்கியமானதென நம்பியிராவிடின் ஒன்றையுமே செய்ய முடியாதெனப் பல கலைஞர்கள் கூறுகின்றனர். ஆயினும், மேலுலகினின்று ஆவேசம் பெற்றிருந்துங்கூட, தாங்கள் செய்தது அவ்வளவு அளவு கடந்த முக்கியமானதெனக் கருதிவிடாத சிலரை நான் அறிந்திருக்கிறேன். இவ்வுள்ளப்பாங்கே உண்மையான கலை நோக்கை எட்டிப் பிடிக்கிறது. கலையின் மூலமாக ஒருவன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள உண்மையாகவே நேரிடின், அதற்குக் காரணம் கடவுள் அவன் மூலமாக வெளிப்படுவதற்காகவே அவ்வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதைத் தவிர வேறென்ன? அப்படிப்பட்டவனுடைய கலை யோகத்தினால் மேன்மையுறுமே யொழிய எவ்விதத்தாலும் நஷ்டமுறாது.

ஆனால் முழுப் பிரச்னையும், 'கலைஞன் கலைஞனாவது தனது சுய இச்சையினாலா, கடவுளது திருவுள்ளத்தினாலா?' என்பதில்தான் உளது.

யோகிகளாக இருந்த பெரும் புலவர்கள்

"ஒருவன் யோகம் செய்தால் ஷேக்ஸ்பியர் அல்லது ஷெல்லி அடைந்ததைப் போன்ற உயர்வை அடையமுடியுமா? அவ்வித உதாரணம் ஒன்றும் இல்லையே."

ஏன் இல்லை? மகாபாரதமும் ராமாயணமும் ஷேக்ஸ்பியரோ அல்லது வேறெந்தக் கவியோ சிருஷ்டித்த எதற்கும் மட்டமானவை யல்ல. அவை ரிஷிகளாயிருந்து யோகம் புரிந்தவர்களால் ஆக்கப்பெற்றவை யென்று கூறுகிறார்கள். உபநிடதங்களைப்போன்று ஏககாலத்தில் மிகச் சிறந்த இலக்கியங்களாகவும் அத்தியாத்ம நூல்களாகவும் விளங்குபவைகளுள் ஒன்றென மதிக்கப்படும் கீதையானது யோகப்பயிற்சியற்ற ஒருவனால் எழுதப்படவில்லையே! இந்தியாவிலோ பாரசீகத்திலோ அல்லது வேறெங்கோ முனிவர்கள், சூபிக்கள், பக்தர்கள் என விளங்கும் பெரியோர்கள் புனைந்த புகழ்பெற்ற கவிதைகள் மில்டனுக்கும் ஷெல்லிக்கும் எவ்விதத்தில் தாழ்ந்தவையாகும்?

மேலும், யோகிகள் எல்லோரையும், அவர்கள் ஆக்கியுள்ள நூல்கள் எல்லாவற்றையும் நீ அறிவாயா? கவிகள், சிருஷ்டிகர்த்தர்களுக்குள்ளே

இன்னவரே உணர்வோடு கடவுளுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தனர், இன்னவர் வைத்துக்கொண்டிருக்கவில்லை என நீ வரையறுத்துக் கூற முடியுமா? வழக்கு முறையில் யோகியர் எனக் கருதப்படாத சிலர் இருக்கின்றனர்; அவர்கள் குருபீடத்தில் இல்லை; சீடர்களும் அவர்களுக்கு இலர்; அவர்கள் யாது செய்கின்றனர் என்பதை உலகம் அறியாது; அவர்கள் புகழை விரும்புவதும் இல்லை; மக்களின் கவனத்தைத் தங்கள்பால் ஆகர்ஷிப்பதுமில்லை. ஆனல் அவர்கள் உயர்ந்த உணர்வும், கடவுளது சக்தியுடன் தொடர்பும் உடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் சிருஷ்டிக்கும்போது அச் சிருஷ்டிகள் அவ்வுயர்நிலையிலிருந்தே வருகின்றன. பாரத நாட்டின் மிகச் சிறந்த ஓவியங்களும், சிற்பங்களும், கட்டிட வேலைப்பாடுகளும் அத்தியாத்ம தியானத்திலும் பயிற்சியிலுமே தங்கள் வாழ்நாட்களைக் கழித்த பௌத்தத் துறவிகளால் ஆக்கப்பட்டவையாகும். அவர்கள் மிகவும் மேன்மையான கலை நுட்பங்கள் கொண்ட வேலைகளைச் செய்தனராயினும், பின்வரும் தலைமுறைகளுக்குத் தங்கள் பெயரை அறிவிக்கவேண்டுமென்னும் கருத்துக் கொள்ளவில்லை.

யோகிகள் கலையின் மூலமாகத் தங்களை வெளிப்படுத்திக்கொள்ளுவதே தங்களது வாழ்க்கையின் முக்கியமான அம்சமெனக் கருதவில்லை. வெறும் கலைஞனுகமட்டும் காலத்தையும் ஆற்றலையும் அவர்கள் செலவு செய்யவில்லை. அவர்களது கலைக்காக அவர்களது பெயர் முன்னுக்கு வராமல் இருப்பதற்கு இவையே முக்கிய காரணங்களாகும். மேலும் அவர்கள் செய்வதும் பொது மக்களின் கவனத்திற்கு வருவதில்லை. பெரிய காரியங்களைச் செய்தும் அவைகளை உலகிற்குப் பறையறைவிக்காமலே இருந்துவிட்டவர்கள் எத்தனை பேர்!

கலை - வாழ்க்கையின் ஓர் அம்சம்

"யோகியர் ஷேக்ஸ்பியரைவிட மிகச் சிறந்த நாடகங்களை எழுதியிருக்கின்றனரா?"

நாடகம் கலைகள் எல்லாவற்றிலும் உயர்ந்ததல்ல. ஓர் எழுத்தாளர் நாடகமே எக்கலைகளிலும் சிறந்ததென்றும், வாழ்க்கையைவிடக் கலையே மேலானதென்றும் என்னிடம் சொன்னர். அது விவாதத்திற்கு இடமான ஓர் அபிப்பிராயம். கலைச் சிருஷ்டியானது, தன்னில் தானே, தனக்காகவே, உலகிலுள்ள மற்றவைகளினின்று தனித்து நிற்பது எனக் கருதுவதில்தான் கலைஞர்களின் தவறு இருக்கிறது. இக்கலைஞர்களின் எண்ணப்படி கலையானது வாழ்க்கையின் பரந்த களத்தில் ஒரு காளான் போலவும், வாழ்க்கைக்குப் புறம்பாகவும், அதனுடன் சம்பந்தமில்லாமலும், ஏதோ தற்செயலாக ஏற்படுவதுபோலவும் உள்ளது; அது வாழ்க்கையின் ஆழ்ந்த உறுதிப் பொருள்களை அடைவதுமில்லை, தொடுவதுமில்லை; அது வாழ்க்கையோடு இயற்கையாக ஒட்டியதாயும் அதனின்றும் தனித்துப் பிரிக்கமுடியாத அம்சமாயும் ஆவதில்லை. கலையானது அழகை வெளிப்படுத்துவதன் பொருட்டே ஏற்பட்டது என்பது உண்மையே; ஆனல் அது பிரபஞ்ச இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இருத்தல் அவசியம். மிகவும் பெருமையுற்ற சமுதாயங்களும் கலையும் பண்பும் மிகவும் படைத்த இனத்தினரும், கலையானது வாழ்க்கையின் ஓர் அம்சமென எப்போதும் கருதி, அது வாழ்க்கைக்குப் பயன்படுமாறு செய்து வந்திருக்கின்றனர். ஜப்பானில், அதன் மிகச் சிறந்த காலங்களில், கலை அவ்வண்ணமாகவே இருந்தது; கலை வரலாற்றிற் காணப்படும் மிகச் சிறந்த காலங்களிலெல்லாம் அவ்விதமாகவே இருந்தது. ஆயினும் கலைஞர்களில் அநேகர் புல்லுருவியைப்போல

வாழ்க்கையின் விளிம்பின்மீது ஊன்றி வாழ்கின்றனர். கலையானது வாழ்க்கையின் மூலமாக, வாழ்க்கையிலேயே கடவுளின் விளக்கமாகத் திகழவேண்டும் என்பதை அவர்கள் அறிவதில்லை போலும். எங்கும், எல்லாவற்றிலும், எல்லா உறவுகளிலும், எல்லாவற்றையும் தழுவும் வண்ணமுடன் (rhythm) விளங்கும் உண்மையை வெளிப்படும்படி செய்யவேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு விருத்தியும் அழகு இசைவு என்பவற்றின் மலர்ச்சியாக இருத்தல்வேண்டும். வெறும் திறமையோ மேதையோ கலையாகாது. வாழ்க்கையின் எல்லா இயக்கங்களிலும் வெளிப்படுத்தப்பட வேண்டிய உயிர் ததும்பும் இசைவும் அழகுமே கலையாகும். அழகு இசைவு என்பவற்றினுடைய மலர்ச்சியானது இறைவன் இவ்வுலகில் நிறைவுடன் தோன்றுவதற்குரிய ஓர் அம்சமாகும்; அதன் மிக உன்னதமான அம்சமெனவும் இதைக் கூறலாம்.

ஏனெனில், மனோதீத (supramental) நோக்கின்படி, இறைவனின் மற்றெந்த வெளிப்பாட்டையும்போலவே அழகும் இசைவும் முக்கியமானவையாகும். ஆனல் அவைகளை மற்றெல்லா உறவுகளிலிருந்தும் ஒதுக்கியோ, மொத்தத்திலிருந்து பிரித்தெடுத்தோ, தனித்து வைக்கக் கூடாது. முழு வாழ்க்கையின் வெளிப்பாட்டுடன் அவையும் ஒன்றுபட்டிருத்தல் வேண்டும்.

மக்கள், "ஓ, அவன் ஒரு கலைஞன்!" என இடித்துக் கூறுவது வழக்கமாயிருக்கிறது. கலைஞனை மற்ற மானிடர்களிடையே ஒரு மனிதனெனக் கருதாமல் தனித்து நிற்கும் ஒரு வகுப்பைச் சேர்ந்த ஓர் அபூர்வ சிருஷ்டியாகவும், அவனது கலையை உலகிலுள்ள பிற சாதாரண விஷயங்களுடன் கலந்துவிடாமல் தனிப்பட நிற்கும் ஓர் அபூர்வமான பொருளாகவும் கொள்ள வேண்டும் போலும்! "அழகு அழகுக்காகவே" என்னும் சித்தாந்தம் இப்பிழையைத்தான் ஓர் உண்மையைப்போல நமது மனத்தில் அழுத்தமாகப் பதியும்படி செய்ய முயலுகிறது. விருந்தினரை வரவேற்கும் அறையின் மத்தியில், அங்குள்ள சாமான்களுடனாவது சுற்றியுள்ள சுவர்களுடனாவது சற்றும் பொருந்தாத ஒரு சட்டம் போட்ட படத்தை, ஓர் அழகுடைய பொருள் என்ற ஒரே காரணத்திற்காக மாத்திரம் வைத்தால் அது எப்படி இருக்கும்? அதைப்போலவேதான் இந்தத் தவறும் இருக்கிறது.

கலை ஒருமித்த ஒரு முழுமை

உண்மையான கலையானது ஒருமித்த ஒரு முழுமையாகும்; அது வாழ்க்கையுடன் கலந்து ஒட்டி நிற்பது. பண்டைக்காலக் கிரேக்கர்களிடையேயும் புராதன எகிப்தியர்களிடையேயும் இத்தகைய அன்னியோன்னியமான ஒருமையை ஓரளவு காணலாம். ஏனெனில் அங்கே படங்கள், சிலைகள், அழகுடைய பொருள்கள் எல்லாம் ஞாபகார்த்தமாக எழுப்பப்பட்ட கட்டிடத்தின் அமைப்புத்திட்டத்தில் அவை அவை ஆக்கப்பட்டதன் கருத்திற் கொப்ப, அவ்வவற்றிற்குரிய இடங்களில் ஒழுங்காக வைக்கப்பட்டன. ஒவ்வொரு சிறு விவரமும் முழுமையின் ஓர் அம்சமாக இசைவு பொருந்தி நின்றது. ஜப்பானிலும் அவ்விதமாகத்தான் இருந்தது. குறைந்தது சமீப காலம் வரையிலுமாவது, அதாவது பயன் ஒன்றையே கருதும் நவீன நாகரிகம் அங்கு ஏற்படுமுன், அவ்விதம் இருந்தது எனலாம். ஜப்பானியரின் வீடு ஓர் அற்புதமான கலையழகு மிகுந்த ஒரு முழுப்பொருளாகும்; எப்போதும் சரியான இடத்தில் சரியான பொருள் இருக்கும்; எதுவும் முறைதவறி வைக்கப்பட்டிராது; எல்லாம் எவ்விதமாக இருக்கவேண்டுமோ அவ்விதமாகவே இருக்கும். அவ்வளவு தூரம் எல்லாமே இசைவுடன் பொருந்தியிருக்கும். வீடுங்கூட அதைச் சுற்றிலுமுள்ள இயற்கையுடன் அற்புதமாகக்

கலந்தும் பொருந்தியும் இருக்கும். பாரதநாட்டிலுங்கூட, சித்திரமும், சிற்பமும், கட்டிட வித்தையும் ஒரே சம்பூரண அழகாகவும், ஆண்டவனை ஆராதிக்கும் ஒரே தனித்த இயக்கமாகவும் இருந்தன.

சமீபகாலந்தொட்டு உலகில் இந்நோக்கில் ஒரு பெரிய சீரழிவு ஏற்பட்டுளது. விக்டோரியா ராணியின் காலமுதற்கொண்டும் பிரான்சில் இரண்டாம் ஏகாதிபத்திய காலம் முதற்கொண்டும் கலைச்சுவை பெரிதும் சிதைந்துவிட்டது. அறைகளில் சுற்றியுள்ள பொருள்களுடன் எவ்விதத்தாயினும் சம்பந்தமோ பொருத்தமோ இல்லாத படங்களைத் தொங்கவிடும் வழக்கம் அதிகரித்திருக்கிறது. இக்காலத்தில் அபஸ்வரம் என்பது சிறிதுமின்றி, எப்படத்தையும், அழகுடைய எப்பொருளையும், எங்கே வேண்டுமானலும் வைக்கலாம். திறமையையும், சாதுரியத்தையும், மேதையையும் பகட்டுடன் காட்டுவதொன்றே கலையின் நோக்கமாகிவிட்டது. கலை தனது உண்மையான குறியிலிருந்து வெகுதூரம் வழிதப்பிச் சென்றுவிட்டது. மக்களின் இல்லங்களில் அது அழகு இசைவு என்பவற்றினுடைய சம்பூரணமான ஒழுங்கான ஒரு வெளிப்பாடாக இருக்கவேண்டியதன் அவசியத்தை மறந்துவிட்டது.

இறைவனது வெளிப்பாட்டினது அழகின் ஒரு காட்சியே கலை

கலையானது தனது அடிப்படையான உண்மையில், இறைவனது வெளிப்பாட்டின் (manifestation) அழகினது ஒரு காட்சியாக இருப்பதற்குக் குறைந்ததாக இல்லை. ஒருகால் இந்நோக்குடன் பார்த்தால், வெகு சில உண்மையான கலைஞர்களே காணப்படுவர். ஆயினும் சிலர் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களை நாம் யோகியர் எனக் கருதலாம். ஏனெனில், யோகியரைப்போலவே கலைஞனும் தனது ஆவேசத்தை எதிர்பார்த்துக் கொண்டு அதைப் பெறுவதற்குத் தியானத்தில் ஆழ்ந்து செல்லுகிறான். உண்மையாகவே அழகாயுள்ள ஒன்றைச் சிருஷ்டிப்பதற்கு, அதை அவன் முதலில் தனது அகவிழியினால் கண்டு தனது ஆழ்ந்த உணர்வில் ஒன்றுபடுத்த வேண்டும். இவ்வண்ணம் அதைக் கண்டுபிடித்துப் பார்த்து உள்ளத்தில் உடைமைப்படுத்திய பின்னரே, புறத்தில் அதை அவனால் நிறைவேற்றி வைக்க முடியும். அவனது சிருஷ்டியானது அவனது மகத்தான உள்விழியின் புறமலர்ச்சியே யாகும்.

இதுவும் ஒருவித யோகப்பயிற்சியே; ஏனெனின், கலைஞன் இவ்விதமாக உள்ளேயுள்ள உலகங்களுடன் அன்னியோன்னியமான ஊடாட்டம் வைத்துக்கொள்ளுகிறான். லியோனார்தோ தே வேன்ஸியைப் போன்ற ஒருவர்[1] யோகியல்லாமல் வேறென்ன? அவர் எல்லோரையும்விட மிகச் சிறந்த ஓவியராக இராவிடினும், மிகச் சிறந்த ஓவியர்களுள் ஒருவராக இருந்தார். அவரது சிருஷ்டி ஓவியத்தோடு நின்றுவிடவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

---

1. லியோனார்தோ தே வேன்ஸி (1452-1519) என்பவர் ஓர் இத்தாலியர். ஓவியக் கலையில் கைதேர்ந்தவர். ஆயினும் ஒரு சிற்பியாகவும், கட்டிட சாஸ்திரம் அறிந்தவராகவும், இஞ்சினியராகவும், எழுத்தாளராகவும், இசைவாணராகவும் இருந்தார். சர்வகலைகளிலும் பௌதிகசாஸ்திர ஆராய்ச்சியிலும் பெயர் பெற்றிருந்தார்,

சங்கீதக்கலை

சங்கீதமும் சாராம்சத்தில் ஓர் அத்தியாத்ம கலையேயாகும். அது எப்போதுமே சமய உணர்ச்சியுடனும் ஆன்ம வாழ்க்கையுடனும் சம்பந்தப் பட்டிருக்கிறது. ஆனால் அதுவும் தனது உண்மையான மார்க்கத்தினின்றும் வழுவி, தனக்குத்தானே போதுமெனத் தனித்து நிற்கலாயிற்று. ஆபெரா என்னுமோர் இசைநாடகத்தின் இசையைப்போல அது ஒரு கலைக் காளானாக வும் ஆய்விட்டது. சங்கீத சிருஷ்டிகள் பெரும்பாலும் இவ்வண்ணமாகவே இருக்கின்றன. ஆனால் கலை நுணுக்கமாகமட்டும் நோக்கினால் அவை இன்னும் ருசிக்கத் தக்கவையே என்றுதான் நாம் அதிகப்படியாகக் கூறலாம்.

ஓர் உயர்ந்த கலையை வெளிப்படுத்துவதற்கு ஆபெராவின் இசையைக் கூட ஒரு சாதனமாக உபயோகிக்கமுடியாது என நான் சொல்லவில்லை. சங்கீதவகை யாதாயினும் அதை ஓர் ஆழ்ந்த உத்தேசத் திற்காகப் பயன்படுத்தலாம். ஆனால் எல்லாம், அதையும் அதற்குப் பின் புறமாயுள்ளதையும், அது எவ்விதமாகப் பயன் படுத்தப்படுகிறது என்பதையும் பொறுத்திருக்கிறது. காளான் உள்பட எல்லாமே கடவுளிடமிருந்து வரு வனவாக உரிமை கொண்டாடக் கூடுமல்லவா? அவ்வாறே கடவுளது காரியத்திற்காகப் பயன்படக் கூடாதது யாதொன்றும் இல்லை.

பெருமை வாய்ந்த தற்கால இசைவாணர்களிற் பலர் தாங்கள் சிருஷ் டிக்கும்போது தங்களது உணர்வு ஓர் உயர்ந்த உணர்வுடன் தொடர்புற்றிருந் ததை அனுபவமாகக் கண்டிருக்கின்றனர். ஸீஸர் பிராங்க்[1] என்பவர் ஆர்கன் என்னும் மேனாட்டு இசைக்கருவியை வாசிக்கையில் அருள்பெற்றவ ராக இருந்தார். அவரது உள்ளம் சைத்திய ஜீவனைக் (psychic life) கண்டு மலர்ந்திருந்தது. அதனை அவர் உணர்ந்து அதைப் புறத்தே வெளிப்படுத்தி னர். பீதோவேன்[2] என்பவர் ஒன்பதாவது சிம்போனியைச் (symphony)[3] சிருஷ்டித்தபோது உள்ளம் ஓர் உயர்ந்த உலகை நோக்கி மலர்ந்ததையும் அவ்வுயர்ந்த உலகு இப்புவிநிலையில் இறங்கிவந்ததையும் தமது அகவிழியில் கண்டார். வாக்னேர்[4] என்பவர் மனித அறிவுக்குச் சாதாரணமாக எட்டாத கூடலோகங்களைப்பற்றித் (occult worlds) தெளிவாகவும் அழுத்தமாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் குப்தமான விஷயங்களை (occultism) நன்கறிந்தவர். அவைகளின் மூலமாகவே அவரது மிகப் பெரிய ஆவேசங் கள் வந்தன. ஆனால் அவர் பிராணநிலையில்தான் (vital level) விசேஷமாக வேலைசெய்தார். அவரது மனம் அடிக்கடி இடையிட்டு அவரது ஆவேசத்தை ஜீவனற்றதாகச் செய்துவிட்டது. அவரது சிருஷ்டி மிகவும் சக்தி வாய்ந்ததா யிருப்பினும், பெரும்பாலும் கலப்புற்றும் தெளிவற்றும் கனமாகவும் இருக்

---

1. ஸீஸர் பிராங்க் (1822-1890): இவர் ஒரு பெயர்பெற்ற சங்கீத சாகித்தியகர்த்தர். பெல்ஜிய நாட்டைச் சேர்ந்தவர்.

2. பீதோவேன் (1770-1827): இவர் பெரும் புகழ்பெற்ற சங்கீத சாகித்திய கர்த்தர். ஜெர்மனி ஈன்ற தவப்புதல்வர்.

3. சிம்போனி என்பது ஒருவித இன்னிசை பொருந்திய சங்கீத உருப் படி. இசைக்கருவிகளில் வாசிப்பதற்காகவே இயற்றப்பட்டது. பீதோவேன் செய்த சிம்போனி என்னும் இசைப்பாட்டுக்களில் அவரது ஒன்பதாவது சிம்போனிதான் மிகப் புகழ்பெற்றது.

4. வாக்னேர் (1813-1883): இவர் பெயர்பெற்ற ஜெர்மானிய இசை வாணர். மகா மேதையும் சக்தியும் வாய்ந்தவர். பல சாகித்தியங்கள், பல கவிகள், பல நாடகங்கள் எழுதியுள்ளார்.

கிறது. ஆனால் அவர் பிராணமய மனோமய நிலைகளைத் தாண்டி ஓர் உயர்ந்த லோகத்தை யடைய முடிந்தபோது அவர் கண்ட க்ஷண காலக் காட்சிகளிற் (glimpses) சில அபூர்வ அழகுடையனவாக இருந்தன. இவைகளை நாம் அவர் எழுதிய 'பர்சிபால்' என்னும் இசை நாடகத்திலும், 'திரிஸ்தனும் இசோவும்' என்னும் சோக நாடகத்தின் கடைசி அங்கத்தின் சில பாகங் களிலும் காணலாம்.

நாட்டியக்கலை

மேலும், தற்காலத்தினர் நாட்டியத்தை எவ்விதமாக ஆக்கிவிட்டனர் என்பதைப் பாருங்கள். முன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடுங்கள். ஒரு காலத்தில் நாட்டியம் அக வாழ்க்கையின் மிக உன்னதமான புறவிளக் கங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. அது சமயத்துடன் சம்பந்தப்பட்டும், புனிதமான சடங்குகளிலும், திருவிழாக்களிலும், தேவ ஆராதனை களிலும் முக்கியஸ்தானம் வகித்தும் வந்தது. சில நாடுகளில் அது பேரெழிலும் அபூர்வமான பூரணத்துவமும் பெற்றிருந்தது. ஜப் பானில் நாட்டிய சம்பிரதாயத்தைச் சமய வாழ்க்கையின் ஓர் அம்சமாகப் போஷித்து வந்தனர். அழகு விஷயமாகவும் கலை விஷயமாகவும் ஜப் பானியர்களுக்கு ஒரு கண்டிப்பான ஞானம் இயல்பாகவே அமைந்திருக்கிற படியினால் நாட்டியக் கலை சீரழிந்துவிடாமலும் அதன் பழைய உட்கருத்தும் குறியும் மறைந்து போகாமலும் பார்த்துக்கொண்டனர். பாரத நாடும் சமய சம்பந்தமான நாட்டியங்களை வகுத்தும் பயின்றும் வந்தது.

இன்று ருஷிய நாட்டின் நாட்டியங்கள் புகழ்பெற்று விளங்குகின்றன. ஆனால் அவை பிராணலோகத்தை (vital world)ச் சார்ந்த பயங்கர அம்சங் களையுடைய வெளிப்பாடுகளாகவே இருக்கின்றன. அந்த லோகத்திலிருந்து வருகின்ற எல்லாவற்றையும்போலவே அவை மிகவும் வசீகரிக்கக்கூடியவை யாகவோ, அருவருப்புத் தருவனவாகவோ இருக்கின்றன. ஆனால் அவை எப்பொழுதும் தங்களுக்காகவே இருக்கின்றன; உன்னத வாழ்க்கையை வெளிப்படுத்துவதற்காக அல்ல. ருஷியர்களின் கூடமதமே (mysticism) பிராண மயமானது. அவர்கள் நாட்டியக் கலையின் நுணுக்கங்களை அற்புத மாக அறிந்தவர்கள். ஆனால் கலையின் நுட்பம் ஒரு சாதனமே. சாதனம் நன்றாயிருப்பது நலமே. ஆனால் அது கடவுளுக்கு அர்ப்பணமாகா விடின், அது எவ்வளவுதான் அற்புதமாயிருப்பினும் உன்னதமான விஷயங் களற்றதாயும், அக்காரணத்தால் கடவுளுடைய காரியங்களுக்குப் பயன் படக் கூடாததாயும் இருக்கும். நான் முன்பே சொல்லியவண்ணம் கலைஞர் களாக ஆகிறவர்களிற் பலர், தாங்களாகவே நிற்க முடியுமென்றும், ஆண்ட வன் சார்பு வேண்டிய அவசியமில்லையென்றும் கருதுவதனால்தான் சங்கடம் எற்படுகிறது. இது மிகவும் வருந்தத் தக்கதாகும்; ஏனெனில் இறைவனது வெளிப்பாட்டில் வேறு எல்லாவிஷயத்தைப்போலவும் திறமை யும் ஓர் அவசியமான அம்சந்தான். திறமை தெய்வ அமைப்பில் ஒரு பாகம்; ஆனால் அதைவிடப் பெரிய விஷயங்களுக்கு அது அடங்கிநிற்கவேண்டும்.

கலையின் ஆதி ஊற்று

மனத்திற்கப்பால் ஒரு நிலை உளது; அதை நாம் சமரச லோக (world of harmony) மென அழைக்கக்கூடும். அங்கே சென்றால், இவ்வுலகில் பல உருவங்களில் தோன்றியுள்ள சமரசத்திற்கெல்லாம் ஆணி வேராயுள்ளதைக் காணலாம். ஓர் உதாரணம் கூறுவோம்: ஒருவர்பின் ஒருவராக அவதரித்த இரு கலைஞர்களின் சிருஷ்டிகளில் சில மேல் ரக

மான சுரங்களைக் கொண்ட ஒரு விதமான சாகித்தியம் காணப்படும். ஒன்று பாக்[1] என்பவரின் உருப்படி; மற்றொன்று பீதோவெனின் உருப்படி. இரண்டுமே ஒரேவித இசைக் கருவியில் பாடுவதற்கென அமைந்திருந்தன. ஆனால் இவை எழுத்தில் ஒரே மாதிரியாக இல்லை. புறச்செவிக்கும் வெவ்வேருகவே தொனித்தன. ஆயினும் சாராம்சத்தில் இரண்டும் ஒன்றே. இவ்விரண்டு கலைஞர்களின் உள்ளத்தையும் தொட்டது ஒரே உணர்வின் அதிர்ச்சி (vibration); ஒரே உட்பொருளையுடைய இசைவின் அலை (wave of harmony). பீதோவெனுக்கு இதன் தொடர்பு கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. ஆனல் அவரிடத்தில் அது மனத்தின் சிருஷ்டிகளினலும் இடைச் செருகல்களினலும் கலப்புற்றது. பாக்கின் தொடர்பு கொஞ்சம் குறைவாகவே இருந்தது; ஆனல் அவர் கிரகித்துக்கொண்டது தூய்மையுடன் இருந்தது. இந்த அதிர்ச்சியானது உணர்விழந்த நிலையில் (unconsciousness) ஆழத்திலிருந்து குமுறிக்கொண்டு வெற்றியுடன் மேலே கிளம்பி ஜனிக்கும் உணர்வைச் சேர்ந்ததாகும்.

யோகத்தினல் எல்லாக் கலைகளுக்கும் முதல் ஊற்ருயுள்ள இதனை அடையமுடியுமானல், நீ விரும்பினல் சர்வ கலா வல்லுநன் ஆவாய். முன்னர் அங்கே சென்றவர்கள் அங்குள்ள அழகையும் ஆனந்தத்தையும் புறத்திலே விளக்கவும் இவ்வுலகில் உருவெடுக்கச் செய்யவும் ஊக்கங்கொள்ளாது, அங்கிருந்து கொண்டே சுவை தரும் இன்பம் நிறைந்த பாவசத்தைச் சுகமாக நுகர்வதேமேல் எனக் கொண்டனர். ஆனல் இத்தகைய நிலை முழு உண்மையாகாது; யோகத்தின் சரியான உண்மையும் ஆகாது; அது ஒரு விரூபமாகும்; துறவின் எதிர்மறை நோக்கால் யோகத்தின் செயல்புரியும் சுதந்திரத்தை ஒடுக்குவதாகும். இறைவன் தான் செயலற்று முழுதும் விலகி நின்று முழு மோனத்தில் அமர்ந்திருக்க வேண்டுமென விரும்பவில்லை. புறத்தில் விளக்கம் உண்டாவதே அவனது திருவுள்ளமாகும். இறைவனது சைதன்னியம் (உணர்வு) செயலற்ற, புறத்தில் விளக்கமடையாத, ஒரு பேரின்ப நிலையாகவே உண்மையாக இருப்பின், உலகம் என்றுமே உண்டாயிராதே!



---

1. பாக் (1685-1750) என்பவர் பக்திரசம் ததும்பும் பாடல்களைப் பாடிய ஜெர்மானிய இசைவாணர்.

: குழந்தையும் விளையாட்டும் :

* பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். *

அரைக்கண நேரமும் சும்மா இராமல் துறு துறு வென்னும் மெல்லிய சிறு விரல்களையுடைய கை, ஒரு நிமிஷம் கூட ஓரிடத்தில் நிலையாயிராமல் ஓடியாட விறுவிறுக்கும் மென்மையான பாதங்கள், குறு குறுப்பு நிறைந்த மனம், கேள்விகள் ததும்பிக் கொண்டே யிருக்கும் நா, தான் புதிதாகக் காணும் உலகத்திலுள்ள ஒவ் வொன்றையும் அற்புதமாக எண்ணி எண்ணி ஆனந்தமாகப் பருகிக்கொண்டேயிருக்கும் கண்கள், அன்பும் ஆசையும் குதூகல மும் ஒன்றாகத் திரட்டிய சின்னஞ் சிறு வடிவம்—இவைகளை உடைய தேவதையையே நாம் குழந்தை என்கிறோம்.

விளையாட்டு என்றால் என்ன? வேலை என்பதும் விளையாட்டு என்பதும் காரியத்தில் ஒன்றுதான். நிர்ப்பந்தத்தின்மேல் செய்வது வேலை. தானாக ஆசைப்பட்டுச் செய்வது விளையாட்டு.

இளவேனிற் காலத்தில் உல்லாஸமான காலைவேளையில், டாம் ஸாயர் என்ற சிறுவன் தன்னுடைய சிநேகிதர்களோடு விளையாட வேண்டுமென்று மனக்கோட்டை கட்டினான். "இன்றைக்குக் காம் பவுண்டுச் சுவருக்கு வெள்ளையடிக்கவேண்டும்" என்று உத்தர விட்ட அவனுடைய அத்தை அவன் கட்டிய மனக்கோட்டையை ஒரே கணத்தில் தகர்த்தெறிந்தாள். பெரிய கண்டத்தைப்போல் பரந்து கிடந்த சுவரின் முன்னே நின்றுகொண்டு, "ஆஹா, இது எப் படி முடியப்போகிறது!" என்று ஏங்கினான். மனமே இல்லாமல் வேலையைத் தொடங்கினான். அப்பொழுது அவனுடைய சிநேகிதன் ஒருவன் வாயில் ஓர் ஆப்பிள் பழத்தைக் கடித்துத் தின்றுகொண்டும், தன்னை ஒரு படகாகப் பாவித்துக்கொண்டும், டிங்-அ-லிங், டிங்-அ-லிங் என்று மணி அடித்துக்கொண்டும் வருவதைக் கண்ட டாம் ஸாயருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. உடனே மிகவும் ஒய்யாரமாக நின்றுகொண்டு, குச்சு மட்டையால் சுவரில் வெள்ளையடிப்பதும், சித்திரம் எழுதும் ஓவியக்காரனைப்போல் அதைப் பார்த்து அனு பவிப்பதுமாகப் பர்சாங்கு செய்தான். பக்கத்தில் வந்து நின்றவனைக் கவனிக்கவே இல்லை. அவன் கூப்பிட்டதற்குப் பதிலில்லை. அவன் தன்னைத் தோளில் தட்டியபிறகே, அவனைப் பார்த்ததாகப் பாவித் தான். "இன்றைக்கு என்ன, வேலையா?" என்றான் அந்தச் சிநேகி தன்.

"வேலையா?—எது வேலை?" என்றான் டாம்.

"நீ செய்கிறது வேலை அல்லவா?"

"இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். அவரவர்கள் மனத்தைப் பொறுத்தது. எனக்கு இது பிடித்திருக்கிறது" என்றான் டாம்.

சிறிது நேரம் நின்று பார்த்துக்கொண்டிருந்த சிநேகிதன் தான் வெள்ளையடிக்க வேண்டுமென்று மன்றாடிக் கெஞ்சிக் கேட்டுத் தன்னிடம் இருந்த ஆப்பிளையும் தருவதாகச் சொல்லவே, டாம் இணங்கினான். சிநேகிதன் ஆவலோடு வெள்ளை அடித்தான். அவனுக்கு அலுத்துப் போவதற்குள் இன்னும் பல சிநேகிதர்கள், ஒருவர்பின் ஒருவராக, வந்தார்கள். புரளி செய்யவேண்டும் என்னும் உத்தேசத்தோடு வந்த ஒவ்வொருவனும், கடைசியில் தன் கையிலுள்ள விளையாட்டுச் சாமான் ஏதேனும் ஒன்றை டாம் ஸாயருக்குக் கொடுத்துவிட்டு, வெள்ளையடித்து விட்டுப் போனான்.

இவ்வாறு சாயங்காலத்துக்குள் டாம் ஸாயருக்கு நிறையச் சொத்துச் சேர்ந்துவிட்டது. ரிப்பேர் செய்த காற்றாடி; ஒரு செத்த சுண்டெலியோடு அதைச் சுற்றுவதற்காக அதன் காலில் கட்டிய கயிறு, பன்னிரண்டு கோலி, மோர்சிங்கில் பாதி, நீலக் கண்ணாடித் துண்டு, மரக்கட்டையால் செய்த பொம்மைப் பீரங்கி, எந்தப் பூட்டுக்கும் பொருந்தாத ஒரு சாவி, சாக்குக்கட்டித் துண்டுகள், கண்ணாடிச் சீசா மூடி, ஈயத்தால் செய்த சிப்பாய்ப் பொம்மை, இரண்டு தவளைக் குஞ்சு, ஆறு குதிரைப்பட்டாஸ், ஒருகண் குருட்டுப் பூனைக்குட்டி, பித்தளைக் கதவுப் பிடி, நாய்க் கழுத்துப் பட்டை (நாயில்லாமல்), கத்திப்பிடி, ஆரஞ்சுப் பழத்தோலில் நாலு துண்டு, பழைய ஜன்னல் பட்டை ஒன்று.

இவ்வளவு வரும்படி வந்ததைத் தவிர, அவனுக்கு நாள் முழுதும் நன்றாகப் பொழுதும் போயிற்று; பேசுவதற்கு நிறைய ஆட்கள். காம்பவுண்டுச் சுவருக்கும் மூன்று முறை வெள்ளை யடித்தாகிவிட்டது. தொட்டியிலிருந்த சுண்ணாம்பும் தீர்ந்துபோய் விட்டது; இல்லையானால் அக்கம் பக்கத்திலுள்ள பையன்கள் அத்தனை பேரையும் டாம் ஸாயர் அன்று இன்ஸால்வெண்டு ஆக்கியிருப்பான். இவ்வாறு மார்க் ட்வெய்ன் கதை சொல்லுகிறார்.

இதைப்போலவே விளையாட்டையும் வேலையாக்கிவிடலாம். இன்றைக்கு விளையாடித்தான் ஆகவேண்டும், அரைமணிநேரம் சடுகுடு, அப்புறம் அரைமணிநேரம் கால்பந்து, அப்புறம் அரைமணி நேரம் வேறொன்று என்று திட்டப்படுத்தி, பக்கத்திலிருந்து அப்படிச் செய்யாதே, இப்படிச் செய் என்று ஒருவர் ஏவிக்கொண்டே

யிருந்தால், விளையாட்டும் கசப்பான வேலையாகிவிடும். ஆனந்தம் தருவது விளையாட்டு; குழந்தைக்கு அருவருப்பைத் தருவது வேலை.

ஐரோப்பிய நாடுகளில் விளையாட்டின் தத்துவத்தைப் பற்றிப் பலர் ஆராய்ந்திருக்கிறார்கள். 'குழந்தைகள் ஏன் விளையாடுகின்றன?' என்பது அவ்வாராய்ச்சிகளுள் ஒன்று. இதை நன்றாகத் தெரிந்து கொண்டால் குழந்தைக்கு ஏற்ற விளையாட்டுக்களை அமைக்கலாம் என்பது அவர்கள் நோக்கம். இந்த விஷயத்தைப்பற்றிப் பல அபிப் பிராயங்கள் இருக்கின்றன.

'குழந்தையின் உடம்பில் வேண்டிய அளவுக்குமேல் சக்தி ஊறு கிறது; அதைச் செலவழிக்கும் முயற்சிதான் விளையாட்டு' என்பது ஒரு கொள்கை. மற்றொன்று இதற்கு நேர் எதிரிடையானது. 'குழந்தை களைத்துப்போகிறது; மனச்சலிப்பும் உடல்களைப்பும் தீருவதற்கான பரிகாரமுறையே விளையாட்டு' என்பது அந்தக் கொள்கை. 'பண்டைப் பழங்காலங்களிலே மனிதர் வாழ்ந்து வந்த வாழ்க்கையின் நினைவுகளெல்லாம் ஒவ்வொரு குழந்தையின் உடலிலும் ஊறிக்கிடக்கிறது; தன்னை அறியாமலே அந்தப் பழங் கால வாழ்க்கையை நடத்த முயலும் முயற்சியே குழந்தை விளை யாட்டு' என்பது மூன்றாவது கொள்கை. இதற்கு நேர் எதிரிடை யானது நாலாவது கொள்கை. 'இனிமேல் வாழவேண்டிய வாழ்க் கைக்கு உரிய செயல்களைச் செய்து பழகுவதுதான் குழந்தை விளையாட்டின் உட்கருத்து. பந்தை உருட்டிப் பாய்ந்து பிடித்து விளையாடும் பூனைக்குட்டி, அவ்விளையாட்டின் மூலமாக எலியைப் பிடிக்கக் கற்றுக்கொள்கிறது' என்பது இக்கொள்கை. 'ஒவ்வொரு பிராணிக்கும் தான் மற்றவை யாவற்றினும் மேம்பட்டதாக ஆகவேண்டும் என்னும் ஆசை உண்டு. அந்த ஆசையின் தூண்டுதல் தான் விளையாட்டு' என்பது ஐந்தாவது கொள்கை. 'மனம் காரணம் அல்ல; உடல்தான் காரணம். உடலிலே சிற்சில உறுப்புக் கள் வளர்ந்தாகவேண்டும்; அவற்றை உபயோகப்படுத்தி வளர்க்கும் முயற்சியே விளையாட்டு' என்பது ஆறாவது கொள்கை. இப்படி முரண்படும் கொள்கைகளால் அதிகப் பயன் இல்லை.

ஆனால் குழந்தையின் விளையாட்டினால் அதன் உடலும், மனமும், அறிவும், செயலும் பாதிக்கப்படுகின்றன என்பதை மறுப் பவர்கள் இல்லை. "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது பழமொழி.

சிற்சில விளையாட்டுக்கள் உலகெங்கும் காணப்படுகின்றன. பம்பரம், கோலி, காற்றாடி, ஊதுகுழல், வண்டியிழுத்தல், பாண்

டில், பொம்மைபோன்றவை எல்லாத் தேசங்களுக்கும் பொதுவான விளையாட்டுக்கள். வேறு சில, ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம் மாறுபட்டுத் தேச அமைப்பையும் அதன் சீதோஷ்ண நிலைகளையும் மக்களின் லக்ஷியங்களையும் மதக்கோட்பாடு களையும் நாகரிக நிலைகளையும் பொறுத்தனவாக இருக்கின்றன.

"வாட்டர்லூ யுத்தத்தின் வெற்றி ஈட்டன் பள்ளிக்கூடத்து விளையாட்டிடங்களிலே அமைந்தது" என்று வெல்லிங்ட்டன் சொல்லிய சொற்கள், விளையாட்டுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றன. ரோம ராஜ்யத்தைக் கலங்கச்செய்த கார்த்தேஜ் நகரத்தின் சித்திரப்படம் ஒன்றை டர்னர் என்னும் ஆங்கில ஓவிய நிபுணர் வரைந்திருக்கிறார். அந்தப் படத்தின் முன்புறத்திலே சிறுவர்கள் குளத்தில் பொம்மைப் படகு விடுவதாகக் காட்டப்பட்டிருக்கிறது. "சிறந்த மாலுமிகளான அந்நாட்டு மக்களின் மனப்பான்மையைச் சிறுவர் விளையாடும் விளையாட்டின் மூலமாக எவ்வளவு நன்றாகக் காட்டியிருக்கிறது" என்று ரஸ்க்கின் அதை மிகவும் வியந்து பாராட்டுகிறார்.

உலகப் பிரசித்திபெற்ற வெல்ஸ் என்னும் ஆசிரியர் குழந்தை விளையாட்டுக்களைப்பற்றி இரண்டு புத்தகங்கள் எழுதி இருக்கிறார். 'சிறு யுத்தங்கள்' என்பது ஒரு புத்தகம். அதிலே போர்வீரர் களும், பீரங்கிகளும், சண்டைகளும் முக்கிய அமிசங்கள். பன்னிரண்டு வயது முதல் நூற்றைம்பது வயது வரையுள்ள சிறுவர் களுக்காகவும், அறிவிற் சிறந்தவர்களாகிச் சிறுவர் விளையாட்டுக் களை விளையாட விரும்பும் சிறுமிகளுக்காகவும் எழுதப்பட்டது என்கிறார். யுத்த அரங்கமாகிவிட்ட ஐரோப்பாவிலே வாழும் மக் களுடைய மனநிலையை அது காட்டுகிறது. அஹிம்சையைப் பெரி தாகப் பாராட்டும் நமது நாட்டுக்கு, மனத்தை முரடாக்கும் இவ் விளையாட்டு உதவாது என்று தோன்றுகிறது. வெல்ஸ் எழுதிய மற்றொரு புத்தகம் "தரை விளையாட்டுக்கள்" என்பது. மனிதப் பொம்மைகளையும், மரச்செங்கல்களையும், பலகைகளையும், சாவி கொடுத்தால் ஓடும் ரெயில் வண்டி முதலிய பொம்மைகளையும், அட் டையையும், காகிதத்தையும், சாக்குக்கட்டித்துண்டுகளையும், சிறு மரக்கிளைகளையும் வைத்துக்கொண்டு, தீவுகளைச் சிருஷ்டித்து, நகரங்களையும் மாளிகைகளையும் கட்டி எப்படி விளையாடலாமென்று அதிலே காட்டியிருக்கிறார்.

நம்முடைய நாட்டில் இத்தனை விளையாட்டுச் சாமான் களுக்கு எங்கே போவது? கற்பனை உலகத்திலே வாழும் குழந்தை கள் எந்தப் பொருளையும் விளையாட்டுச் சாமானாக மாற்றும் திறமையை உடையன. டாம் ஸாயருக்குக் கிடைத்த விளையாட்டுச்

சாமான்களைக் கவனித்திருப்பீர்கள். நம்முடைய தேசத்தில் சாமானியமான பொருள்களிலிருந்து குழந்தைகள் தாமாகவே எத்தனையோ விளையாட்டுச் சாமான்களை அமைத்துக் கொள்ளுகிறார்கள். தென்னை ஓலையிலிருந்தும், பூவரசிலையிலிருந்தும் ஊதல்கள்; தென்னங்குரும்பையாலும், ஈர்க்கினாலும் தேர், தெப்பம், வண்டி முதலியன; இரண்டு பனங்காயை ஓர் உருளைக்குச்சியின் இருநுனியிலும் செருகிய உருட்டு வண்டி; ஓலைப்பாம்பு, பெட்டி, மோதிரம்; உலர்ந்த பூவரசங்காய்ப் பம்பரம்: இன்னும் இவை போன்ற சாமான்கள்.

இவற்றைத் தவிர, நெட்டி, களிமண், மாக்கல், வெண்கலம், மரம் ஆகிய பொருள்களால் நம்முடைய தேசத்திலே விளையாட்டுச் சாமான்கள் குழந்தைகளுக்கென்று செய்யப்படுகின்றன. குழந்தைகளின் கண்களுக்கு இவை எவ்வளவு அழகாய்த் தோன்றினாலும் பெரியவர்களுடைய கண்களுக்கு இவை பெரும்பாலும் அத்தனை அழகாகத் தோன்றுவதில்லை.

நிஜப்பொருள்களின் சாராம்சத்தைக் கொண்டதாயும், எளிதான அமைப்பை உடையதாயும் இருப்பதுதான் பொம்மை. நிஜப்பொருளினுடைய தத்துவம் மட்டிலும் அதில் இருக்கவேண்டும், ஆனால் அதன் தொந்தரவு ஒன்றும் அதில் இருக்கலாகாது. பொம்மைக் குதிரை ஓடுவதைப்போல் இருக்கவேண்டும்; பொம்மை யானையும் பருமனாகத் தோன்றவேண்டும்.

புதுச்சேரி, ஆலங்குடி, தஞ்சாவூர்ப் பொம்மைகள் நன்றாயிருக்கின்றன. ஆனால் அவை களிமண்ணினால் செய்யப்பட்டிருப்பதால் சீக்கிரம் மூக்கையும் கையையும் காலையும் இழந்து மூளியாய்ப் போகின்றன. நெட்டிப் பொம்மைகளின் வாழ்வு ஈசலைப் போன்றது: பிறக்குமுன் மரணம். மாக்கல் பொம்மைகள் இவற்றைப் போல் அத்தனை இலேசாக உடைவதில்லை யானாலும் எளிதாய் உடைந்துபோகும் இனத்தைச் சார்ந்தவைதாம்.

செல்லுலாய்டு பொம்மைகள் பார்வைக்கு நன்றாயிருக்கின்றன: அவற்றின் விலையும் மலிவு: அவை இலேசில் உடைந்து போவதும் இல்லை. ஆனால் அவற்றை வாங்கவேண்டாம். அவை ஆபத்தை விளைவிக்கக் கூடியவை; கர்ப்பூரத்தைப் போல் மிகவும் எளிதாகத் தீப்பற்றிக் கொள்ளக் கூடியவை.

இலகுவில் அழுக்கேறக்கூடிய பொம்மைகளைக் குழந்தையிடம் கொடுக்காதிருப்பது நல்லது. அதற்கு அடுத்தபடிதான் கழுவக் கூடிய பொம்மைகளைக் கொடுப்பது. பீங்கான் பொம்மைகள் இலகுவில் அழுக்கேறா; எளிதில் கழுவுதற்கும் உரியன: பார்வைக்கும் நன்றாயிருக்கின்றன: ஆனால் கைதவறினால் வேறு

பொம்மை வாங்கவேண்டும். விம்மியழும் குழந்தையையும் தேற்றியாக வேண்டும்.

பொம்மை உடைந்தால் குழந்தையின் மனம் படுகிற பாடு அதற்கே தெரியும். இந்தத் துயரம் குழந்தை மனத்தைப் புண்படுத்தாமலிருக்கச் செய்யவேண்டும். உடைந்து போகும் பொம்மைகள் இல்லாமலிருப்பது நல்லது. கெட்டியான மரத்தினாலேனும், அல்லது எளிதில் உடைந்து போகாத வேறு ஏதாவது பொருளினாலேனும் வகை வகையான பொம்மைகளை மிகவும் மலிவான விலையில் இயற்ற வேண்டும்.

நமது தேசத்தின் லக்ஷியங்களும் சிறிது சிறிதாகப் பல அம்சங்களில் மாறிக்கொண்டு வருகின்றன. ஆதலால் செப்புக்களை வைத்துக்கொண்டு சமைப்பதும், கடைவைப்பதும் போதா; வேண்டாம் என்று கூடச் சொல்லத்தோன்றுகிறது. புதிய லக்ஷியங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் ஏற்றபடி புதிய முறைகளில் விளையாட்டுச் சாமான்கள் அமைக்கப்படவேண்டும். நகரங்களையும், கட்டடங்களையும், ஏரி குளங்களையும், பாலங்களையும், அணைகளையும், உபயோகமான இயந்திரங்களையும் கட்ட நம் குழந்தைகள் விளையாட்டாகக் கற்றுக்கொள்ளட்டும். இவற்றுக்கேற்ற சாமான்களையும், மரத்தினால் செய்த சின்னஞ்சிறு செங்கல், சுவர், உத்தரம், கோபுரம், ஸ்தூபி போன்ற விளையாட்டுச் சாமான்களையும், அவற்றைக் கற்பிப்பதற்குரிய படங்களையும் இயற்ற வேண்டும். சரித்திரத்தையும் பூகோளத்தையும் வான சாஸ்திரம் முதலியவற்றையும் விளக்கும் படங்களைச் சிறு மரத்துண்டுகளில் ஒட்டி அத்துண்டுகளைப் பொருத்தி விளையாடுவது நல்ல விளையாட்டு. குழந்தையின் வயதுக்கு ஏற்றபடி இத்துண்டுகளைச் சச்சவுக்கமாகவேனும், கன சதுரவடிவமாகவேனும் அல்லது கோணல்மாணலாகவேனும் அமைக்கலாம். குழந்தைகள் தனித்தனியாக விளையாடுவதற்கேற்ற சாமான்களும், பல குழந்தைகள் ஒன்றுகச் சேர்ந்து விளையாடும் விளையாட்டுச் சாமான்களும் வேண்டும்; நிறையவும், விதம் விதமாகவும், கண்ணுக்கு அழகாகவும் வேண்டும். விலையும் மலிவாக இருக்கவேண்டும்.

குழந்தைகளின் விளையாட்டுக்கள்தாம் தேச முன்னேற்றத்தின் முதற்படி என்பதை அறிந்து அவற்றுக்குரிய இடங்களையும் முறைகளையும் கருவிகளையும் அமைப்பது பெரியோருடைய கடமை.

திருச்சி அகில இந்திய ரேடியோவில் 30-12-39 அன்று பேசியது, அனுமதியுடன் வெளியிடப்பட்டது.

: வெண்ணிலா :

* "சுகி" *

அடுத்த வீட்டுக் குழந்தைகள் நிலாச்சாப்பாடு சாப்பிட வேண்டுமென உற்சாகத்தோடு பேசிக்கொண்டிருந்தன. வீட்டில், அதற்கென்று விசேஷமான கறிவகைகள் தயாரிக்கப் போவதில்லை. விளக்கடியில் வைத்து உண்ணப்போகிற அதே சாதம், அதே குழம்பு இவைகளைத்தான் நிலாவெளிச்சத்தில் சாப்பிடப் போகின்றன. இதற்கு, ஏதோ இமயமலையையே ஆகாயத்தில் தூக்கிவைக்கப் போவது போல ஆரவாரமும் அரட்டையும் அடித்துக் கொண்டார்கள். சாப்பிட்டபின், கிளியந்தட்டு, நிலாப்பூச்சி, கண்ணு மூச்சி முதலிய விளையாட்டுக்களை விளையாடித் தீர்த்துவிடுவதென்று உற்சாகமாகப் பேசிக்கொண்டார்கள். சாப்பிடுவதோ, விளையாடுவதோ அவர்களுக்கு முக்கியமல்ல; எப்படியாவது நிலாவில் இருக்கவேண்டுமென்பதுதான் அவர்கள் எண்ணம்.

மொட்டைமாடியில் சாய்வு நாற்காலியில் இருந்தபடியே அவர்கள் பேச்சைக் கேட்டேன். அதோடு, என்னுடைய பாலியத்தில், நிலவில் குதித்த குதிப்பெல்லாம் ஞாபகம் வந்தன. விருந்துச் சாப்பாடு நடப்பதுபோலவே எனக்குத் தோற்றியது. ஒரு சமயத்தில் வெகு அருமையாக இருந்த நிலாவிருந்தின்போது கறிவகையெல்லாம் முதல்தரமாக இருந்தது.

"பச்சடி கண்டார் பச்சடியே கண்டார்
பாயசம் கண்டார் பாயசமே கண்டார்"

என்றெல்லாம் பாடியதும் ஞாபகத்திற்கு வந்தது. அப்புறம் ஏற்பட்ட ஒரு விருந்தில் 'பச்சடி கண்டார் பச்சடியே வேண்டார்' என்று சர்வ மோசமாகப் போய்விட்டதும் மறக்கவில்லை. மானசிக விருந்தை மறந்து, சுயநிலைமையை அடைந்தேன்.

அன்று சாயங்காலம் மழை பெய்திருந்ததால் மப்பு மந்தாரமாக இருந்த வானம் நேரம் ஆக ஆக வெளிற ஆரம்பித்தது. காற்று மெதுவாகத் தவழ்ந்து சிவன் கோவில் நந்தவனத்தின் பூக்களின் நறுமணத்தையும், தூரத்தில் நிற்கும் மஞ்சணத்திமரத்தின் ரஞ்சித வாசனையையும் சுமந்து தள்ளாடித் தள்ளாடி, குருடன்போலத் தென்றலாகிவிட்டது. கனவுலோகத்திலிருந்து, பூலோக நினைவு தட்டியது.

கீழ்வானம் பாற்கடலாக மாறியது. சந்திரன் செம்பொற் குடம் போல் மிதக்க, திக்குத் திகந்தமெல்லாம் வெண்ணிலாப் படர்ந்தது. வஸந்தகால வேப்பமரத்தின் பசிய இலைகளையும் சரஞ் சரமாகத் தொங்கும் பூங்குலைகளையும் ஊடுருவிக் கிரணங்கள் வந்தன. மழை பெய்திருந்ததால், நீர்த்துளிகள் இலைநுனிகளிலும் குலுங்கி நிற்கும் பூக்களிலும் குண்டலம்போல ஆடிய காட்சி அற்புதமாக இருந்தது. சில நீர்த்துளிகள் தம்முள் சந்திரனை அடக்கிச் சந்திரபிம்பமாகப் பிரகாசித்தன.

எத்தனையோ தரம் சந்திரோதயத்தைப் பார்த்ததுண்டு. ஆனால் இந்த அழகு மற்றநாட்களில் என் கண்ணிற் படவில்லை. வானும் கடலும் தழுவுமிடத்தில் சந்திரனைப் பார்க்கவேண்டும். ஆனாலும் இன்றைய காட்சி அபூர்வமான விருந்தாக இருந்தது. என் உற்சாகம் பாட்டாக (என்னுடைய பாட்டல்ல! கவி தேசிக விநாயகம் பிள்ளையின் பாட்டாக) வந்தது:

"பாலாழி மீது படர்ந்த வெண்ணெய்—ஒரு
பந்தா யுருண்டு திரண்டதுவோ."

* * *

தெருவில், சாப்பிட்ட பிள்ளைகள் விளையாட ஆரம்பித்து, ஆடுகிறதும் பாடுகிறதுமாகக் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் தம் பின்னால் மட்டும் நிலவு வருவதாகப் பெருமை அடித்துக்கொண்டார்கள். சின்னப் பெண் ஒருத்தி தன் தம்பியிடம் நிலாப்பாட்டுப் பாடிக்கொண்டிருந்தாள்:

"நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா
மல்லிகைப்பூக் கொண்டுவா
பையப் பைய ஓடிவா
பாலுஞ் சோறும் தாரேன்."

அவளுடைய இனிய குரலில் லயித்துவிட்டேன். பாட்டுக் கர்ணபரம்பரையான சாதாரணப் பாட்டுத்தான். அது நிலாப் பாட்டு; ஆகவே என் மனம் உருகிவிட்டது. நிலவின் மோகன ஒளியில் மூழ்கிப் போய்விட்டேன்.

நான் மட்டும், இதே பௌர்ணமியில் பெரிய பட்டணங்களில் இருந்தால் சந்திரனை ஏறிட்டுப் பார்த்திருக்கமுடியாது. பட்டண வாசிகளுக்குச் சந்திரன் ஒருவன் உண்டென்பது புஸ்தகப்பாடம். நிலவு இருப்பதைச் சிறு பிள்ளைகள் அறிந்து தெருவில் விளையாட

வந்தால், மோட்டார் எமன் ஓடிக்கொண்டிருக்கும். வீட்டு முற்றத்தில் விளையாடலாமென்றாலோ, பட்டணத்து வீடுகளில் முற்றங்கூட உண்டா? எந்நேரமும் பட்டணத்தில் விளக்குத்தான் கதி. அகஸ்மாத்தாகத் தெருவில் போகும்போது விளக்கு அணைந்துபோனால், அன்றுதான் வானத்தை அண்ணாந்து பார்ப்பார்கள். பார்த்தாலும் அன்று கிருஷ்ணபக்ஷமா, சுக்கிலபக்ஷமா, அல்லது எத்தனாவது பிறை என்றாவது தெரியாது!

கிராமாந்தரங்களிலோ ஒவ்வொரு வீட்டு வாசலிலும் சந்திரன் வந்து இறங்குவான். அவனைக் கிராமவாசிக்குத் தெரியும். என்ன பக்ஷம், எத்தனாவது பிறையென்பவை குருட்டுப்பாடம். கிராம வாசிகளில் ஒருவனாகச் சந்திரன் மாறிவிடுகிறான். ஒவ்வொரு கிராமவாசிக்கும் அடுத்தவன் குட்டுத் தெரிந்திருப்பது போல, நிலவைப்பற்றிய சமாசாரமும் தெரிந்திருக்கும். பேசும்போது, 'நிலவு உதிக்க நாலுநாழிகைக்குமுன்', 'நிலவு உதித்து இரண்டு நாழிகைக்குப் பின்' என்றெல்லாம் நேரக்கணக்குக் காட்டிப் பேசுவார்கள். நிலா, அவர்களுக்கு அடுத்த வீட்டுக்காரன் மாதிரி. கிள்ளிவிட்டுக் கிட்டே நின்றாலும் தெரியாத இருட்டோ, எதிர் வீட்டுக்காரன்!

பட்டணத்தில் விளக்கு அணைந்தவுடன், யாரும் அழைக்காமலே இருட்டு வந்துவிடும். கிராமத்தில் எந்நேரமும் இருட்டுத்தான். விளக்கு அணைந்ததும், தன் பையைத் தொட்டுப் பார்க்கவே பயப்படும் நகரவாசிபோல, கிராமவாசி நடக்கிறானா? கதையில் சொல்லப்படும் 'கன்னங் கரிய காரிரு'ளாகத்தான் இருக்கட்டுமே; அந்த இருட்டில் வயற்புறங்களில் தண்ணீர் விலகுவதும், தெப்பக்குளத்தில் வேஷ்டி துவைப்பதும் சகஜம். தொழுவில் நிற்கும் மாடுகளுக்கு நடுராத்திரியில் வெளிச்சமின்றித் தண்ணீர் காட்டவோ, பின்புறத்திலுள்ள வாழைத் தோட்டத்தில் வாழையிலை நறுக்கவோ முடியும். வைக்கோற்போரின் பக்கம் சந்தேகமான சப்தம் கேட்டால் எவ்விதப் பயமுமின்றிப் பகல் நேரம்போலவே நடந்து செல்வார்கள். பட்டணத்தில் இப்படி முடியுமா?

நிலா வந்துவிட்டால் கிராமத்தில் ஒரே குஷி. தெருவுக்குத் தெரு சிலம்பம், கத்திச் சண்டை பழகும் இளங்காளைகளைப் பார்க்கலாம். கோதாக்களில் குஸ்தி, பஸ்கி இவைகள் நடைபெறும். கிராமத்து ஆண் பெண் அடங்கலாக நடுத்தெருவில் உட்கார்ந்து, 'சுடலைமாடன் கதை', 'அரிச்சந்திரன் கதை', 'கிருட்டினன் தூது' முதலியவைகளைப் பாட்டாகப் பாடுவதையும் சந்திரன் கேட்டுக் கொண்டிருப்பான். பௌர்ணமியன்று கிராமத்துத் தெருக்

களில் கோலாகலந்தான். அவர்களுக்கு இருட்டில் பழகியதால், சந்திரனின் அழகும் ஆனந்தமும் இரட்டிப்பாகத் தோன்றுகின்றன.

* * *

பகற்பொழுதில் இல்லாத, மனசைக் கவரும் காந்தி நிலாக் காலத்தில் இருக்கிறது. பகலில் கண்ணிற்கு ஈச்சமரம்போல் காய்ந்து கருகிப்போய்த் தோன்றும் அதே தென்னை, நிலாவுள்ள இரவில் பார்த்தால் சோலைகளிடையில் நிற்கும் தென்னைபோலவே காணப்படும்.

இருட்டில் பயங்கரத் தோற்றத்தைத் தரும் பூஞ்சோலை, பகல் நேரத்தில் கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது. அப்பூஞ் சோலையின் செடி 'கொடிகளின் சாந்தியும் சலனமும் ரம்மியமாகத் தோன்றுவது நிலவின் காந்தியால்தான்.

பூதாகாரமாகத் தோன்றும் பட்டுப்போன மரக்கிளையை நிலவொளியில் பார்த்தால், தளிர்த்துப் பூத்து நம்மிடம் கதை பேசப் புறப்படுகிறது. தோற்றத்தில் மாறுதல் ஏற்படும் மர்மம் எதனால்? புதுமையும் அழகும் சோபையும் காந்தியும் எங்கிருந்து வந்தனவோ? மலருக்கு அழகும், கரும்புக்குத் தித்திப்பும் எங்கிருந்து வந்தனவோ அங்கிருந்துதான்.

சிறு குழந்தை முதல் வயோதிகர்வரை சந்திரகாந்தியில் அகப்படாதவர் யார்? "பால்போல் நிலவு வீச, தங்க ரத்தினமே, பக்கத்திலே நீயிருக்க" என்று பாமரன் பாடும் தெம்மாங்குப்பாடலை நிலாக்காலத்தில் கிராமத்துச்சாலைகளில் கேட்கலாம். அந்தப் பாமரன் முதல் பண்டிதர்வரை அனுபவிக்காதவர் இல்லை. எத்தனையோ கோடிக்கணக்கான யுகங்களாக, மனிதன் தோன்றிய நாளிலிருந்து மனிதப் பூண்டு அழியும்வரை, வெண்ணிலாவானது வான நெடு வீதியில் பவனி வந்துகொண்டிருக்கும். அதைப் பார்க்காமல் இருந்து வருகிறவர்களும் இருந்துவரப்போகிறவர்களும் பிறவிக் குருடர்களே!

* * *

மனிதன் நிலாவைக் கண்டு மயங்கிவிடுகிறான். இதே சந்திரன் மனிதனைப்பற்றி என்ன நினைக்கிறான்? எனக்குத் தெரியவில்லை. விஞ்ஞான நிபுணர்கள் சந்திரனுக்கு ஒளியே இல்லையென்றும், அவன் சூரியனிடம் திருடிப் பிரதிபலிக்கிறானென்றும், சந்திரனில் மலையும் காடும் பள்ளத்தாக்கும் பாலைவனமும் உண்டென்றும் சொல்லுகிறார்கள். இதைப் படித்த விஞ்ஞானப் பெண்மணியிடம்

'முகம் சந்திரன்போல இருக்கிறது' என்று சொன்னால் சொன்னவன் பாடு ஆபத்து. இன்னும், வசனத்தில் வர்ணனைப் பகுதியில் 'சந்திரனைப் பழிக்கும் முகம்' என்று கூறியும் காதலர் சந்திக்குமிடத்தில் நிலவை வலுக்கட்டாயமாக வீசச் செய்தும் வருகிறார்கள் !

பிரமிக்கும்படி உதயமாகும் நிலவை வசனத்தில் பார்ப்பது சந்திரனது போட்டோவைப் பார்த்த கதை. கவிஞன் சந்திரோதயத்தைப் படம் பிடித்தால் அதில் எப்படியோ சப்த ஜாலம் செய்து விடுவான். கவியில் நாம் பார்க்கிற சந்திரன் தாமரைத்தடாகத்தில் பார்க்கும் சந்திரபிம்பம் போன்றது.

* * *

பாரதியின் காவியக் காதலன் கடற்கரையில் உலாவி வருகிறான். கொந்தளித்து அலை மோதிக்கொண்டிருந்த நீல நெடுங்கடல் பரந்த பாற்கடலாக மாறுகிறது. நிலவின் பூர்ண சௌந்தர்யத்தைக் கண்டதும் அதில் அவன் பாலைவனத்தைக் கண்டானா? இல்லை. அதில் குளிர்ச்சியைக் காண்கிறான். கடலும், மதியும் அவனுக்குத் தோன்றுகிற அழகைப் பாருங்கள் :

> "நீலக் கடலினிலே —நின்றன்
> நீண்டகுழல் தோன்றுதடி ;
> கோல மதியினிலே —நின்றன்
> குளிர்ந்தமுகங் காணுதடி."

காதலியின் குளிர்ந்த முகத்தையும், குழலையும் காதலன் காண்கிறான். பாரதியார் தாம் அனுபவித்த நிலவின்பத்தைக் காதலன் மூலமாகச் சொல்லுகிறார்.

தமிழில் காதல் துறையை ஆளும் போதெல்லாம், கவிகள் சந்திரனை மறக்கமாட்டார்கள். சந்திரன் இல்லாவிட்டால் காதல் இல்லை என்றுகூடச் சொல்லலாம். நிலவின் சோபையைப் புகழ்ந்து பாடும் நாயக நாயகியர்போல் தூஷித்துப் பாடுபவர்களும் உண்டு. அப்படி நிலவைத் தூஷித்து நிந்தாஸ்துதியாகப் பாடுவதில் தனிப்பட்ட அழகும் நயமும் கலந்த சோகத்தைப் பார்க்கலாம். காதல் வெறியில், கொடிபோலத் துவண்டுவரும் வேளையில், சந்திரனின் குளிர்ச்சி அவர்களுக்குத் தீயைப்போலத் தோன்றுமென்பது மரபு.

குற்றாலக் குறவஞ்சியில், வசந்தவல்லி காதல்நோய் வாய்ப்பட்டு இருக்கும் சமயம், அந்தி மயங்கிச் சந்திரோதயம் உண்டாகிறது. மாலை நேரத்தின் செக்கச் செவேரென்ற வானம் மறையும் தருணம்.

இதுவரையும் அவளுக்குக் குளிர்ச்சியாக இருந்த நிலவு வெந்தழ லாகப் படுகிறது. சந்திரன் பிறப்பு ஞாபகம் வரவே,

"தண்ணமு துடன்பிறந்தாய் வெண்ணிலாவே-அந்தத்
தண்ணளியை யேன்மறந்தாய் வெண்ணிலாவே"

என்று கெஞ்சுதலாக ஞாபகமூட்டுகிறாள். சந்திரன் அவள் வார்த்தையைக் கேளாததால் புதுவழி கண்டுபிடிக்கிறாள். சந்திரனிடம் தன்னைப் பெண்ணென்றும் பெண்ணுக்கு இரங்கவேண்டுமென்றும் சொல்லுகிறாள்:

"பெண்ணுடன் பிறந்ததுண்டோ வெண்ணிலாவே-
[என்றன்
பெண்மைகண்டுங் காயலாமோ வெண்ணிலாவே."

உடனே, சந்திரனுக்குப் புத்திமாறுட்டம் ஏற்பட்டதென நினைக்கிறாள். அதனால் தன்னுடைய கூந்தலை ஏதோ பாம்பென்று நினைத்துவிடவேண்டாமென்று சொல்லுகிறாள்:—

"நாகமென் றெண்ணவேண்டாம் வெண்ணிலாவே-இது
வாகுகுழல் பின்னல்கண்டாய் வெண்ணிலாவே."

வசந்தவல்லி இப்படி முறையிடுமுன் மன்மதன் புறப்படுகிறான். ஆசாமி, தென்றல் தேரில் கரும்புவில்லோடு புஷ்ப பாணங்களுடன் வெண்கொற்றக் குடையாக நிலவைப் பிடித்துக் கொண்டு வருகிறானும்; ஆயுதபாணியாக வரும் மாரனைக் கண்டு வசந்தவல்லி மனம் தடுமாறுகிறாள். அப்படித் தடுமாற்றம் அடைந்திருக்கும் நிலையில் அவனுக்கு 'முட்டாள்பட்டம்' கட்டிவிடுகிறாள்:

"கைக்கரும் பென்ன? கணையென்ன? நீயென்ன?-
மன்மதா!"

"அட மன்மதப்பிரபுவே! உனக்குக் கரும்பு வேறு கேடா? அதற்கு மலர்க்கணையும் வேண்டுமோ! நீயும் வந்து சேர்ந்துவிட்டாயே! உன் புத்தியை மெச்சவேண்டியதுதான்!" என்று சொன்னவள், அடுத்த அடியில் தன் துயரத்தைக் கொட்டிவிடுகிறாள்:

"கைக்கரும்பென்ன? கணையென்ன? நீ யென்ன?
மன்மதா-இந்தச்
செக்கரும் பாவி நிலவுமே போதாவோ! மன்மதா."

நிலவு தோன்றிவிட்டால் உலகத்திற்கே இன்பம். ஆனால் காதலர்களுக்கு இன்பம் நிறைந்த துன்பம்; அதாவது ஊடல் போல. இந்த உலகத்தில் சந்திரன் இல்லாவிட்டால் எப்படியிருக்

கும்? உலகமே வெறும் பாலைவனமாக இருக்கும். மன்மதன் என்ற கற்பனை புருஷன் தோன்றியிருக்கமாட்டான்.

* * *

ஒருவன் உணவே மற்றவனுக்கு விஷம் என்பது பழமொழி. நிலவைப்பற்றி ஒருவனுக்கு எண்ணங்கள் எழுவதுபோல அடுத்தவனுக்கு உண்டாகாது. வேறு அதிக தூரம் போவானேன்? இதுவரையும் சாதாரண நிலவாக இருந்தது, இப்பொழுது ஒரு தினுசாக எனக்குப் படுவானேன்? என்னால் சொல்ல முடியவில்லை; பூச் சொரிந்த அதே நிலவுதானா?

இப்பொழுதுள்ள இதே சந்திரன், இந்த ஊரில் யாரையாவது தன் வசப்படுத்தியிருக்கலாம். ஊரில் இல்லாவிட்டாலும் உலகத்தில் ஒருவனைவது இதற்கு அடிமைப்பட்டிருக்கலாம். (யாரோ... மாடிக்கு வரும் காலடிச்சப்தம் கேட்கிறது......யாராக இருக்கலாம்? வரட்டும்; பாட்டு ஒன்று ஞாபகத்தைக் கிளறுகிறதே.)

"ஊரைச் சுடுமோ! உலகந் தனைச்சுடுமோ!
ஆரைச் சுடுமோ! அறியேனே—நேரே
பொருப்புவட்ட மானநகிற் பூங்கொடியி ரிந்த
நெருப்புவட்ட மான நிலா."

என் கண்களுக்கு அந்தப் 'பாவி நிலா' நெருப்புவட்டமாகத் தோன்றியது. உள்ளம் திசைகெட்டு ஓடியது. நிலவில் நான் மயங்கிவிட்டதால் என்னைக் கண்ணியக் குறைவாக நினைத்துக்கொள்ளலாம். பேஷாக நினைத்துக்கொள்ளுங்கள். லோகநாயகரான ராமபிரானே அப்படி இருந்திருக்கிறார்.

ஸ்ரீராமபிரான் கலியாண சமயத்தில் தற்செயலாக ஒருநாள்—நான் இன்று பார்த்ததுபோல—சந்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தாராம். நிலாவானது அவருக்கு விஷம் வெள்ளை வடிவத்தில் பொங்கிவருவதாகத் தோன்றியதாம். எனக்கு நெருப்பாகத் தோன்றியது ஸ்ரீராமனுக்கு விஷமாகத் தோன்றியது என்பதை,

"கொள்ளை கொள்ளக் கொதித்தெழும் பாற்கடல்
பள்ள வெள்ளம் எனப்பட ரும்நிலா
உள்ள உள்ள உயிரைத் துருவிட
வெள்ளை வண்ண விடமுமுண் டாங்கொலோ!"

என்னும் செய்யுள் மூலமாகக் கம்பர் நமக்குச் சொல்லியிருக்கிறார். லோகநாயகர் பாடே அப்படி யென்றால், கேவலம் மனிதப் பூச்சியாகிய என் பாடு எப்படி?

இதற்குள் மாடியை நோக்கி வந்த காலடிச்சப்தம் நெருங்கி விட்டது. "ஏது, இன்றைக்கு ஒருநாளும் இல்லாத திருநாளாகப் பாட்டு?" என்று கேட்டுக்கொண்டு கற்பகவல்லி வந்தாள். அவள் சொல்லியதெல்லாம் அமுதம்போல இருந்தது. சொல்லிவிட்டுச் சிரித்தபோது முல்லைச்சிரிப்பின் இலக்கணம் கண்டேன். பாலைப் பொழியும் நிலவில் என் கோலக் கிளிமொழியும் வந்துவிட்டாள்.

அடடா! அவள் நடையில்தான் என்ன அழகு! இந்த நாலு வருஷமாக அவளுடைய அன்னநடை எங்கே இருந்தது? விழிக் கொரு சிமிட்டும் வெளிக்கொரு பகட்டுமாய் நடக்கிறாளே!

"ஒய்யார மாகக்—கற்பகவல்லி
ஓவியம் போலே வந்தாள்
உல்லாச மாய்ரதிபோல்—கற்பகவல்லி
ஊர்வசியும் நாணவந்தாள்."

இவ்வாறு நான் பாடினேன்; பக்கத்தில் அவள் அமர்ந்தாள். இதற்கு முன் காணக்கிடைத்திராத அழகெல்லாம் கண்டேன். அவற்றையெல்லாம் விட இன்றுதான்,

"நிலவுசெய்யு முகமும்—காண்பார்
நினைவழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும்—தெய்வக்
களிதுலங்கு நகையும்"

என்ற கவியின் அர்த்தத்தை நிதர்சனமாகக் கண்டேன்.

* * *

அமாவாசை இரவில் வெண்ணிலாவைக் காணமுடியுமா? முடியும். வானத்தில் காணமுடியாது. தமிழ்க் காவியச் சோலையில் நுழைந்தால், மூன்றாம் பிறைச்சந்திரனைக்கூடப் பார்க்கலாம்; முழு மதியைப் பகல் நேரத்திலும் கும்மிருட்டிலும் பார்க்கமுடியும். பார்த்தபின் இப்படித்தான் சொல்வோம்:

"பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே-உன்றன்
பக்கம்வந்து சேருவேனே வெண்ணிலாவே."

: எதிரி :

* பி. வி. சுப்பிரமணியன் *

1

'யாரது? யாராக இருக்கமுடியும்?'

ஸ்ரீகாந்தன் பிரித்துக் கையிற் பிடித்துக்கொண்டிருந்த புஸ்தகத்தின்மேல் அவன் அக்கரையற்ற பார்வை மிதந்து சென்று கொண்டிருந்தது. அனுவசியமான சம்பந்தமற்ற வார்த்தைகள், கேள்விகள் காலையில் வந்த கடிதத்தின் வரிகளோடு அப்படியே வந்து புஸ்தகத்தில் சேர்ந்துகொண்டன.

சீனுவைப்பற்றிக் கவலையில்லை; அப்படியே அவனுகவே இருந்தாலும் அவனை எதிரி என்று ஸ்ரீகாந்தன் நினைக்கமுடியாது. மேலும் வந்த கடிதத்தில் சீனுவைப்பற்றிய பிரஸ்தாபமே இல்லாதது அந்த விஷயத்தைச் சந்தேகத்திற்கே இடமில்லாமல் செய்துவிட்டது. அதோடு கல்யாணியே ஒரு காலத்தில் 'சீனுவைக் கல்யாணம் செய்து கொள்ளவேமாட்டேன்' என்று சொல்லியிருக்கிறுள்.

ஸ்ரீகாந்தனுக்கும் கல்யாணிக்கும் உள்ள பரஸ்பர அன்பைப் பற்றி அவனுடைய நண்பர்கள் எல்லோருக்குமே ஓர் அபிப்பிராயம் உண்டு; ஒரு முடிவான தீர்மானமென்றுகூடச் சொல்லலாம். எனவே போன சித்திரையிலேயே கல்யாணியை முத்துவிற்குக் கொடுப்பது என்ற பேச்சு நடந்தபோது ஸ்ரீகாந்தனுக்கு முளைத்திருந்த புது 'எதிரி'யைப்பற்றி நண்பர்களுக்குள் விவாதம் நடந்தது. ஸ்ரீகாந்தன்கூட, தம் உரிமை எல்லையைத் தாண்டி அவளிடமிருந்து அதிகமாக எதிர்பார்ப்பவர்களிடம், தன்னுடைய எதிரி என்ற உணர்ச்சியோடுதான் நடந்து கொண்டான்.

இது நண்பர்களுக்குள், சீனு, முத்து, சின்னச்சாமா இவர்களடங்கிய ஒரு தனிக் கூட்டத்தினுள் உள்ள பிரச்னே. இன்னும் அப்பா அம்மா முதலியோர் உள்ளிட்ட ஊரறிந்த விஷயமாகப் போய்விடவில்லை.

எதிர்க்கட்சியின், முக்கியமாக அப்பாவின் ஆட்சேபணை, கல்யாணி சமவயதுப் பெண் என்பது. அதோடு இரண்டொரு குட்டிக் காரணங்கள்; அவ்வளவு படித்த பெண், நாகரிகத்தின் மறுமலர்ச்சி, ஒரு ஸம்ஸாரியின் வீட்டில் இருந்து வேலை வெட்டி செய்யவும்

பற்றுத் தேய்க்கவும் அடுத்த குட்டை, ஊற்று இவைகளிலிருந்து ஜலம் கொண்டு வரவும் இவைபோன்ற காரியங்களுக்கும் அவ்வளவு ரஸப்படமாட்டாள்.

உண்மையைப் பார்க்கப்போனால் ஸ்ரீகாந்தன் கல்யாணியைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவுமில்லை; அம்மா, தகப்பனர் முதலியவர்கள் அவனைக் கேட்கவுமில்லை. ஆனல் விஷயம் என்னவோ அவர்களுடைய பேச்சு நடுவில் வந்து அவர்களாகவே அதை யோசிக்க மறுத்து விட்டார்கள் என்பதுதான் ஸ்ரீகாந்தன் வரைக்கும் எட்டிய செய்தி. அதைத்தவிர அவனுக்கும் கல்யாணிக்கும் உள்ள பழக்கமோ, அல்லது அவர்களுக்கிடையில் உலவும் எண்ணங்களோ எவருக்கும் தெரியா; தெரியக் காரணமும் இல்லை.

அம்மாவின் உணர்ச்சிகளே தனி. 'சீரும் செனத்தி'யுமாய்க் கண் குளிரச் செல்வத்தோடு வரும் ஒரு லட்சுமியைக் கல்யாணம் செய்து பார்த்து விடவேண்டும் என்பது. இவ்வளவு ஆசைகளுக்கு நடுவில் ரிடையர்ட் தாலுகா குமாஸ்தாவின் கடைசிப்பெண் கல்யாணியின் ஞாபகம் அவர்களுக்கு வராததில் ஆச்சரியமொன்றுமில்லை. உள்ளூர் உயர்தரப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயருடைய உபயம், அவள் சம்பளமில்லாமல் படித்தது.

கடியாரம் அடித்த பன்னிரண்டாவது மணியின் சப்தத்தில் ஸ்ரீகாந்தன் உலுக்கி விழுந்து எழுந்திருந்தான். இருக்கும் வேலைகளுக்கு நடுவில் கடந்த நாட்களைப்பற்றி என்ன பைத்தியக்கார யோசனை? 'அம்மாவே சொல்லுவாள்......'

மறுபடியும் அந்த நினைவு. தாங்கமுடியாத வலியினல் 'ஸ் ஹா' என்று சொல்லப்போகிறவனைப்போல விகாரமடைந்த முகத்தின் கீழிருந்து பழைய நினைவுகள் காலத்தைக் கடந்து சென்றன.

நூதனமாக வந்த பெண்வீட்டுக்காரர்களால் அவனுடைய அப்பாவுக்குத் திருப்தி உண்டானது மாத்திரமல்ல; அவனுடைய தாய்க்கும் ஒரு சமாதானம் உண்டாயிற்று. ஸ்ரீகாந்தனுடைய மேல்படிப்புச் செலவுகளைப் பெண்வீட்டார் ஒப்புக்கொண்டார்கள்.

பிறகு திடீரென அம்மா இறந்து விட்டாள்.

* * *

கல்யாணிக்குக் கல்யாணம் என்று நண்பனிடமிருந்து வந்திருந்த கடிதத்தை எடுத்து அலட்சியமாக மேஜைக்குள் போட்டு மூடிவிட்டு வெளிக்கிளம்பினன் ஸ்ரீகாந்தன்.

2

அன்று முழுவதும் அவன் நிலைகெட்டுத் திரிந்தான். உறைக்காத வெயிலில் மாமரத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு இரண்டு

கரிச்சான் குருவிகள் வாழ்க்கையின் கீதத்தைப் பாடிக்கொண்டிருந்தன. அவன் புரியாமல் உணர்ச்சியற்று அவற்றைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

அங்கும் பலாத்காரந்தான் நிலை நாட்டும் சக்தி போலிருக்கிறது. வேறொன்று—இன்னும் பெரியது—வந்ததும் அவைகளில் ஒன்று பறந்து போய்விட்டது. அதற்குக்கூட எதிரி! மறுபடியும் குருவிகள் பாடத்தொடங்கின.

வாழ்க்கையைப் பகைப்புலனில் வைத்து ஓர் உணர்ச்சி நாடகம் நடித்துவிட்டு அவை போய்விட்டன. அந்த வெற்றிச் சின்னத்தின் சக்தி அவனிடம் இருக்கிறதா? யாரது? அவனுக்கு வந்து வாய்த்த எதிரி யாராக இருக்கமுடியும்?

அந்த எண்ணத்தைப் போக்கடிப்பதற்காக மறுபடியும் வேகமாக நடக்க ஆரம்பித்தான். குறிப்பில்லாமல் வழக்கமாகக் கடந்து போகும் அதே குளம், புளியமரச் சாலை. ஒவ்வோர் எட்டுக்கும் குதித்து எழுந்திருக்கும் ஒரு கேள்விக்குறி, எதிரில் தாவி நின்று சிரித்தது. யாரது?

மகாமுட்டாள்தனமான கேள்வியைக் குரங்குப்பிடியாகப் பிடித்து ஊசலாடிக்கொண்டிருந்தது மனக்குரங்கு. எந்த ஊரிலோ, யாரோ! திடீரென்று ஓர் உண்மை வெளியாயிற்று. ஊருக்குள் யாராவதாக இருந்தால் அவன் எழுதியிருப்பான். ஆனால்....

பொதுவாக விவாகம் பெண் வீட்டில்தான் நடக்கும். ஆகையால் இதுவும் கிராமத்தில் நடக்குமென்ற ஆவல். 'பரீட்சை ஆரம்பமாவதற்குள்ளேயே போய் வந்துவிடலாம். அங்கே அப்பாவுக்கு என்ன பதில் சொல்லுவது?' என்ற எண்ணம் வந்தது அவனுக்கு.

3

"விவாகத்தை நிச்சயித்துவிட்டேன்" என்ற வார்த்தைகளுக்கு அர்த்தமே புரியாததுபோல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீகாந்தன்.

கடைசியில் இரண்டரை வருஷங்களாக அவன் அப்பாவோடு போராடியது வீண் போகவில்லை. அதை ஏற்றுக்கொண்டார். அவர்கள் குடும்பத்திற்கே அப்பாவின் மறுவிவாகம் ஒரு விடிவு காலம்.

கடைசித்தங்கை குஞ்சுவைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்குத் தன் துரதிருஷ்டத்தின் நினைவுகளோடு தாயின் ஞாபகம் வரும். தாங்கமுடியாத வேதனை அடைவான். தாயில்லாக்குழந்தை என்பார்கள்; அந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் குஞ்சுவைப் பார்க்கும்பொழுதுதான் ஸ்ரீகாந்தனுக்கு ஒருவாறாக விளங்கிற்று.

அப்பா! நல்ல காலத்தின உதயம்.

கல்யாணி?

அவளுடைய நினைவையே அழிக்கமுயலுவதைப்போலச் சீட்டியடித்துக்கொண்டே வெளிக்கிளம்பினான். ஆனால் வெகு வேகமாக வந்து கொண்டிருக்கும் பரீட்சையின் ஞாபகம் வந்ததும் உட்கார்ந்துகொண்டு புஸ்தகத்தை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தான். "அக்பரின் சீர்திருத்தங்கள்" என்ற தலைப்பு.

"கல்யாணி."

"எதிரி."

"யாரது?"

அவன் மனம் பாடத்தின்மீது செல்லவில்லை. புஸ்தகத்தைத் தூக்கி எறிந்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்தான்.

4

ஏக மழை. உடைப்புக்கள். கண்கள் பார்த்த இடமெல்லாம் ஒரே வெள்ளம். இரவு எட்டு மணி ரெயில் மறுநாள் காலை பதினொன்று வரையில் புறப்பட முடியவில்லை. கிராமத்திற்குப் போகும் வழியில் தண்டவாளங்களே வெள்ளத்தில் போய்விட்டதாக ஸ்டேஷன் மாஸ்டர் தெரிவித்தார். வேலைகள் வேகமாக நடந்துகொண்டிருந்தன.

பரீட்சை எழுதிவிட்டு ராத்திரி ரெயிலுக்கு வந்தவன் துடிதுடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ரெயில் புறப்பட்டது.

சரியான சமயம். நேராகப் போய்விட்டால் சாயங்காலம் ஆறரை மணி, ஏழு மணிக்கு ஊர் போய்ச் சேர்ந்துவிடலாம். அப்பாவின் நிச்சயதார்த்தத்திற்கு இயற்கையின் எதிர்ப்பு இல்லாவிட்டால் முதல் நாளே ஊரில் இருக்கலாம். அதை எதிர்பார்த்துத்தான் அப்பாவும் அந்த நாளைக் குறிப்பிட்டிருந்தார்.

"கல்யாணி!"

சட்டென்று திரும்பிப் பார்த்தான் ஸ்ரீகாந்தன். பின்னால் இருந்தவன் ஜன்னலுக்கு வெளியே எட்டிப்பார்க்கும் தன் பெண் குழந்தையை எச்சரித்துக்கொண்டிருந்தான்.

'அடே சனியனே! எங்கே போனாலும் கல்யாணியா?'

ஊர் போய்ச் சேரும்போது ஸ்ரீகாந்தன் எதிர்பார்த்ததற்கும் மேலாக இருபத்து நான்கு மணிநேரம் தாமதமாக வந்திருந்தது ரெயில். மனவெளியில் மகாகோரமான புயல். ஸ்ரீகாந்தன் ரெயிலை விட்டு இறங்கிப் புறப்பட்டான்.

தூரத்தில் நாயனத்தின் சப்தம் கேட்டது. மனோகா ராகம். அந்த ராகமும் கல்யாணி!

வீடு வந்துவிட்டது.

சில எட்டுக்கள்.

ஊஞ்சலில் இருவர் உட்கார்ந்திருப்பது பிரகாசமாகத் தெரிந்தது. அப்பாவின் அருகில் மணப்பெண். யாரது?

கல்யாணி!

ஸ்ரீகாந்தனுக்குப் புல்லரித்துக் கொடுத்தது. ஊஞ்சல் ஆடிற்று.

அவன் உள்ளமும் ஆடிற்று.



: "வெறும் சோடா" :

* கே. ஸீ. வீரராகவையர், எம். ஏ., எல். டி. *

பொங்கல் தினம். அருணன் உதயமானான். பாட்டிகளும் தாய்மார்களும் குழந்தைகளும் எழுந்து தெருவெல்லாம் கோலமிட்டார்கள். பொழுது விடிந்தது. வீட்டினர் மங்களஸ்நானம் செய்து உத்தராயணம் வருவதைக் கொண்டாடுகிறார்கள். மஞ்சள் மாலை சூட்டிய பானை அடுப்பில் ஏறியது; சர்க்கரையும் அரிசியும் பாலும் ஜலமும் பானையில் நிரம்பிக் கொதித்தன. "பொங்கலோ பொங்கல்", "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று சாயாதேவி சமேத சூரியநாராயணபகவானுக்கு ஆராதனை ஆயிற்று. மக்கள் விருந்து அருந்தி விடாயாற்றிக்கொண்டிருந்தார்கள்.

ஊஸ்மான் ரோட்டில் 17-ஆம் எண்ணுள்ள வீட்டுக்கு மாதவி மாலை இரண்டு மணிக்கு வந்தாள். அங்கு மாலதி தன் உறவினர்களுடன் 'கேரம்' ஆடிக்கொண்டிருந்தாள். "பொங்கலாயிற்று?" என்று குசலம் விசாரித்துக்கொண்டே மாதவி மாலதியின் பக்கத்தில் உட்கார்ந்தாள். "இன்று பொங்கலாயிற்றே. ம்யூஸியத்துக்குப் போய்வருவோமா?" என்று மாதவி கேட்டாள். பொங்கல் ஆனந்தம் பொங்க, "அங்கே கூட்டம் பலமாயிருக்கும். கூட்டத்தையும் பார்க்கலாம். தென் இந்தியாவில் பலகாலமாக வளர்ந்த சிற்பக்கலையின் சின்னங்களைப் புதிய மாளிகை ஒன்றில் வரிசைக்கிரமமாக வைத்திருக்கிறார்களாம்; அவைகளையும் பார்த்து வரலாம்" என்று சொல்லிக்கொண்டே தாயினிடம் விடைபெற்றுக்கொண்டு மாலதி மாதவியுடன் புறப்பட்டாள்.

இருவரும் மேரி அரசி கலாசாலை மாணவிகள். மாலதி, எம்.ஏ., பரீக்ஷைக்கு வாசிப்பவள். மாதவி 'இண்டர்' வகுப்பில் வாசிப்பவள். இருவரும் பஸ் ஒன்றில் ஏறி ம்யூஸியம் அடைந்து உள்ளேயுள்ள பழைய காட்சிகளைப் பார்த்துவிட்டுப் புதிய சிற்ப உருவங்களையும் பார்த்து வெளியே வந்தனர். பின்னர் பீபிள்ஸ் பார்க்கிலுள்ள உயிர்ப்பிராணிகளையும் பார்த்து வரலாமென்ற யோசனை உண்டாயிற்று. "அப்படியே" என்று இருவரும் ஏகமனதாய் அதை ஒப்புக்கொண்டு ரோடில் சேர்ந்தார்கள்.

பஸ் வரவில்லை. நிமிஷங்கள் மணியாய்த் தோன்றின, ஞாபகம் உயிர்ச்சாலையில் இருந்ததனால். இருவரும் நடையைத் தட்டிவிட்

டார்கள். நடை வேகம் கொண்டது. சீக்கிரமே உயிர்ச்சாலையில் வந்து புகுந்தார்கள். புலி, சிங்கம், கரடி, யானை, மான், புரு, மந்தி, மயில் முதலியவைகளைக் கண்குளிரப் பார்த்துவிட்டு வெளியே வந்தார்கள். நடந்த சிரமம் தீர்வதற்காக மூர்மார்க்கெட்டில் ஒரு சோடாக்கடையில் வந்து, "இரண்டு சோடா" என்று சொல்லிக் கொண்டே ஒரு மேஜையின் அருகிலுள்ள இரண்டு நாற்காலி களில் உட்கார்ந்தார்கள்.

"அம்மணி, ஐஸ் சோடா தரவா? கோலா தரவா?" என்று ஒரு பையன் கேட்டான்.

"வெறும் சோடா போதும்; இரண்டு கிளாஸில் ஊற்றிக் கொடு" என்றாள் மாலதி.

மணி ஐந்திருக்கும். ஜனங்கள் திரள்திரளாகக் கூடிப் பிரி கிறார்கள். விளையாட்டுச் சாமான்களை நாடி நிற்கும் குழந்தைகள் ஒருபுறம்; காய்கறிக்கடையில் குழுமி யிருக்கும் ஸ்திரீகள் ஒருபுறம்; பூட்ஸ், டை, ஹாட் முதலியவைகளைத் தேடித் திரியும் புருஷர்கள் ஒரு புறம்; பூமியைச் சுற்றும் சந்திரன் போல, இவர்களைச் சூழ்ந்து நிற்கும் கூடைக்காரிகள் ஒரு புறம். இப்படிப்பட்ட கும்பலின் மத்தி யில், சோடா கிளாஸ்களை மேஜையின் மேல் வைத்தான் பையன்; கிளாஸ் களில் உறிஞ்சு குழாய்கள் இருந்தன. இருவரும் ஒருமடக்குச் சாப்பிட்டு விட்டு, "அம்மாடி!" என்று சிறிது இளைப்பாறினார்கள்.

சோடாவில் உறிஞ்சுகுழாய்

மாதவி: வெறும் சோடா என்றால் என்ன?

மாலதி: உன் வகுப்பில் இன்னும் அதைப்பற்றிக் கற்றுக் கொள்ள வில்லையா?

மாதவி: இப்பொழுதுதான் குலோரின் வாயுவைப்பற்றிக் கற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறோம். சோடாவை எப்படிச் செய்கிறது?

மாலதி: சரிதான் கேள். முதன் முதலில் சுத்தஜலத்தை ஒரு சீசாவில் விட்டு, அது நிறையக் கரியமில வாயுவைச் செலுத்தி அதிகப் பளுவில் அமுக்கினால், கரியமிலவாயு அதிகமாய்க் கரையும். சீசாவில் உள்ள கோலியும் உள்வாயுவின் அழுத்த மிகுதியினால் சீசாவின் வாயை அடைத்துக்கொள்ளும்; உள்ளே உள்ள வாயுவும்

வெளியே போகமுடியாமல் அடைபடும். அதைப் பல நாள் வைத்து விற்கலாம்.

மாதவி: நன்ருயிருக்கிறது! ஜலமும் கரியமிலவாயுவுந்தானு சோடா வென்பது? அதற்கு எப்படிச் சோடா என்று பெயர் வந்தது?

மாலதி: முதன் முதலில் ரொட்டிச் சோடா என்ற பொருளி லிருந்து கரியமிலவாயுவைத் தயாரித்தார்கள். அப்பொருளின் பெயர் அதிலிருந்து வந்த வாயு அடைக்கப்பட்ட தண்ணீருக்கும் ஆகிவிட்டது. வாஸ்தவத்தில் சோடாச் சீசாவில் சோடாவே இல்லை தான், பழக்கந்தானே பிரதானம்? முதலில் வைத்த பெயர் நிலைத்து விட்டது. நாம் கூட 'அம்பட்டன் வாராவதி' என்று சொல்லவில்லையா? அதற்கும் அம்பட்டனுக்கும் என்ன சம்பந்தம்? அது மாதிரிதான், அரண்மனைக்காரத்தெரு என்பதும். அரண் மனைக்கும் அந்த வீதிக்கும் பாதராயணசம்பந்தந்தான். ஆர்மீனியர் என்ற ஒரு வகுப்பினர் அங்கே குடியிருந்தனர். ஆர்மீனியர் தெரு அரண்மனைக்காரத்தெரு ஆகிவிட்டது. இன்னும், பென்சில்கள் 'பிளாக்லெட்' பென்சில் எனப்படுகின்றன. ப்ளாக்லெட் என்பது காரீயம். காரீயத்துக்கும் பென்சிலுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. உன் வகுப்பில் ரசாயனசாஸ்திரம் படிக்கிருயே; இந்த மாதிரி உதாரணம் வரவில்லையா?

மாதவி: ஞாபகம் வருகிறது. இங்கிலீஷில் பிராணவாயுவுக்கு 'ஆக்ஸிஜன்' என்று பெயர். ஆக்ஸிஜன் என்ருல், 'அமிலம் செய் வது' என்பது தாதுப்பொருள். ஆனல் சில அமிலம் செய்வதற்கு ஆக்ஸிஜன் வேண்டி யதே இல்லை. இருந்தாலும் அந்தத் தப்புப் பெயரை ரசாயன சாஸ்திரத்துக்கு நல்ல அஸ்திவாரம் போட்டவராகிய லவாய்சியரே கொடுத்தார். 'வல்லான் வகுத்ததே வாய்க் கால்'. அது நிலைத்து விட்டது. ஆனல் அவர்காலத்தில் விஞ்ஞானவளர்ச்சி அவ் வளவுதான் இருந்தது.



சோடாச்சீசாவும் கரியமிலவாயுக் குமிழ்களும்

மாலதி: ரொம்ப சரி, சோடாச்சீசாவின் மூடியை நீக்கியவுடன், ஏன் குமிழ் குமிழாக வாயு வருகிறது?

மாதவி: இப்பொழுதுதானே சொன்னுய்? கரியமிலவாயு அதிக அழுத்தத்தில் அடைபட்டிருக்கிறது; மூடி நீங்கியவுடன், அதிகமாய்க் கரைந்திருந்த வாயு குமிழ்களாக வெளிக்கிளம்புகிறது.

மாலதி: கிளாசைப் பார்! என்ன ரமணீயம்! தூய நீர், கொந்தளிக்கும் வாயு, நீர்மேற் குமிழ்கள்; பக்கங்களில், வெளிவராத வாயுக் குமிழ்கள் முத்து முத்தாய் ஒளிர்கின்றன. உறிஞ்சுகுழாயால் ஒரு கலக்குக் கலக்கினல், தடபுடலாய்ப் பலபல குமிழ்கள் கிளம்புகின்றன. என்ன அற்புதம்!

மாதவி: இந்த வாயுக்கூட வாயுக்கள் நீரில் கரையும் விதிகளை அனுசரிக்கவேண்டியதுதானே?

மாலதி: சந்தேகமென்ன? நம்மைச் சுற்றி இருக்கும் ஆகாசக் காற்றின் பளு ஓர் அட்மஸ்பியர் என்று சொல்வது வழக்கம். சோடாத்தண்ணீரைச் செய்யும்போது எட்டு அட்மஸ்பியர் பளுவில் கரியமிலவாயு தண்ணீரில் கரையும்; ஆனல் கோலி உருண்டை மேல்வாயை அடைக்கும்போது மூன்று அட்மஸ்பியர் பளுவுக்கு வந்து விடுகிறது. நாம் அவைகளை விரும்பும்வரையில் கடைகளில் அப்படியே அவை கிடக்கின்றன. கடைக்காரன் கோலியை உள்ளே தள்ளும்போது, அது சாதாரண ஓர் அட்மஸ்பியர் பளுவுக்கு வந்துவிடுகிறது; கரியமில வாயுக்குமிழ்கள் உடனே தம் தம் என்று குதித்துக் கிளம்புகின்றன.

மாதவி: ஓர் அணுக்காசு கொடுத்து இதையா வாங்குகிறேம்?

மாலதி: ஆமாம். ஓர் அணுக் காசுக்கு ஆழாக்குச் சுத்த ஜலத்தையும் மூன்று ஆழாக்குக்கரியமிலவாயுவையும் வாங்குகிறேம். சீசாவைத் திறந்ததும் பாதிவாயு வெளியே கிளம்பிவிடுகிறது. ஆனல் இந்தக் கரியமிலவாயு, காற்றைவிடச் சரிக்குச் சரி கனம் அதிகம். ஆகையினலே, கிளாசில் முதலிலிருந்த காற்றைத் தூரத் தள்ளிவிட்டு, அது அங்கே பயமின்றித் தங்கிவிடுகிறது. இதோ பார், ஒரு வேடிக்கை: பையா, ஒரு நெருப்புப் பெட்டி கொடு. (பையன் ஒரு பெட்டி கொண்டுவந்து கொடுக்கிறன்). இதோ, ஒரு நெருப்புக் குச்சியைக் கீறி, இந்தக் கிளாசின் உள்ளே கொண்டு போகிறேன்.

மாதவி: ஐயோ, அணைந்து விட்டதே. ஆனல் சாதாரணக் கிளாசில் அப்படி அணையாதா?

மாலதி: பாரேன். (சாதாரணக் கிளாஸ் ஒன்றை எடுத்து அதில் நெருப்புப்பற்றிய குச்சியைச் செலுத்தும்போது அணையாமல் எரிகிறது.) இதில் இன்னும் ஒரு விநோதம்: இட்டலி நாட்டில் நேப்பிள்ஸ் நகரில் ஒரு குகை இருக்கிறது. அதன் அடித்தளத்தில் சில வெடிப்புக்கள் இருக்கின்றன; அவைகளிலிருந்து கரியமிலவாயு வந்துகொண்டேயிருக்கிறது. குகையில் படிக்கட்டு மாதிரி இருக்கிறது. அதன் வழியாய் அதிகமான கரியமிலவாயு வழிந்து

விழுகிறது. ஒரு சமயம் ஒரு மனிதன் தன் நாயுடன் அதற்குள் போனான். சிறிது நேரத்திற்குள், நாய் மூச்சுத்திணறி மருண்டது; கரியமிலவாயுத் தேக்கத்தில் மூழ்கி இறக்க நேரிட்டது. ஆனால் கரியமிலவாயு மட்டத்துக்கு மேல் நிமிர்ந்து நின்றதால், மனிதன் மட்டும் பிழைத்தான்.


நேப்பிள்ஸ் நகரத்துக் குகை

மாதவி: கரியமிலவாயு காற்றைவிடக் கனமானது; பொருள்கள் எரிவதை அணைத்துவிடும். ஜீவன்கள் உயிரை மாய்த்துவிடும். இன்னும் வேறு என்ன குணமுண்டோ?

மாலதி: இந்தக் குணங்களை உபயோகித்துத்தான், தீயணைக்கும் கருவிகளை நம் காலேஜ்களிலும் பொதுக் கட்டிடங்களிலும் வைத்திருக்கிறார்கள்.

மாதவி: கோமாளிக்குல்லா மாதிரி சிவப்பாய் நமது காலேஜ் வராந்தாக்களில் வைத்திருக்கிறார்களே, அவைதாமே தீயணைக்கும் கருவிகள்?

மாலதி: ஆமாம், தீ ஆபத்து வந்தபோது, அவற்றையெடுத்துத் தரையில் தலைகீழே ஒரு தட்டுத்தட்டினால், அவை அமுங்கி உள்ளே இருக்கும் கண்ணாடிக்குப்பியை உடைக்கும். அதிலுள்ள கந்தகாமிலம் (சல்ப்யூரிக் ஆஸிட்) அதைச் சுற்றியுள்ள சோடாக் கரைசலுடன் கலந்து, கரியமிலவாயுவை மிகுதியாக உண்டுபண்ணும். அது கருவியின் சுருங்கிய வாய்வழியாக அதிவேகத்துடன் கரைசலுடன் கலந்து வெளிவரும். தீப்பற்றி எரியுமிடத்தில் அதைக்காட்டினால், ஜலமும் வாயுவும் தீயை மூடிக்கொள்ளும். கரியமிலவாயு கனம் என்று பார்த்தோமே, இப்பொழுது; ஆகையினால் எரியும் வஸ்துவைச் சுற்றியுள்ள காற்றைத் தள்ளிவிட்டு, தான் ஒரு போர்வையாய்க் கவிந்துகொள்ளும். கரைசலும் எரியும் வேகத்தைத் தணிக்கும். இப்படி உஷ்ண நிலையும் குறைந்து, பிராணவாயுவும் எரிவதற்கு இல்லாமற்போகவே, தீயும் அணைந்துவிடும்.


தீயணைக்கும் கருவி

மாதவி: இதுதானா தீயணைக்கும் கருவியின் மர்மம்! விஷயம் நன்றாய்த் தெரிகிறது. தேவலை. வெறுஞ் சோடா சாப்பிட உட்கார்ந்து விஞ்ஞான விஷயங்களைப் புகட்ட ஆரம்பித்து விட்டாயே.

மாலதி: விஞ்ஞான விஷயமென்றால், காலேஜ், பள்ளிக்கூடம், லாபரட்டரி என்ற இடங்கள் வேண்டுமென்று நினைக்கிறார்கள். அப்படியன்று. விஞ்ஞானம் விஷ்ணுமாதிரி, தூணிலும் இருக்கிறது; துரும்பிலும் இருக்கிறது. அதை விண்டுகாட்டப் பிரகலாதனைப் போன்ற விஞ்ஞானிகள் தாம் வேண்டும்.

மாதவி: வீட்டுக்குப் புறப்படுவோமா?

மாலதி: போவோம், என்ன அவசரம்? நாளைக்குக் காலேஜ் இல்லை. மெள்ளப் போவோமே. இன்னும் ஒரு விஷயம் கவனித்தாயா?

மாதவி: என்ன அது?

மாலதி: கவனி, ஓர் அணாக் கொடுத்துச் சோடா வாங்கினோமா? கடைக்காரப் பையன் சோடாச் சீசாவைத் திறந்து கிளாசில் சோடா ஜலத்தை ஊற்றித் தந்தானா? நாம் சாப்பிட்டது ஜலமும் கரியமிலவாயுவும் என்று கண்டோமா? என்ன காரியம் செய்தோம், பார்! நாமெல்லாரும், ஏன், ஜீவராசிகள் எல்லாமே இந்த இரண்டு பொருள்களைத்தான் அல்லும் பகலும் அனவரதமும் இடைவிடாமல் அவசியமில்லாத பொருள்கள் என்று வெளியிலே தள்ளிக்கொண்டிருக்கின்றோம். எந்த நிமிஷத்தில் அவையிரண்டும் வெளிவர நின்றனவோ, அதேநிமிஷத்தில் உயிரும் நீங்குகிறது; நமது உடம்பும் பிணமாய் விடுகிறது.

மாதவி: என்ன! என்ன! அப்படியா? ஆச்சரியமா யிருக்கிறதே!

'ஊதிப் பார்'

மாலதி: ஆமாம். நாம் வெளியே விடும் மூச்சில் இந்த இரண்டு பொருளுமே அதிகம். ஜலம் நீராவியாய் வெளியில் வருகிறது. ஒரு சிலேட்டை எடுத்து அதில் ஊதிப்பார். ஈரம் அதில் படியும். தெளிந்த சுண்ணாம்புத் தண்ணீரை ஒரு கிளாசில் விட்டு அதற்குள் இந்த மாதிரி ஒரு குழாய் மூலம் ஊதிப் பார். சிறிது நேரத்தில் தெளிந்த நீர் கலங்கி, பால் போல் ஆகிவிடும். இதுவே கரியமில வாயு இருப்பதைச் சோதித்து அறியும் வழி. ஆகவே, இவை

இரண்டும் நமது ஜீவன் நம்மிடத்தில் இருப்பதைக் காட்டும் சாக்ஷிகளாகும். இன்னும் கேள்: கடைசியில் உடம்பாகிய கட்டையை என்ன செய்கிறோம்? எரிக்கிறோம். அப்பொழுதும் இந்த இரண்டு வஸ்துக்களே கிடைக்கின்றன. இரண்டும் 'அகண்டமான அதுவுடன் அதுவாய்ப்' போய்விடுகின்றன. நம்கண் முன்னே இவைகள் நடந்தாலும், நாம் இவைகளை அறியாதவர் போல், மார்தட்டித் தோள் தட்டிக் கொக்கரித்து நினைக்கவொண்ணாத தீமைகளை நினைத்தும் செய்தும் செய்வித்தும் வருகிறோம்!

மாதவி: என்ன, பெரிய வேதாந்தத்துக்கு வந்து விட்டாயே!

மாலதி: வேதாந்தமும் விஞ்ஞானந்தான். மற்றொரு விஷயம் சொல்லி முடித்துவிடுகிறேன். இன்றைக்கு உயிர்ப்பிராணிகளையும் செத்தபிராணிகளையும் பார்த்ததனாலே, இவைகளெல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன. உனக்குச் சொல்லவேண்டும் என்ற ஆசையும் ஊறுகிறது. உனக்குச் சோர்வாயிருந்தால் நிறுத்திவிடுகிறேன்.

மாதவி: மாலதி, நிறுத்தாதே. மிகவும் ருசியாயிருக்கிறது. எனக்குத் தெரியாத விஷயங்களையெல்லாம் சொல்லுகிறாய். கரும்பு தின்னக் கூலியா? இந்த விஷயங்களை என்னால் விஞ்ஞான நூல்

பிராணிகளும் தாவரங்களும்

களிலிருந்து லகுவில் தொகுக்கமுடியாது. தயை செய்து சொல். கடைக்காரன் போ என்று சொல்லுகிறவரையில் இங்கே உட்கார்ந்து கேட்பேன்.

கடைக்காரன்: அம்மணி, சொல்லிக்கொண்டு போங்கள். நானும் கேட்டுவருகிறேன். எனக்குக் கொஞ்சம் படிக்கத்தெரியும். ஆனால் இந்த விஷயமெல்லாம் தெரியாது. சோடாத்தண்ணீரில் இவ்வளவு விஷயம் இருக்கிறதா!

மாலதி: அப்படியானால் கேளுங்கள். பாத்திரமறிந்து பிச்சை இடு என்று சொல்லியிருக்கிறது. நீங்கள் ரஸிகர்களாயிருப்பதால், உங்களுக்கு விஞ்ஞானப்பிச்சை கொடுக்கிறேன். நம் வீட்டில் அடுப்புகளில் கரியை எரிக்கலாம்; புகையை எரிக்கமுடியுமா? நாம் சாப்பிட்ட உணவிலிருந்து வரும் சோடா வாயுவையும் (கரியமில வாயு) சோடா ஜலத்தையும் (தண்ணீர்) திரும்பச் சாப்பிடமுடியாது. ஆனால் அவை தாவரவர்க்கங்களுக்கு உணவாகின்றன; தாவரங்கள் சூரியரச்மியின் சக்தியை உபயோகித்து, அவைகளை நாம் சாப்பிடக்கூடிய தான்யங்கள், பருப்புக்கள் முதலியவைகளாகவும், நாம் திரும்ப எரித்துச் சக்தியைப் பெறக்கூடிய மரங்களாகவும் மாற்றுகின்றன. ஆகவே நெய்யும் தொன்னையும் போலப் பிராணிகளும் தாவரங்களும் இருக்கின்றன. "புனரபி ஜனனம் புனரபி மரணம்" என்று ஜகத் விந்தை நிகழ்கின்றது. மேலும், இந்த நிகழ்ச்சியின் அற்புதம் தாவரங்களின் இலைகளில்தான் முதலில் அமைகிறது. சோடாவின் இருபாகங்கள் எவை?



இலையின் அற்புதம்

மாதவி: ஜலமும் கரியமிலவாயுவும்.

மாலதி: சரி. இப்படிப்பட்ட இரு பொருள்களும் இலைகளிலுள்ள துவாரங்களின் வழியாய் உட்சென்று, அங்கே சூரிய கிரணங்களின் உதவி கொண்டு ரசாயன மாறுபாட்டைஅடைந்து, நமக்குவேண்டிய உணவுப் பொருள்களாகவும், பிராணவாயுவாகவும் பிரிகின்றன. பிரிந்த பிராணவாயு வெளியில் புகுந்து நாம் சுவாசிப்பதற்கு உதவுகிறது; மற்றப்பொருள்கள் இலையிலிருந்து கிளைக்கும், கிளையிலிருந்து தண்டுக்கும் பரவுகின்றன. இந்த அற்புதத்தை விஞ்ஞானிகளால் இன்னும் தங்கள் சோதனைச்சாலைகளில் செயற்கை முறையில் செய்யமுடியவில்லை. இயற்கை அன்னையின் சக்தியே சக்தி! இன்னும் மனிதர்கள் சோம்பேறிகளா, உழைப்பாளிகளா என்பதைக் கூட இந்தச் சோடாப் பொருள்கள் மூலமாய் அறியலாம்.

மாதவி: அதெப்படி? நீ சொல்லிக்கொண்டுபோவதைப் பார்த்தால், "சர்வம் சோடாமயம் ஜகத்" என்று முடிவுகட்டி விடுவாய் போலத்தோன்றுகிறதே!

மாலதி: சாதாரணமாய்ச் சாப்பிட்டுச் சாப்பிட்டுச் சும்மா இருக்கும் ஒருவன் ஒருமணிக்கு ஓர் அவுன்ஸ் எடை கரியமில வாயுவை வெளியே விடுகிறான்; ஆனால் மரம் அறுப்பவன், மண் வெட்டுபவன், மலைமேல் சைக்கிளில் சவாரி செய்பவன், இவ்வாறு மெய் வருந்த உழைப்பவர்கள் பலர் சாதாரணமாய் ஒரு மணிக்கு ஐந்து அவுன்ஸ் எடை கரியமிலவாயுவை வெளியேவிடுகிறார்கள். ஆகவே சுறு சுறுப்பாயிருப்பவர்கள் அதிகப் பிராணவாயுவை உள்ளே சுவாசித்து அதிகக் கரியமில வாயுவை வெளியே விடுவார்கள். இப்படி, தினம் நிகழ்ந்தால் உடம்பு இறுகும்; பலம் அதிகரிக்கும்; அழகு வளரும்; நாமும் ஆரோக்கியமாயிருக்கலாம்.

கடைக்காரன்: அதனால்தான் பள்ளிக்கூடங்களில் தேகப் பயிற்சி விளையாட்டுக்களெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்களோ? ஐந்தில் வளைந்தது ஐம்பதிலும் வளையுமல்லவோ?

மாலதி: நாழிகை ஆகிவிட்டது. இன்னும் ஒரு விஷயம் சொல்லி முடித்துவிடுகிறேன். சோடாவைத்தான் வயிற்றில் ஏதாவது வேதனை செய்யும்போதும், டாக்டர்கள் உத்தரவிடும் போதும் இளைப்பாயிருக்கும்போதும் குடிக்கிறோம். அதில் உபயோகப்படும் கரியமிலவாயுவைச் சென்ற பத்துப் பதினைந்து வருஷங்களாய் அதிகப் பளுவிலும் குளிர்ச்சியிலும் இறுகச் செய்து கட்டியாக்குகிறார்கள். அந்தக் கரியமிலவாயுக் கட்டிக்குத்தான் 'ட்ரை ஐஸ்' என்று பெயர். அது வெகு குளிர்ச்சியையுடையது. அது (மைனஸ்) ருண 78 டிகிரி செண்டிகிரேட் உஷ்ண நிலையில் இருக்கும்; உருகித் திரவமாவதில்லை; அப்படியே கட்டி நிலையிலிருந்து வாயு நிலையை அடைகிறது. ஆஸ்டிரேலியா திராக்ஷைப் பழம், ஆப்பிரிக்கா ஆரஞ்சு, காலிபோர்னியா அத்திப்பழம் முதலிய பொருள்களையெல்லாம் இக்காலத்தில் இந்த ட்ரை ஐஸை உபயோகித்துத் தாழ்ந்த உஷ்ணநிலையில் காப்பாற்றி இறக்குமதி செய்கிறார்கள். மீன், இறைச்சி முதலிய உணவுப்பொருள்கள் இந்தக் குளிர்ச்சியில் காப்பாற்றப்பட்டுப் பல்லாயிர மைல்கள் சென்று பற்பல தேசங்களில் பரிவர்த்தனையாகின்றன. இன்னும், நமது நாட்டில் அகப்படும் மாம்பழம், ஆரஞ்சு, வாழைப்பழம் முதலியவைகளை இக்குளிர்ச்சியில் வைத்து நெடுநாள் காப்பாற்றலாம்.

மாதவி: ஆகவே, கரியமிலவாயு தாவரங்களில் உபயோகமாகிறது; ஜலத்தில் கரைந்து நமக்கு உபயோகமாகிறது. கட்டி ரூபத்தில் அது நம் உணவுப்பொருள்களை அழுகாமல் காப்பாற்றித் தருகிறது. நல்ல பொருள்தான் அது.

கடைக்காரன்: அம்மணி, இன்னும் ஒரு சோடா சாப்பிட்டுப் போங்கள். நான் கொடுக்கக்கூடிய கைம்மாறு அதுதான்.

: சிகிரியா :

* "இலங்கையர்கோன்" *

1

ஒரே தந்தையிடத்தில் ஜனித்த புத்திரர்கள்தாம்; ஆனால் அண்ணன் தம்பி இரண்டு பேருக்கும் இடையில் அமிர்தத்திற்கும் விஷத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம் இருந்தது.

வெள்ளை மனம் என்று சொல்வார்களே, அப்படி இருந்தது முகாலனுடைய உள்ளம். சாந்தமும் தயையும் அவனுடன் கூடப் பிறந்த குணங்கள். மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதித்துப் பேணும் கருணை வள்ளல் அவன். அவனுடைய கோமள ஹ்ரு தயத்தில் பொறுமை, துவேஷம் முதலிய துர்க்குணங்களுக்கு இடம் இல்லை. ஆனால் அவனுடைய தம்பி காசப்பன் அவனுக்கு முற்றும் மாறானவன். அண்ணனிடத்தில் இருக்கும் ஒவ்வொரு நல்ல அம் சத்திற்கும் நேர்மாறான கெட்ட அம்சம் தம்பியினிடத்தில் சரிவரப் பொருந்தியிருந்தது.

தந்தை தத்துசேனனுக்கும் இதன் மர்மம் விளங்கவில்லை. முகாலன் பட்டமகிஷியின் வயிற்றிற் பிறந்தவன் என்பதும், காசப்பன் இரண்டாம் ராணியின் வயிற்றிற் பிறந்தவன் என்பதும் உண்மையே. ஆனால் அதற்காக இவ்வளவு வித்தியாசமா?

காசப்பனுடைய துர்க்குணங்களை முளையிலேயே களைந்துவிட வேணும் என்று தந்தையும் எவ்வளவோ பாடுபட்டான். போதனை கள், சாதனைகள் ஒன்றும் பயனளிக்கவில்லை. பெரிய தவசீலரும் அறிவாளியுமான மகாவிஹாரைப் பிரதமபிக்கு தம் மற்ற அலுவல் களைக்கூடப் புறக்கணித்துவிட்டுப் புத்தபெருமான் அருளிச்செய்த அறவாசகங்களையும், அவருடைய முற்பிறவிகளின் லீலைகளைக்குறிக் கும் ஜாதகக் கதைகளையும் பிழிந்து எடுத்துக் காசப்பனுக்கென்றே பிரத்தியேகமாகச் செய்த போதனைகள் எத்தனை? எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆயின. தந்தையின் துயரம் மிகுந்தது. காசப்பனை முகாலனுடன் சேர்ந்து பழகவிடுவதே அபாயமாகப் பட்டது. பன்றியுடன் சேர்ந்த கன்றின் கதையாகி விட்டால்?

பிள்ளைகள் இல்லாமல் இருந்துவிடலாம்; அதனால் பாதகம் இல்லை. மலடன் என்று மற்றவர்கள் பழிப்பார்கள், அவ்வளவு

தான். ஆனால் ஒரு துஷ்டப்பிள்ளை பெறுவது......! ஐயையோ, என்ன கர்மாவின் விளைவோ!

தத்துசேனனைப்போன்ற ஒரு தர்ம சொரூபிக்கா இப்படிப் பட்ட துஷ்டப்பிள்ளை பிறக்கவேண்டும்! அவனுடைய மனம் உளைந் தது. குலம் கோத்திரம் இல்லாத பாண்டிநாட்டு வீணர்கள் சிலரின் அக்கிரம ஆட்சிக்கு உட்பட்டுக்கிடந்த இலங்கையை, அருஞ்சமர் புரிந்து மீண்டும் ஒரு சுதந்திர நாடாக்கி, அது மேன்மை உறு தற்குவேண்டிய முயற்சிகள் எல்லாம் குறைவறச் செய்தவனல்லவா தத்துசேனன்? இலங்காதேவியின் பணியே அவனுடைய வாழ்வின் முதல் பணி அன்றோ?

தமிழர்களின் பராமுகத்தினால் சோபை குன்றி மங்கிப்போ யிருந்த புத்த சமயத்தை மறுபடி தளிர்த்தோங்கச் செய்வதற்கு அவன் எவ்வளவு பாடுபட்டான்! அவன் கட்டிய விஹாரைகளுக் கும் தூபிகளுக்கும், வட இந்தியாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் வருவித்த பிக்குகளைக்கொண்டு அவன் நிறுவிய சங்கங்களுக்கும் ஒரு கணக்கு உண்டா?

அவை ஒரு புறம் இருக்கட்டும். வியவசாயியின் ஜீவநாடியே நாட்டின் ஜீவநாடி என்ற நுண்ணிய உண்மையை உணர்ந்து, வியவ சாயம் பரவி ஓங்குவதற்காகத் தத்துசேனன் காளவாவி முதலிய பல ஏரிகளையும் கால்வாய்களையும் நிறுவினான். இந்த ஒரு சேவைக் காக இலங்கை மக்கள் என்றென்றும் அவனுக்குக் கடமைப்பட்ட வர்கள். அவனுடைய கீர்த்தி இலங்கை மக்களின் உள்ளங்களில் என்றும் அழியாது நின்று நிலவுதற்குக் காளவாவி என்ற அந்த ஒரு சாதனமே போதுமே!

இவ்வளவு தொண்டுகளெல்லாம் இயற்றியதன் பலன், இந்தத் துஷ்டப்பிள்ளை! "தர்மம்! அதெல்லாம் வெறும் பசப்பு வார்த்தை!" என்றுகூட அவனுடைய மனம் சலிப்படைந்தது.

2

முகாலன், காசப்பன் இருவரும் வளர்ந்து வாலிப தசையை அடைந்தனர். தத்துசேனனுக்கு முதுமை வந்து எய்தியது. இனி முகாலனுக்கு முடிசூட்டிவிட்டுத் தான் ராஜாங்க அலுவல்களினின் றும் விலகிக் கவலையில்லாமல், மரணத்தை எதிர்நோக்கி இருக்கலாம் என்ற நினைப்பு அவனுக்கு.

இந்த ஏற்பாடு காசப்பனுக்குப் பிடிக்கவில்லை. அவன் நெஞ் சில் பொறாமைக்கனல் மூண்டு எரிந்தது. முகாலன் ஏறுகிற சிம்மாசனத்தில் தான் ஏறினால் ஆகாதோ என்று அவன் வெம்பி

னான். அதோடு, முகாலனுக்குக் கொடுப்பதற்காகத் தந்தை எங்கோ ஒரு மறைவிடத்தில் திரவியம் சேமித்து வைத்திருக்கிறான் என்றும் யாரோ அவனுக்குத் தகவல் தெரிவித்துவிட்டார்கள்.

ஆகவே காசப்பன் தன் மைத்துனனாகிய சேனாபதியுடன் சேர்ந்து இவ்விஷயங்களைக்குறித்துச் சதியாலோசனை செய்தான். பண்டை ராஜ்யங்களில், அரசனுடைய பலம் முழுவதும் சேனாபதியின் கையிலேயே அடங்கியிருந்தது. சேனாபதி பகைத்தால், அரசன் கதி அதோகதிதான்.

சதியாலோசனையின் விளைவாக ஒருநாள் காசப்பன் சூழ்ச்சி செய்து, தன் கிழத்தந்தையைப் பிடித்துக் காராக்கிருகத்தில் அடைத்துவிட்டான். தத்துசேனன் இதை எதிர்பார்த்திராதபடியால், அவனால் இதைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்யமுடியவில்லை. அதோடு, சேனாபதியானவன் காசப்பனின் சார்பாக இருந்தான்!

முகாலனும் சக்தியற்றவனாகிவிட்டான். தந்தையை மீட்பதற்கு அவனுக்கு ஒரு வழியும் தோன்றவில்லை. ஒருவன் தனியாக நின்று என்ன செய்யமுடியும்? ஆகவே, ஒரு படை திரட்டிக் காசப்பனுடைய துராக்கிருதத்திற்கு ஓர் எல்லை தேடுவதற்காக அவன் தென்னிந்தியாவிற்குச் சென்றான்.

அரியிருந்த ஆசனத்தில் நரியிருந்தது என்று ஒரு பழமொழி சொல்வார்களே, அப்படி இருந்தது காசப்பனுடைய ராஜ்யம். அவன் செய்த கொடுமைகள் அளவிறந்தன. புதுப்புது விதமான வரிகள், தர்மத்திற்கு மாறான தீர்ப்புக்கள், அரச சேவகர்களின் வழிப்பறி பலவந்தம் முதலிய அநியாயங்கள் இவற்றால், "அப்பப்பா, தமிழ் ராஜ்யம் எவ்வளவோ மேலானது!" என்றுகூடச் சிங்களமக்கள் நினைக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

காசப்பன் காராக்கிருகத்தில் அடைபட்டுக்கிடந்த தத்துசேனனுக்கு ஓயாத தொந்தரவு கொடுத்துக்கொண்டு வந்தான். அந்தத் திரவியத்தைப்பற்றிய நினைப்பு இன்னும் அவன் மனத்தைவிட்டு அகலவில்லை. அது மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அறிந்துவிடுவதற்காகத் தத்துசேனனுக்கு அவன் இழைத்த துன்பங்கள் கணக்கற்றவை.

ஒருநாள் தானே தந்தையைக் கேட்டு அதற்கு ஒரு முடிவு தேடுவது என்று நினைத்துக் காசப்பன் காராக்கிருகத்திற்குள் பிரவேசித்தான். அத்தருணத்தில் தத்துசேனன், சுவரில் உள்ள ஒரு துவாரத்தின் வழியாக, ஏக்கம் நிறைந்த கண்களோடு வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனது உடல் மெலிவுற்று, எலும்புகள் அங்கங்கே வெளிக்காட்டிக்கொண்டிருந்தன. [illegible] கதவு திறந்த

தமிழ்நாடு [illegible] நூலகம்
211859

அரவத்தைக் கேட்டதும் தன் கண்களை மெதுவாக வாசற் பக்கம் திருப்பி, அங்கே புலிபோல் மூர்க்கத்தோடு நின்றுகொண்டிருந்த காசப்பனைப் பார்த்தான்.

"இதுதான் நான் உனக்குக் கடைசியாகக் கொடுக்கும் தருணம். இப்பொழுதாவது அந்தத் திரவியத்தை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் கூறிவிடு. இல்லாவிட்டால்..." என்று ஒரு குரூர அர்த்தத்தோடு நிறுத்தினான் காசப்பன்.

"திரவியம் இருந்தாலல்லவோ கூறமுடியும்? அப்பா, என்னை ஏன் இப்படிச் சித்திரவதை செய்கிறாய்? என் ராஜ்யத்தைக் கவர்ந்தாய்; என் சுதந்திரத்தைக் கவர்ந்தாய். அவை எல்லாம் போதாவா? என் உயிரையும்..."

"நீ சொல்வதை நான் நம்பவில்லை என்று எத்தனை தரம படித்துப் படித்துச் சொல்லியாகி விட்டது! ம்...ம்...வீணாக ஏன் சாவைத் தேடிக்கொள்கிறாய்?"

மூடனும் முதலையும் பிடித்த பிடியைவிடார். வாதாடுவதால் என்ன பயன்? தத்துசேனனுடைய மனத்தில், அவன் சிறைபுகுந்த நாள்முதல் ஒரு பெரிய ஆசை இருந்து வந்தது. 'அந்த ஆசையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற தருணம் வாய்த்திருக்கிறது. அதை நழுவவிடக்கூடாது' என்று அவன் நினைத்தான்.

"சரி காசப்பா, அந்த இடத்தைத் தெரிவிக்கிறேன். ஆனால் அதற்கு முன் நான் செய்யவேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது."

"என்ன அது?"

"காளவாவியில் நான் ஒருதரம் — கடைசித்தரம் — நீராட வேண்டும், அவ்வளவுதான். அதன் பிறகு திரவியம் இருக்கும் இடத்தைக் கூறுகிறேன்."

வேல் தாங்கிய காவலர் இருமருங்கும் வர, தத்துசேனன் காளவாவிக்கரையை அடைந்தான். அதன் நீர் ஸ்படிகம்போல் தெளிந்து கண்ணுக்கெட்டாத தூரம்வரை பரந்துகிடந்தது. அதைக் கண்டதும் மன்னனுடைய கண்களில் நீர் நிரம்பியது. அவனுடைய வாழ்வின் பெரிய கைங்கரியமல்லவா அது! தன் பிள்ளை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வதைப் பார்த்து மகிழும் தந்தைபோல், முன்னெல்லாம் அவனும் அது நாளுக்கு நாள் ஆழ்ந்து அகன்று வளர்வதைக் கண்டு பூரிப்படைந்து வந்தவனல்லவா?

தத்துசேனன் தன் மனம் கொண்ட மட்டும் அந்த வாவியில் மூழ்கி மூழ்கி ஸ்நானம் செய்தான். அதைவிட்டு வெளியேற அவ

னுக்கு மனம் வரவில்லை. இறப்பதற்கு அவ்வளவு அவசரமா, என்ன?

கரையோரத்தில் நின்றவாறு காசப்பன் தந்தையைத் துரிதப் படுத்திக்கொண்டிருந்தான். ஆனால் தத்துசேனன் வெளியேறுவ தாகக் காணவில்லை. காசப்பனுக்கு ஆத்திரம் வந்தது. தந்தையை வெளியே இழுத்து வரும்படி காவலர்களை ஏவினான்.

தத்துசேனன் அஞ்சவில்லை. இன்னும் கொஞ்சநேரத்தில் சாவது நிச்சயம். அவன் கரையில் நிற்கும் காசப்பனை அலக்ஷிய மாகப் பார்த்தான்.

"அடே பாவி, உனக்குத் திரவியமா வேண்டும்? அற்பப்பதரே! என் திரவியம் எது என்பதை நீ இன்னும் அறிந்துகொள்ள வில்லையா? இதுதான் என்னுடைய திரவியம்!" என்று கூறி, தத்து சேனன் தன் இரண்டு கைகளாலும், காளவாவியின் தெளிந்த ஜலத்தை அள்ளிக் காசப்பனை நோக்கி வீசினான். "இதுதான் என் திரவியம், சம்பத்து, வாழ்வு, எல்லாம்!" என்று கூவினான்.

காசப்பனுடைய கண்கள் நெருப்பைக் கக்கின. தான் செய் வது என்ன என்பதே அவனுக்குத் தெரியவில்லை. அவ்வளவு ரௌத்திரம்!

"அடே, இந்த அடம்பிடித்த கிழவனைக் கொண்டுபோய் உயி ரோடு குழி வெட்டிப் புதையுங்கள்!" என்று தன் காவலர்களுக்கு உத்தரவிட்டான்.

அவனுடைய கட்டளை ஓர் அக்ஷரம் பிசகாமல் நிறைவேற்றப் பட்டது.

3

தான் செய்த பாபத்தின் பலனை ஒருவன் தானேதான் அனுப வித்துத் தீரவேண்டும். இந்த நியதிதான் பிறவிச் சக்கரத்தைக் கொண்டு இயக்கும் சக்தி. அதுவும் பஞ்சமாபாதகங்களுள் தலையாய கொலை என்றால், அப்பப்பா, அதன் விளைவுகளை எப்படிக் கூறமுடி யும்?

காசப்பனுடைய வாழ்க்கை கோரமான நரகம்போல் ஆகிவிட் டது. அவன் சுய அறிவோடிருந்த ஒவ்வொரு கணமும், நரகமுள் கொண்டு துளைக்கும் ஒவ்வொரு வேதனை மாதிரி இருந்தது. அவ னுடைய மனம் கொதிக்கும் எண்ணெய்க்கொப்பறைபோல் கொந் தளித்துக்கொண்டிருந்தது. அவனுடைய மனச்சாட்சியே பயங்கர மான உருவங்கொண்டு அவனைச் சித்திரவதை செய்து கொண் டிருந்தது.

அதோடு பிரஜைகளின் வஞ்சத்தின் பயம் வேறொரு புறம். தர்மமே ஒரு வடிவு கொண்டதுபோன்ற தத்துசேன மன்னனை அநியாயமாகக் கொலை செய்த பாபியா தங்களை ஆள்வது என்ற எண்ணம் உதித்தது அவர்களுக்கு. அதன் காரணமாக அநுராத புரத்திலும் மற்றும் பல இடங்களிலும் கலகங்களும் சச்சரவுகளும் தலையெடுத்தன.

இனி, இந்தியாவிற்குப் படை திரட்டுவதற்காகச் சென்ற முகாலன் எந்தக் கணத்தில் திரும்பி வருவான் என்று கூறமுடியாமல் இருந்தது. அவன் மட்டும் வந்துவிட்டால் காசப்பனின் கதி அதோ கதிதான். முகாலன் கொண்டு வரும் படையின் பலம் ஒரு புறமிருக்க, பிரஜைகள் எல்லோரும் அவன் பக்கம் சேர்ந்து விடுவார்கள்.

இந்த விஷயங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து காசப்பனுடைய மனத்தில் பெருந்திகிலை உண்டு பண்ணின. அநுராதபுரத்தில் வாசம் செய்வதே அபாயமெனப் பட்டது. ஆனால் அவன் இலங்கையின் அரசன் ஆயிற்றே! ராஜதானியைப் புறக்கணித்துவிட்டு வேறு எங்கே போவது?

ஆம், ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ராஜதானியை அநு ராதபுரத்திலிருந்து வேறெங்காவது மாற்றிவிடவேண்டியதுதான். கடந்த எண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாக அநுராதபுரமே இலங்கையின் ராஜதானியாக இருந்திருக்கிறது. புத்தமதம் வளர்ந்ததும், இலங்கை ராஜரிகம் ஓங்கியதும் அங்கேதான். இலங்கையின் பண்டை மேன்மையை உலகோர்க்கு எடுத்துக் காட்டும் விஹாரைகள், தூபிகள், ஆலயங்கள், நந்தவனங்கள், குளங்கள் முதலிய ஞாபகச் சின்னங்களெல்லாம் அங்கேதான் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் புறக்கணித்துவிட்டுப் போகவேண்டியிருப்பது காசப்பனுக்குச் சிறிது மனவேதனையைக் கொடுத்தது. ஆனால் அவனுடைய உயிரைவிடப் பெரியனவா இவையெல்லாம்?

ஆகவே அவன் தன் ராஜதானியைச் 'சிகிரியா' அல்லது 'சிங்ககிரி' என்ற மலைக்கு மாற்றினான். கீழே நின்று பார்த்தால் அந்த மலை ஒரே செங்குத்தாகத் தெரியும். ஒரு பெரிய சமவெளியில் அந்த மலை தனியே ஒய்யாரமாகத் தலையெடுத்து நிற்கின்றது. அந்த மலையின் உச்சியில் காசப்பன் தன் மாளிகை, ஆலயம் மதில்கள் முதலியவற்றை ஸ்தாபித்தான்.

அந்த மலையைப் பார்ப்பவர்களுக்கு, அதன்மேல் கோட்டை கட்டிய காசப்பனுடைய ஒன்றுக்கும் கலங்காத நெஞ்சத்தின் தன்மை தெரியவரும். ஒரு வேளை அது பயத்தையே அடிப்படையாகக்கொண்ட தைரியமாக இருக்கலாம்.

அந்த மலையின் உச்சியை அடைவதற்குக் காசப்பன் ஒரு படிக் கட்டு அமைத்தான். அதன் அமைப்பைக் கண்டு தற்காலத்திய கட்டட நிபுணர்கள்கூட ஆச்சரியம் அடைகின்றனர்.

அந்தப் படிக்கட்டு மலை உச்சியை அடையும் இடத்தில் பெரிய சிங்கச்சிலை ஒன்றை அமைத்தான். அதனால்தான் அந்த மலைக்குச் 'சிங்ககிரி' 'சிகிரியா' என்ற பெயர்கள் உண்டாயின. அந்தச் சிங்கத்தின் முன்னங்கால்களுக்கூடாகச் சென்றால் கோட்டையின் உட்புறத்தை அடையலாம். அந்தச் சிங்கத்தின் பாதங்களை இப்பொழுதும் காணலாம்.

மலையின் உச்சியிலே, தன் மாளிகையையும் பூஞ்சோலைகளையும், ஜலக்கிரீடை செய்யும் இடங்களையும் அமைத்தான். இவ்வாறு பல தற்காப்பு முறைகளெல்லாம் செய்து முடித்தபின் காசப்பனின் மனம் சிறிது சமாதானம் அடைந்தது. வெளிப்பயம் ஒருவாறு ஓய்ந்துவிட்டாலும், அவனுடைய அந்தரங்க உள்ளம் நீறுபூத்த நெருப்பைப்போல் உள்ளே கனன்று கொண்டிருந்தது.

எத்தனையோ நற்கருமங்கள் எல்லாம் செய்து, தன் அந்தராத்மாவில் எரியும் கழிவிரக்கம் என்னும் ஜ்வாலையைத் தணித்துக் கொள்ள முயன்றான்.

அவனுடைய உள்ளம் அழகுணர்ச்சி வயப்பட்டது. நீண்டு படர்ந்திருக்கும் பசும்புற்றரைகளிலும், தொலைவில் ஒய்யாரமாகத் தலை தூக்கி நிற்கும் மலைத்தொடர்களிலும் சல சலவென்று பண் மிழற்றிப் பாயும் வெள்ளி அருவிகளிலும், மெய்ம்மறந்து மோகனப் பாட்டிசைக்கும் பட்சி ஜாலங்களிலும் அவன் மனம் சஞ்சரித்து மகிழ்வெய்தியது.

அவனை முற்றும் கொள்ளைகொண்ட இந்த அழகுணர்ச்சியின் விளைவாக அவன் இயற்றி வைத்த சின்னம் ஒன்று இப்பொழுதும் அழியாமல் இருக்கிறது. அதை மேல் நாட்டவரும் கீழ் நாட்டவரும் சதா வந்து தரிசித்துப் புகழ்ந்த வண்ணமாகவே இருக்கின்றனர். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றும் அந்தச் சின்னம், அதே ஜீவ களையோடு பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

அதுதான் சிகிரியா மலைமேல் இருக்கும் சித்திரச்சுவர். அந்தச் சித்திரங்களில் நாம் காணும் அப்ஸரஸுக்களின் முகங்களில் இன்றும் அதே காதற் களையும் இன்பக்களையும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் வடபாகத்தில் உஜ்ஜயினி வரையில் பரந்திருந்த ஆந்திர ராஜ்யம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டளவில் தன் செல்வாக்கை இழந்துவிட்டது. ஆனால் ஆந்திரர்கள் இயற்றி வைத்த

சித்திரச்செல்வங்கள் மட்டும் அழியாமல் இருந்தன. அஜந்தா குகைச்சித்திரங்கள் எல்லாம் ஆந்திரர் காலத்தில் உண்டாயினவே. சிகிரியாவில் காணப்படும் சித்திரங்களுக்கும் அஜந்தா குகைச்சித்திரங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது.

சிகிரியா சித்திரங்களை வரைந்தவர் யார் என்பது இன்னும் தெரியவில்லை. அஜந்தா முதலிய இடங்களுக்குச் சென்று சித்திரக் கலை பயின்று வந்த சிங்களவர்கள் வரைந்தார்களோ, அல்லது இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட சித்திரகாரர்கள் வரைந்தார்களோ, எவர் என்பது மட்டும் தெரியவில்லை. அது எப்படியாயினும், சிகிரியா சித்திரங்கள் காசப்பனுடைய இருண்ட வாழ்க்கையின் ஓர் ஒளிப்பிழம்புபோல் விளங்குகின்றன.

4

ஒருநாள் திடீரென்று இந்தியாவிற்குச் சென்றிருந்த முகாலன் ஒரு பெரும்படையோடு இலங்கையில் வந்து இறங்கினன். காசப்பனுடைய சேனை முகாலனை எதிர்த்தது.

ஆனல் பிரஜைகளின் அநுதாபம் முகாலனுக்கே கிடைத்தது. அதோடு அவனுடைய படையும் மிகத் தேர்ச்சி பெற்றதாக இருந்தது.

அதனல் காசப்பனுடைய படை சின்னபின்னமாக்கப்பட்டது.

காசப்பனுக்குத் தோல்வியை ஒப்புக்கொண்டு வாழ்வது நல்லதாகக் காணப்படவில்லை. ஆகவே, முகாலன் சிகிரியாவைக் குறுகு முன்னரே அவன் தற்கொலை செய்துகொண்டு உயிரைவிட்டான்.

முகாலன் ராஜதானியைப் பழையபடி அநுராதபுரத்திற்கு மாற்றி நல்லரசு புரிந்தான்.

: ஏழையின் குழந்தை :

* ஏ. முகம்மது ரஷீத் *

1

"அப்பா!"

"ஏண்டா கண்ணே?"

"என் பக்கத்திலேயே நீ உட்கார்ந்திரு, அப்பா!"

"சரிடா கண்ணு."

"நீதான் வேலைக்குப் போய்விடுகிறாயே?"

"இன்றைக்குப் போகவில்லை, பாலு."

"உண்மையாகவா?"

"உண்மையாகத்தான்."

சிறுவன் முகத்தில் ஏற்பட்ட ஆனந்தத்தின் சின்னம் அவன் மிருதுவான கன்னங்களில் உண்டான குழிகளால் வெளிப்பட்டது. தகப்பன் தன் பக்கத்திலேயே இருப்பதில் அச்சிறுவனுக்கு அவ்வளவு திருப்தி.

முகுந்தன் முகத்திலும் ஓர் அற்ப ஸந்தோஷம் மின்னலைப்போல் தோன்றி மறைந்தது. தன் மகனின் உடம்பை வாஞ்சையோடு தடவினான். சிறுவனும், மனநிம்மதியுடன் கண்களைமூடித் தூங்கலானான்.

முகுந்தனுக்கு இதுவரையில் எட்டுக் குழந்தைகள் பிறந்துவிட்டன. யமனுக்குத்தான் இவன்மேல் என்ன வர்மமோ தெரியாது. முதல் ஏழு குழந்தைகளையும் தன் பாசக்கயிற்றில் மாட்டி இழுத்துக்கொண்டு போய்விட்டான். கடைசியாக எஞ்சி நின்றவன்தான் பாலு. அவனை இத்தனை காலமாக மறந்திருந்த யமனுக்குத் திடீரென்று அவன் ஞாபகம் வந்துவிட்டதோ என்னவோ, சிறுவனும் ஜுரத்தில் விழுந்துவிட்டான்.

வரவரப் பாலுவின் நிலைமை மோசமாகிக்கொண்டு வந்தது. நாலைந்து தினங்களாகத் திடீர் திடீரென்று பயந்து அலறவும் ஆரம்பித்தான். தனியாக இருக்க மிகவும் அஞ்சினான். ஆதலால் எப்பொழுதும் அவன் பக்கத்தில் யாரேனும் இருக்கவேண்டி இருந்தது. அவன் தாய் கோமளம் இருப்பதைவிடத் தந்தை பக்கத்திலிருந்தால் அவனுக்குத் தனித் தைரியந்தான்.

2

பாலு கண்ணயர்ந்ததும் முகுந்தன் சீக்கிரமாகத் தன் எஜமானர் புண்ணியமூர்த்திப் பிள்ளையின் வீட்டிற்குச் சென்றான். ஒரு நாள் வேலைக்குப் போகாவிட்டால் தன் வேலையில் மண் விழுந்து, தன் குடும்பத்திலும் மண் விழுந்துவிடும் என்பது அவன் நன்றாக அறிந்த விஷயம். என்றாலும் தன் மகனின் வேண்டுகோளையும் நிராகரிக்க அவன் மனம் இடம் தரவில்லை. ஏன், அவனுக்கே தன் பாலுவைவிட்டுப் பிரியச் சிறிதேனும் இஷ்டமில்லை.

புண்ணியமூர்த்திப் பிள்ளையின் இதயத்தில் எவ்வளவு ஈரம் உண்டு என்பதை அவன் நன்கறிவான். ஆனால் எப்படியேனும் கெஞ்சிக் கூத்தாடி அன்று மாத்திரம் 'ரஜா' பெற்று விடலாம் என்று அவன் அன்பு—பாலுவின்மேல் வைத்திருந்த புனித அன்பு—தைரியம் சொல்லி வைத்தது. மேலும் கையில் ஒரு தம்பிடி கூட இல்லையே! மத்தியானம் பாலுவுக்கு அரிசிக்கஞ்சி எப்படிக் கொடுக்க முடியும்? பிள்ளையவர்களிடந்தான் எப்படியேனும் ஒரு நாலணாவாவது பெற்றுக்கொண்டு வரவேண்டும்.

இப்படியாக அவன் தன் மனத்தைப் பல திசைகளில் அலைய விட்டு, எஜமானர் வீட்டை அடைந்தான்.

புண்ணியமூர்த்திப் பிள்ளையைக் கண்டதுமே அவனிடம் கொஞ்சநஞ்சம் உலர்ந்திருந்த நம்பிக்கையெல்லாம் பஞ்சாகப் பறந்து விட்டது.

"அடே! தடிக்கழுதை! ஏண்டா இவ்வளவு நேரம்? மணி எட்டாகப் போகின்றது. கவர்னர் போல........." என்று படபட வென்று உதிர்த்தார்.

முகுந்தன் ஒன்றும் பேசவில்லை. கெஞ்சுதலாக அவரைப் பார்த்துக்கொண்டு, அடக்க ஒடுக்கமாக நின்றான்.

அவர் குரல்தான் மறுபடியும் கேட்டது.

"இனிமேல் நீ இப்படி வந்தால் உன் வேலையின் ஓலை கிழிந்து விடும். உன் அப்பனுக்கு நான் கொடுத்திருக்கும் கடன் இருபது ரூபாயையும் எண்ணிக் கீழே வைத்துவிட்டு ஓடவேண்டியிருக்கும்."

இதெல்லாம் அவன் காதில் சரியாக நுழையவில்லை. அவன் மனந்தான் பாலுவிடம் சஞ்சரித்துக்கொண்டிருந்ததே.

முகுந்தன் வழி முழுவதும் அவரிடம் எப்படிக் கெஞ்சிக் கேட்கவேண்டும், எப்படி நான்கு அணாவைப் பெற்றுப் போகவேண்டும் என்று செய்துவந்த ஏற்பாடெல்லாம் அவனை உதறித் தள்ளி மறைந்துவிட்டன. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவன் நின்றுகொண்டிருந்தான். அவன் பரிதாபமான கண்களை

அவன் இதயத்தில் மும்முரமாக வீசிய சண்டமாருதத்தை எடுத்துக் காட்டின.

பிள்ளையவர்கள் அவன் கண்களில் தோன்றிய பரிதாபப் பார்வையைச் சிறிதேனும் பொருட்படுத்தவில்லை. அவர் மனம் வரப் போகிற அவருடைய புது மாப்பிள்ளையைப்பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தது.

"சரி. நீ சீக்கிரமாகப் போய்ச் சந்தையில் சாமான்களை வாங்கி வா. பிறகு நம் வண்டிமாட்டை நன்றாகக் குளிப்பாட்ட வேண்டும். புது மாப்பிள்ளை தலைத்தீபாவளிக்கு இன்று மத்தியானம் வரப் போகின்றார். ஸ்டேஷனுக்குச் சென்று அவரை அழைத்து வர வேண்டும்" என்று சொன்னவாறே அப்பால் சென்று சாய்வுநாற்காலி யொன்றில் அமர்ந்து விட்டார்.

முகுந்தனுக்குப் பகீரென்றது. "என்ன, ஐந்து மைல் தூரத்தி லிருக்கும் ஸ்டேஷனுக்குப் போய் மாப்பிள்ளையைக் கூப்பிட்டுக் கொண்டா வரவேண்டும்? மத்தியானம் வரையிலுமா இங்கிருக்க வேண்டும்?" என்று அவன், தன் உலர்ந்த உதடுகள் அசைய முணு முணுத்துக்கொண்டான்.

சாய்வு நாற்காலியில் உல்லாஸமாகச் சாய்ந்துகொண்டிருந்த புண்ணியமூர்த்திப் பிள்ளையிடம் ஓடினான்; கால்களைப் பிடித்துக் கொண்டான்.

"மகாராஜா! என் குழந்தைக்கு அனலாய்க் கொதிக்கிறது. எப்படி நான் அவனை விட்டு மத்தியானம் வரையில் பிரிந்திருப் பேன்? கொஞ்சம் பெரிய மனசு பண்ணவேண்டும்" என்று பரிதாபமாகக் கெஞ்சினான்.

பிள்ளையவர்களுக்கு 'ஏகப்பட்ட' கோபம் வந்துவிட்டது. 'ஆரம்பிக்கும்பொழுதே இவன் அபசகுனம் போல இப்படிச் சொல்லிவிட்டானே' என்ற எண்ணத்துடன் அவனை அவர் முறைத்துப் பார்த்தார். அது முகுந்தனுக்குத் தெரியவில்லை. அவன் அகக்கண்ணின் முன்புதான் வேறொரு நாடகம் நடந்துகொண்டிருந்ததே! அவன் மறுபடியும் ஆரம்பித்தான்.

"ஏழு குழந்தைகளை வாரி வச்சுட்டேன்.........இது ஒன்று தான்......ஏதோ தயைபண்ணி......" என்று அவன் சொல்லுமுன் அவர் சினம் சிகரத்தை அடைந்துவிட்டது.

"குழந்தையுமாச்சு, கோட்டானுமாச்சு, அபசகுனம் போல! பீடை! நீ ஸ்டேஷனுக்குப் போய்க் கூப்பிட்டுக்கொண்டு வரவேண்டு மென்றால், கூப்பிட்டுக்கொண்டுதான் வரவேண்டும். ஞாபகத்தி லிருக்கட்டும்!"

அவர் விரல்கள் இடதுபக்க மீசையை முறுக்கின.

முகுந்தனால் பிறகு அவரை ஒன்றும் கேட்கமுடியவில்லை.

ஏழைத் தந்தைமாருக்குத் தங்கள் குழந்தைகளின்மேல் அன்பிருக்க என்ன உரிமை இருக்கின்றது? எல்லா அன்பும், எஜமானரின் ஏவல்களையெல்லாம் முடித்த பிறகுதானே?

3

தன் மனத்தை அடக்க இயலாமல் சந்தையில் பழங்கள் வாங்கப் போகும்பொழுது முகுந்தன் தன் வீட்டிற்கு மறைந்து மறைந்து ஓடினான். பாலுவை ஆவலோடு நோக்கினான். பாலு இன்னும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

கோமளம் அவன் சமீபத்தில் வந்தாள். அவன் குவிந்த வதனமே அவன் உடைந்த நெஞ்சை அவளுக்கு எடுத்துக் காட்டி விட்டது.

"கோமளம்! குழந்தையை நன்றாகக் கவனித்துக்கொள். நான் சீக்கிரமாக மத்தியானம் வந்துவிடுகிறேன்."

உதிர்ந்துவிட்ட கண்ணீரை அவனால் சமாளிக்க முடியவில்லை.

"என்ன? நீங்கள் ஐயாவிடம் கேட்கவில்லையா?"

"இம்!......எல்லாம் கேட்டாச்சு.................பாலுவுக்கு மத்தியானம் என்ன ஆகாரம் கொடுக்கப் போகிறாய்?"

"என்ன தருவது? அரிசியே இல்லையே."

முகுந்தன் தன் முகத்தை மறைக்க வேறொரு பக்கம் திரும்பிக் கொண்டான். உள்ளே சென்று தன் உடைந்த பெட்டியைப் புரட்டிப் பார்த்தான். நான்கு தம்பிடிகள் கிடந்தன. அவற்றை எடுத்து வந்தான்.

"இந்தா, கோமளம்! இதில் கொஞ்சம் அரிசி வாங்கி மத்தியானத்திற்குக் கொடு. நான் இராக் கஞ்சிக்கு எப்படியேனும் ஒரு நாலணா எஜமானரிடம் வாங்கி வருகிறேன்."

அவள் அந்தக் காசை வாங்கிக்கொண்டாள். முகுந்தன் சில ரூபாய்களுக்கு ஆரஞ்சும் ஆப்பிளும் வாங்கத்தான் சந்தைக்குப் போகின்றான். அதில் சுலபமாக ஓர் எட்டணா எடுத்துக் கொடுத்து விடலாம். ஆனால் அவன் மனந்தான் அதற்குச் சம்மதிக்கவில்லை.

பாலுவை மற்றொரு முறை ஆசையோடு நோக்கினான். குழந்தையின் முகத்தில் மலர்ந்திருந்த புன்னகையைக் கண்டதும் உண்மையாக அவன் சில நிமிடங்கள் தன் துக்கத்தை மறந்து விட்டான்.

பாலுவிடமிருந்து திடீரென்று, "அப்பா! நீ பக்கத்திலேயே இரு அப்பா! வேலை செய்யப் போய்விடாதே" என்ற வார்த்தைகள், அவன் தூக்கத்திலும் வெளிப்பட்டன.

"இங்கேதானடா இருக்கிறேன், என் கண்மணி" என்று சொன்னவாறே அவனைத் தழுவிக்கொண்டான் முகுந்தன்.

பிறகு, சந்தைக்குச் செல்லப் பிரியமில்லாமல் புறப்பட்டான்.

4

பாலுவை எண்ணியவாறே முகுந்தன் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வண்டியை ஓட்டிச் சென்றான். மாப்பிள்ளை வரவேண்டிய $12\frac{1}{2}$ மணி வண்டியும் வந்தது. ஆனால் மாப்பிள்ளை அதில் வரவில்லை. அடுத்த வண்டி இனிமேல் சாயந்திரம் ஐந்து மணிக்குத்தான். அது வரையில் காத்திருக்க அவன் உள்ளம் இடந்தரவில்லை. வெறும் வண்டியுடன் திரும்பிவிட்டான். பிள்ளையவர்களிடம் சமாசாரத்தைக் கூடச் சொல்லாமல் நேராகத் தன் குடிசைக்கே வண்டியை ஓட்டினான்.

அவன், குடிசைக்குள் நுழைந்து தன் அருமை மகனைக் காண இன்னும் இரண்டு நிமிஷங்களே பிடித்திருக்கும். ஆனால்.........? ஏதோ காரணமாக அவ்வழியே வந்துகொண்டிருந்த புண்ணியமூர்த்திப் பிள்ளையின் கண்களில் அவன் பட்டுவிட்டான். வண்டியும் காலியாக இருப்பதைக் காண, "எல்லாம் இவன் அபசகுனத்தால்தான் மாப்பிள்ளை வரவில்லை" என்று அவர் முடிவு செய்தார். வேறொன்றும் செய்யவில்லை. காலிலிருந்த செருப்பை எடுத்துப் படார் படாரென்று அடித்துவிட்டார். பிறகும் அவர் மனம் நிம்மதி அடையவில்லை.

"'கவர்னர்' சாயந்திரம் வரையில் அங்கே காத்திருக்க முடியவில்லையோ? அதற்குள் பிள்ளையை யார் வாரிக்கொண்டு போய் விடுகின்றார்கள்?" என்று கூவினார். அவர் வார்த்தைகளைப் பாதி கேட்டும் பாதி கேளாமலும் முகுந்தன் வண்டியை மறுபடியும் ஸ்டேஷனுக்குத் திருப்பினான்.

ஆம், ஏழையாகப் பிறந்தவன் எஜமானர் இடும் வேலையைச் செய்யத் தவறினால் எதையும் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்!

5

இரவு மணி எட்டு இருக்கும். புண்ணியமூர்த்திப் பிள்ளை மிகவும் அலுப்பாகத் தம் சோபாவின்மேல் படுத்திருந்தார். முகுந்தனை அடித்ததால் ஏற்பட்ட அலுப்போ, என்னவோ தெரியவில்லை. அவன் அவர் கால்களை வருடிக்கொண்டிருந்தான்.

"மகாராஜா!......மாப்பிள்ளை அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன். எல்லா வேலையுங்கூட முடிந்துவிட்டது. நேரமாகின்றது. நான் வரும்பொழுது குழந்தைக்கு மிகவும் காய லாவாக இருந்தது. இப்பொழுது எப்படி இருக்கிறதோ?......... ஒரு குஞ்சுதான் மிச்ச மிருக்கின்றது. உத்தரவு கொடுத்தால் நான் போகிறேன்" என்று எல்லாப் பற்களையும் காட்டிக் கெஞ்சினான்.

"என்னடா அவ்வளவு அவசரம்? அப்படிப் போனால்தான் போகட்டுமே! சுடுகாடு எல்லாம் எலும்பாகி விடுமா, என்ன?...... இந்தா இந்தக் காலையும் கொஞ்சம் வருடிவிடு. பிறகு கடைக்குப் போய் நாளைத் தீபாவளிக்கு வேண்டிய பட்டாஸ், மத்தாப்பு வாங்கிக் கொடுத்துவிட்டுப் போய்த் தொலையலாம்" என்று தாராள மாகச் சொன்னவாறே மற்றொரு காலையும் நீட்டினார்.

6

தன் புருஷன் போனபிறகு கோமளம் பாலுவின் பக்கத்தில் உட்கார்ந்து அவனைக் கவனித்துக்கொண்டிருந்தாள். பாலுவும் பத்து மணி வரையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். ஆனால் ஜுரம் மாத்திரம் மேன்மேலும் அதிகரித்துக்கொண்டே போயிற்று. கோமளத்தின் அடிவயிற்றில் நெருப்பு விழுந்தது போலிருந்தது. அவள் மனம் ஒரு நிலையிலும் நிற்கவில்லை.

"கொஞ்சம் வெள்ளாட்டுப் பால் கொடுத்துப் பார், அம்மா" என்றாள் அடுத்த வீட்டு ராஜம்மாள். தன் வீட்டிலிருந்த ஆட்டைக்கூட இழுத்துக்கொண்டு வந்தாள். கோமளம் என்ன செய்வதென அறியாமல் உன்மத்தம் பிடித்தவள்போல அங்கு மிங்கும் அலைந்தாள். அவள் கண்கள் மாத்திரம், "புருஷன் வரு கின்றானா?" என்று நிமிஷத்திற்கொருதரம் வாயிற்படியைப் பார்த்த வாறு இருந்தன. கடைசியில் ஆட்டினிடம் பால் கறக்கச்சென்றாள்.

பாலுவின் பக்கத்தில் இப்பொழுது பகவான்தான் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். அவன்தானே ஏழைகளுக்கெல்லாம் கதி. இச்சமயம் அவனும் பாலுவைக் கைவிட்டிருக்க வேண்டும். இல்லையெனில் அக்குழந்தையின் தூய்மையான ஆவி, கோமளம் ஆட்டினிட மிருந்தபொழுது, யாரும் அறியாதபடி பறந்துவிட்டதன் அர்த்தம் என்ன?

ஆட்டுப் பாலுடன் தாய் வந்தாள். பாலுவின் நிலைமையை அறிந்ததும், ஒரு பெரிய இடி அவள் தலையில் விழுந்தது போலிருந்தது. பாலிருந்த குவளை நழுவி விழுந்தது. ஆனால்

அவள் அழவில்லை; கண்களிலிருந்து ஒரு பொட்டுக் கண்ணீராவது சிந்தவில்லை; ஒரு மூலையில் போய் உட்கார்ந்தாள். அவ்வளவுதான்!

அக்கம் பக்கத்தி லிருந்தவர்கள் உள்ளே வரத்தான் செய்தார்கள். ஆனால் அவர்களும் அவளுக்கு ஒருவிதமான சமாதானமும் சொல்லவில்லை. வாய் திறவாமல் மௌனமே சாதித்தனர். கிழத்தாயி ஒருத்திமட்டும், "ஏழைக்கு ஏது குழந்தையும் குட்டியும்?" என்று மெதுவாக முனகினாள். ஆனால் யாரும் அதைக் கவனிக்கவில்லை.

7

இரவு 11 மணி இருக்கும். மனத்தில் அளவிலா எண்ணங்களுடன் முகுந்தன் தன் குடிசைக்கு ஓடி வந்தான். அவன் நினைத்துப் போனபடி கையில் நாலணா கொண்டுவர முடியவில்லை. விட்டாலே போதுமென்றிருந்தது அவனுக்கு.

குடிசையின் வாயிற்படியை மிதித்தான். எங்கும் நிச்சப்தமே நிலவியிருந்தது. அவன் மிகவும் திகிலுடன் உள்ளே நுழைந்தான். ஓர் ஓலைப்பாயின்மீது அவன் எட்டாவது குழந்தை—காலையில் கூடவே இருக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்ட குழந்தை—கிடந்தது. கோமளம் ஒரு மூலையில் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். அண்டை அயல் வீட்டுப் பெண்களுள் சிலரும் உள்ளே இருந்தனர்.

அவன் சோர்ந்த உடல் இதைத் தாள முடியாமல் சாய்ந்து விட்டது. அவன் தலை பக்கத்துச் சுவரில் வேகமாக மோதிக் கொண்டது. அந்த அதிர்ச்சியினால் மாத்திரம் அவன் மயக்கமடைந்திருக்க மாட்டான். அவன் மனமும் அடிபட்டு முறிந்து போயிருந்தது.

8

அன்றிரவு தீபாவளி. புண்ணியமூர்த்திப் பிள்ளையின் வீட்டில் களிப்பும் விளையாட்டும் சிரிப்பும் கோலாஹலமும் நிலவின. மாப்பிள்ளை, பெண் உள்பட மத்தாப்பைக் கொளுத்தி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அதன் வெளிச்சம் நாற்புறமும் சிதறி ஜ்வலித்துக் கொண்டிருந்தது.

சிறிது தூரத்திற் கப்பால் நதியின் கரைக்கருகே மற்றொரு வெளிச்சம் காணப்பட்டது. முகுந்தனும் கோமளமும் அருமையாகப் பெற்றெடுத்து வளர்த்த கடைசிக் குழந்தையான பாலுவின் உடலைச் சுற்றித் தீயின் சுடர் சுழன்று எரிந்துகொண்டிருந்தது.

பெற்றோர்களின் வயிற்றில் ஆக்ரோஷத்துடன் மூண்டெரிந்த எல்லாவற்றையும் விடப் பெரிய தீ மாத்திரம் ஒருவர் கண்ணுக்கும் தென்படவில்லை. அப்படித் தென்பட்டிருந்தாலும் அதை யாரும் கவனித்திருக்கமாட்டார்கள்.

———

நிர்மலா

ஸ்ரீ ப்ரேம்சந்த்

[கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்த்தது]

அத்தியாயம் 1

நிர்மலாவின் கனவு

பார்க்கப் போனால் பாபு உதயபானுலால் அவர்களின் பரிவாரத்தில் அவருடைய அம்மாஞ்சிகள், அத்தான்கள், அக்காவின் பிள்ளைகள், தம்பியின் பிள்ளைகள்—இப்படியாக எத்தனையோ பேர் இருந்தார்கள். ஆனால், அவர்களைப்பற்றி நமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. அவர் பெரிய வக்கீல். லக்ஷ்மி அவர்மீது பிரஸன்னமாயிருந்தாள். குடும்பத்திலுள்ள தரித்திர ஜீவன்களைக் காப்பது அவாது கடமையாகவே இருந்தது. நமக்கு வேண்டியவர்கள் அவருடைய பெரிய பெண் நிர்மலாவும், சிறிய பெண் கிருஷ்ணுவுமே. நேற்றுவரையில் அவர்கள் இருவரும் ஒன்ருக மரப்பாச்சி விளையாடியவர்கள். நிர்மலாவுக்கு வயது பதினைந்து; கிருஷ்ணுவுக்குப் பத்து. ஆயினும், அவர்களின் சுபாவத்தில் அப்படி விசேஷ வித்தியாசம் ஒன்றும் இல்லை. இருவரும் துறுதுறுவென்று விளையாடிக் கொண்டிருப்பார்கள். வெளியே சுற்றுவதிலும், வேடிக்கைகள் பார்ப்பதிலுந்தான் அவர்களுக்குப் பிராணன். இருவரும் மிகத் தடபுடலாகப் பொம்மைக் கலியாணம் நடத்துவார்கள். வேலை செய்வதென்ருல் எப்போதுமே அவர்களுக்கு அழுகை. தாய் கூப்பிட்டால் மாடி அறையில் ஒளிந்துகொண்டு, "எதற்கு இவள் ஸதா நம் பிராணனை வாங்குகிருளோ?" என்று முணுமுணுப்பார்கள். தம் தம்பிகளோடு இருவரும் சண்டையிடுவார்கள்; வேலைக்காரர்களை மிரட்டுவார்கள். வாத்தியகோஷம் கேட்டவுடன் வாயிலில் வந்து நிற்பார்கள். ஆனல் இன்று திடீரென்று நடந்த ஒரு சம்பவமானது, பெரியவளைப் பெரியவளாகவும் சிறியவளைச் சிறியவளாகவும் செய்துவிட்டது. கிருஷ்ணு முன்போலவேதான் இருக்கிருள். ஆனல் நிர்மலாவினிடம் கம்பீரமும் தனியிடத்தைத் தேடும் தன்மையும் வெட்கமும் தோன்றின.

பாபு உதயபானுலால் மாதக்கணக்காக நிர்மலாவுக்கு வரன் தேடிக் கொண்டிருந்தார். அவருடைய முயற்சி இன்றுதான்

பலித்தது. இப்போது நிச்சயமான வரன், பாபு பாலசந்திர ஸின்ஹாவின் மூத்தகுமாரன் புவனமோஹன் ஸின்ஹாதான். வரனுடைய தகப்பனார், "உங்களுக்கு இஷ்டமிருந்தால் வரதக்ஷிணை கொடுங்கள். இல்லாவிட்டால் வேண்டாம். எனக்கு அதைப் பற்றி அக்கரை இல்லை. ஆம், எங்களோடு கூட வருபவர்களுக்கு மரியாதைகள் நன்றாக நடத்தவேண்டும். ஊரார் நகைப்புக்கு இடம் இல்லாமல் இருந்தால் போதும்" என்று சொல்லியிருந்தார். உதயபானுலால் பெரிய வக்கீல்தான்; ஆனால், அவருக்குப் பணம் சேகரிக்கத் தெரியாது. வரதக்ஷிணை அவருக்கு ஒரு மிகப் பெரிய சிக்கலாயிருந்தது. வரனுடைய தகப்பனாரே இவ்வாறு சொல்லி விட்டபோது, கண்களைப் பெற்ற குருடன் போல் அவர் ஆனந்தம் அடைந்தார். 'யார்யாரிடம் கைநீட்டவேண்டி வருமோ?' என்று அவர் மிகவும் பயந்துகொண்டிருந்தார். இரண்டு மூன்று ஸாவ்கார் களைக்கூட அவர் சரிப்படுத்தி வைத்திருந்தார். எவ்வளவுதான் சிக்கனமாகச் செலவழித்தபோதிலும், செலவு இருபதினாயிரத் துக்குக் குறையாதென்று அவர் மதிப்பிட்டிருந்தார். 'வரதக்ஷிணை வேண்டாம்' என்ற ஆறுதல் கிடைத்தவுடனே அவர் சந்தோஷத்தி னால் துள்ளிக் குதித்தார்.

இந்தக் கலியாண சமாசாரந்தான் பேதைச்சிறுமி நிர்மலாவை முகத்தை மூடிக்கொண்டு ஒரு மூலையில் உட்காரச் செய்தது. அவளுடைய இருதயத்தில் ஓர் அற்புதமான கவலை குடி கொண் டது. 'இனி என்ன ஆகுமோ?' என்ற என்றும் அறியாத ஒரு பயம் ஒவ்வொரு மயிர்க்காலிலும் பரவியது. இளம் பெண்களின் கண்களில் கோணற்பார்வையாகத் தோன்றி, உதடுகளில் இனிய குறுநகையாக மலர்ந்து, அங்கங்களில் சோம்பலாக வெளிவரும் அந்த உல்லாசங் கள் அவள் மனத்திலே இல்லை. விருப்பங்களுக்குப் பதிலாக விகற்பங்களும் கவலைகளும் பயம் நிறைந்த கற்பனைகளுமே அதில் நிரம்பியிருந்தன. யௌவனத்தின் முழு ஒளியும் இன்னும் அங்கு வீசவில்லை.

கிருஷ்ணாவுக்குச் சில விஷயங்கள் தெரியும்; சில தெரியா. அக்காவுக்கு நல்ல நல்ல நகைகள் கிடைக்கும்; வாத்தியங்கள் முழங்கும்; விருந்தினர்கள் வருவார்கள்; நாட்டியக் கச்சேரி நடக்கும். இவற்றையெல்லாம் அறிந்ததும் அவளுக்குச் சந்தோஷந் தான். 'அக்கா எல்லாருடைய கழுத்துக்களையும் கட்டிக்கொண்டு அழுவாள்; கண்ணும் கண்ணீருமாக இங்கிருந்து வெளியேறிவிடு வாள்; நாம் தனியாக இருக்கவேண்டிவரும்' என்பதையும் அவள் அறிந்திருந்தாள். இதனால் அவள் மனம் வருந்தியது. ஆனால், 'இதெல்லாம் ஏன் நடக்கிறது? தாயும் தந்தையும் சேர்ந்து

அக்காவை வீட்டிலிருந்து துரத்திவிட ஏன் இவ்வளவு ஆவலுடையவர்களாய் இருக்கிறார்கள்?' என்பதுதான் அவளுக்குப் புலப்படவில்லை. 'அக்கா யாரையும் ஒன்றும் சொல்லவில்லையே? யாருடனும் அவள் சண்டையும் இடவில்லை. என்னையும் இம்மாதிரியே ஒரு நாளைக்குத் துரத்திவிடுவார்களோ? நானும் இவ்வாறே மூலையில் உட்கார்ந்து அழ நேருமோ? அப்போது என்மீது யாரும் இரங்கமாட்டார்கள்' என்று நினைத்து அவள் மிகப் பயந்துபோனாள்.

அந்திவேளை. நிர்மலா மொட்டைமாடியில் தனியே உட்கார்ந்து ஆவலுடன் ஆகாயத்தை நோக்கிக்கொண்டிருந்தாள். 'நாமும் பறந்து செல்லலாம்; இந்தக் கவலைகளெல்லாம் நீங்கிவிடும்' என்று அவள் நினைத்தாள். அநேகமாக அந்த வேளையில் இரு சகோதரிகளும் எங்காவது உலாவப்போவது வழக்கம். கோச்சுவண்டி வெளியில் சென்றிருந்தால் தோட்டத்திலாவது உலாவிவருவார்கள். ஆகையால் கிருஷ்ணா அப்போது அவளை இங்குமங்கும் தேடி அலைந்தாள். எங்கும் அவளைக் காணாமற்போகவே மாடிக்கு வந்தாள். அங்கு நிர்மலாவைப் பார்த்தவுடனே சிரித்துக்கொண்டு, "நீ இங்கு வந்து ஒளிந்துகொண்டிருக்கிறாயா? நான் உன்னை வீடு முழுதும் தேடித் திரிந்தேன். வா அக்கா, போகலாம்; வண்டியைப் பூட்டச்சொல்லி வந்திருக்கிறேன்" என்றாள் அவள்.

நிர்மலா வாடிய முகத்துடன், "நீ போ. நான் வரவில்லை" என்றாள்.

கிருஷ்ணா: இல்லை, அக்கா! நீ மிகவும் நல்லவளாயிற்றே! இன்று நீ கட்டாயம் வரத்தான் வேண்டும். எவ்வளவு மெதுவாகக் குளிர்ந்த காற்று வீசுகிறது, பார்.

நிர்மலா: என் மனம் சரியாக இல்லை. நீ போய் வா.

இதைக் கேட்டதும் கிருஷ்ணாவின் கண்களில் நீர் ததும்பியது. அவள் நடுங்கிய குரலில், "அக்கா, இன்று நீ ஏன் வரமாட்டாய்? நீ ஏன் என்னோடு இன்று சரியாகப் பேசமாட்டேனென்கிறாய்? ஏன் இங்குமங்கும் ஒளிந்து திரிகிறாய்? தனியே உட்கார்ந்து என் மனம் அலுத்துவிட்டது. நீ வரவில்லையானால் நானும் போகவில்லை. இங்கேயே உன்னோடு உட்கார்ந்திருப்பேன்" என்றாள்.

நிர்மலா: நான் இங்கிருந்து போய்விட்டால், அப்போது என்ன செய்வாய்? அப்போது யாரோடு விளையாடுவாய்? யாருடன் உலாவப் போவாய்? சொல், பார்க்கலாம்.

கிருஷ்ணா: நானும் உன்னோடு கூடவே வருகிறேன். இங்கே என்னால் தனித்து இருக்கமுடியாது.

நிர்மலா புன்சிரிப்புடன், "அம்மா உன்னை என்னோடு வர விட மாட்டாளே" என்றாள்.

கிருஷ்ணு: அப்படியானால் நானும் உன்னைப் போகவிடமாட்டேன். 'நான் போகமாட்டேன்' என்று நீ ஏன் அம்மாவிடம் கண்டிப்பாகச் சொல்லிவிடக்கூடாது?

நிர்மலா: நான் சொன்னால், அவள் கேட்கவேண்டாமா?

கிருஷ்ணு: அப்படியானால் இது உன் வீடு அல்லவா?

நிர்மலா: இல்லை; என் வீடாயிருந்தால் இப்படி ஏன் என்னை வீட்டை விட்டு வலுக்கட்டாயமாக விரட்டுகிறார்கள்?

கிருஷ்ணு: இப்படித்தானே என்னையும் ஒரு நாளைக்கு விரட்டியடிப்பார்கள்?

நிர்மலா: இல்லாவிட்டால் நீ மாத்திரம் இங்கேயே உட்கார்ந்திருக்கப் போகிறாயோ? நாம் எல்லோரும் பெண்கள்; நமக்கு எங்குமே வீடுகள் இல்லை.

கிருஷ்ணு: சந்திரனையுங் கூடத்தானே துரத்திவிடுவார்கள்?

நிர்மலா: சந்திரன் ஆண்பிள்ளையாயிற்றே? அவனைத் துரத்துவதாவது!

கிருஷ்ணு: அப்படியானால் பெண்களெல்லாம் ரொம்பக் கெட்டவர்கள் என்று சொல்லு.

நிர்மலா: கெட்டவர்களல்லரானால் ஏன் அவர்களை வீட்டை விட்டு விரட்டியடிக்கிறார்கள்?

கிருஷ்ணு: சந்திரன் மஹா பொல்லாதவன்; அவனை யாரும் துரத்துவதாகக் காணோம். நானும் நீயும் ஒரு ஜோலிக்கும் போவதில்லையே?

இந்தச் சமயத்தில் சந்திரனும் தடதடவென்று மாடிக்கு வந்து சேர்ந்தான். நிர்மலாவைப் பார்த்து, "அப்படியா! நீ இங்கே உட்கார்ந்திருக்கிறாயா? ஓஹோ! இப்போது வாத்தியம் வாசிக்கப் போகிறார்கள். அக்கா கலியாணப் பெண்ணாய் விடுவாள். பல்லக்கில் ஏறுவாள். ஓஹோ! ஓஹோ!" என்று குதித்தான் அவன்.

சந்திரனுடைய முழுப் பெயர் சந்திரபானு ஸின்ஹா என்பது. நிர்மலாவைவிட அவன் மூன்று வருஷம் சிறியவன்; கிருஷ்ணுவை விட இரண்டு வருஷம் பெரியவன்.

நிர்மலா: சந்திரா, என்னை அழக் கிளப்பினால் இப்போது போய் அம்மாவிடம் சொல்லி விடுவேன்.

சந்திரன்: அழுவானேன்? நீயும் வாத்தியம் வாசிப்பதை என்னுடன் கேள். ஓஹோ! நீ கலியாணப் பெண் ஆகப் போகிறாயோ?

என் கிருஷ்ணு, நீயாவது வந்து கேட்பாயா மாட்டாயா? இப்படிப் பட்ட வாத்தியம் இதற்கு முன்பு நீ கேட்டே இருக்கமாட்டாய்.

கிருஷ்ணு: பாண்டு வாத்தியத்தைவிடவா அது உயர்ந்தது? ஏண்டா!

சந்திரன்: ஆமாம், பாண்டை விட எவ்வளவோ ஆயிரம் மடங்கு, லக்ஷம் மடங்கு உயர்ந்தது. உனக்கு என்ன தெரியும்? ஒரு பாண்டு வாத்தியம் கேட்டுவிட்டால் அவ்வளவுதான்; அதை விட உயர்ந்த வாத்தியமே இல்லை யென்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். வாத்தியம் வாசிப்பவர்கள் சிவப்புப் பட்டைகளும், கறுப்புத் தொப்பிகளும் அணிந்திருப்பார்கள். அவர்கள் எவ்வளவு அழகாக இருப்பார்கள் தெரியுமா, பார்ப்பதற்கு? வாணவேடிக் கைகள்கூட நடக்கும். வாணப்பூக்கள் ஆகாயத்தில் பறந்து சென்று நக்ஷத்திரங்களிடம் போய்ச் சேரும்; அங்கிருந்து சிவப்பும் மஞ்சளும் பச்சையும் நீலமுமான நக்ஷத்திரங்கள் கீழே விழும். எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும் தெரியுமோ, அப்போது?

கிருஷ்ணு: இன்னும் என்ன என்ன நடக்கும், சந்திரா? எனக்கு எல்லாம் சொல்லிவிடு.

சந்திரன்: என்னுடன் வந்தாயானால், வழியில் உனக்கு எல்லாம் சொல்லிவிடுவேன். என்ன என்ன வேடிக்கைகள் நடக்கப் போகின்றனவோ, அவைகளை முழுதும் பார்த்தாயானால், உன் கண் விழி பிதுங்கிவிடும்! காற்றில் தேவப் பெண்கள் பறப்பார்கள்; நிஜமாகவே தேவஸ்திரீகள்!

கிருஷ்ணு: சரி வா, போகலாம். காண்பிக்காமல் போனாயோ, உதைதான் கிடைக்கும் உனக்கு.

சந்திரபானுவும் கிருஷ்ணுவும் போய்விட்டார்கள். நிர்மலா தனியாக உட்கார்ந்திருந்தாள். கிருஷ்ணு போய்விட்டபடியால் அவளுக்கு அப்போது கோபம் கோபமாக வந்தது. அவள் தன் பிராணனாக மதித்து நேசித்து வந்த கிருஷ்ணு, இன்று இவ்வளவு கொடூரமானவ ளாகிவிட்டாளே! விஷயம் அப்படிப் பிரமாதமான தன்று. ஆயினும், துன்பமுற்ற மனம், நோயுற்ற கண்போன்றது; சிறிது காற்றடித்தாலும் அதில் வலி தோன்றும். நிர்மலா வெகு நேரம் வரையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள். 'தம்பி தங்கை, தாய் தந்தையர் எல்லோரும் இப்படியே என்னை மறந்து விடுவார்கள். என்னைக் கண்திறந்துகூடப் பார்க்க மாட்டார்கள்! பின்பு இவர்களைக் காண்பதுகூட எனக்குப் பிரம்மப் பிரயத்தன மாகி விடும்!' என்று எண்ணமிட்டாள் அவள்.

சோலையில் மலர்கள் அலர்ந்திருந்தன. இனிய நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. குளிர்ந்த மெல்லிய தென்றல் வீசியது. ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பூத்திருந்தன. நிர்மலா துன்பமயமான யோசனைகளில் ஆழ்ந்தவண்ணமே படுத்துத் தூங்கி விட்டாள். தூக்கத்தில் அவள் மனம் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கியது.

எதிரே அலைகள் புரளும் ஒரு நதி. நதிக்கரையில் அவள் படகுக்காகக் காத்திருக்கிறாள். மாலை நேரம். இருள் பயங்கரமான விலங்குபோல் கவ்விக்கொண்டு வருகிறது. 'எப்படி ஆற்றைக் கடப்போம்? எவ்வாறு வீடு போய்ச் சேருவோம்?' என்று அவள் மனம் கலங்குகிறது. 'இங்கேயே இருட்டிவிடுமோ? நான் இங்கே தனியாக எப்படி இரவைக் கழிப்பேன்?' என்று அவள் அழுகிறாள். திடீரென ஓர் அழகிய படகு துறைக்கு வருகிறது. அவள் ஆனந்த மிகுதியினால் குதித்தெழுகிறாள். படகு துறைக்கு வந்து சேர்ந்தவுடனே அவள் அதில் ஏறப் போகிறாள். படகில் கால் வைப்பதற்கு முன்னமேயே படகோட்டி, 'உனக்கு இங்கு இடமில்லையே!' என்று கூறிவிடுகிறான். அவள் அவனிடம் கெஞ்சுகிறாள்; அவன் காலில் விழுகிறாள்; அழுகிறாள். ஆனால் அவன், 'உனக்கு இடமில்லையே!' என்பதையே திருப்பித் திருப்பிக் கூறுகிறான். ஒரு கணத்தில் படகு புறப்பட்டுவிடுகிறது. அவள் அலறிப் புடைத்துக் கொள்ளுகிறாள். 'நிர்மானுஷ்யமான நதிக்கரையில் இரவு முழுவதையும் எப்படிக் கழிப்பது?' என்று நினைத்து, அவள் நதியில் குதித்தாவது அந்தப் படகைப் பிடித்துக்கொள்ள விரும்புகிறாள். இதற்குள் எங்கிருந்தோ, 'நில்! நில்! அது மிகவும் ஆழமான இடம். குதித்தாயானால் மூழ்கிவிடுவாய். அந்தப் படகு உனக்கல்ல. இதோ நான் வருகிறேன். என் படகில் உட்கார்ந்துகொள். உன்னை நான் அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுவேன்' என்ற குரல் கேட்கிறது. அந்தக் குரல் எங்கிருந்து வந்ததென்று அவள் சுற்றுமுற்றும் பயத்துடன் பார்க்கிறாள். சிறிது நேரத்தில் அங்கு ஓர் ஓடம் வந்து சேருகிறது. அதில் பாய் இல்லை; பாய்மரமும் இல்லை; துடுப்பு இல்லை; அடியில் ஓட்டை; பலகைகள் உடைந்திருக்கின்றன. ஓடத்தில் நீர் நிரம்பியிருக்கிறது. ஒரு மனிதன்-அவன்தான் படகோட்டி-நீரை வெளியில் இறைத்துக் கொண்டிருக்கிறான். 'இந்த உடைந்த ஓடமா என்னைக் கரை சேர்க்கப் போகிறது?' என்று அவள் அவனை வினவுகிறாள். அவன், 'உனக்கு இதுதான் அனுப்பப்பட்டது. வந்து உட்கார்ந்துகொள்' என்கிறான். அதில் உட்காரலாமா, வேண்டாமா வென்று ஒரு க்ஷணம் அவள் யோசனை செய்கிறாள். முடிவில் உட்காருவதாகவே

தீர்மானித்துவிடுகிறாள். 'கரையில் தனியாய் விழுந்துகிடப்பதை விட ஓடத்தில் உட்கார்ந்துவிடுவதே நலமல்லவா? கொடிய விலங்குகளின் கையில் சிக்குவதைவிட ஆற்றில் மூழ்கிவிடுவதே மேலல்லவா? ஓடம் ஒருகால் அக்கரை போய்ச் சேர்ந்தாலும் சேரலாம். யார் கண்டது?' என்று நினைத்துப் பிராணனைப் பிடித்துக்கொண்டு, அவள் ஓடத்தில் உட்கார்ந்து விடுகிறாள். கொஞ்சநேரம் ஓடம் ஆடிக்கொண்டே செல்லுகிறது. ஆனால் ஒவ்வொரு கணமும் அதில் நீர் புகுந்துகொண்டே இருக்கிறது. அவளும் படகோட்டியுடன் இருகைகளாலும் நீரை வாரியிறைக்கிறாள். கைகள் சோர்ந்து விழுகின்றனவேயன்றி, நீர் வரவர அதிகமாகிக்கொண்டேதான் இருக்கிறது. கடைசியில் ஓடம் சுழலுகிறது. 'இதோ மூழ்கிவிட்டது! மூழ்கியே விட்டது!' என்ற நிலைமைக்கு வந்துவிட்டது. அச்சமயம் அவள் ஒரு கண்காணு உதவியை நாடி, இரு கைகளையும் விரித்துவிடுகிறாள். படகு தண்ணீருக்குள் போய்க்கொண்டிருக்கிறது. அவளுடைய கால்கள் நிலை பெயர்ந்துவிட்டன. அவள் உரக்கக் கூவுகிறாள்.

கூவியவாறே அவள் கண்விழித்தபோது, தன் தோளைப் பிடித்துக் குலுக்கியவண்ணம் தாய் எதிரே நிற்பதைக் கண்டாள்.

அத்தியாயம் 2

சச்சரவும் சாவும்

பாபு உதயபானுலாலின் வீடு கடைத்தெருவில் இருக்கிறது. தாழ்வாரத்தில் தட்டானின் சுத்திகளும், வாயிற்பக்கத்து அறையில் தையற்காரனின் ஊசிகளும் வேலை செய்து கொண்டிருக்கின்றன. எதிரே வேப்பமரத்தடியில் தச்சன் கட்டில்கள் செய்து கொண்டிருக்கிறான். பின்கட்டில் சமையற்காரர்கள் மிட்டாய்கள் தயாரிப்பதற்கு அடுப்புக் குழிகள் தோண்டப்பட்டிருக்கின்றன. விருந்தினர்களுக்காக ஒரு தனி வீடு அமர்த்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விருந்தினருக்கும் ஒரு தனிக் கட்டில், ஒரு நாற்காலி, ஒரு மேஜை கொடுக்கும்படி ஏற்பாடுகள் நடக்கின்றன. மும்மூன்று விருந்தினர்களுக்குச் சேர்த்து ஒவ்வொரு பணியாள் வைப்பதற்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. விவாகதினம் இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. ஆனால் இப்போதிலிருந்தே ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பிள்ளைவீட்டுக்காரர்கள் குறை சொல்ல வழியில்லாதபடி அவர்களுக்கு மரியாதைகள் நடக்கவேண்டுமல்லவா? "போனால் அப்படிப்பட்ட கலியாணத்துக்கல்லவா போகவேண்டும்!'

என்று அவர்கள் பிற்காலத்திலும் அடிக்கடி சொல்லவேண்டாமா? ஒரு முழு வீடு நிறையப் பாத்திரங்கள்; தேநீர் தயாரிக்கும் சாமான்கள், சிற்றுண்டித்தட்டுகள், தாம்பாளங்கள், லோட்டாக்கள், கோப்பைகள் முதலியன. தினமும் கட்டிலில் உட்கார்ந்து ஹுக்கா பிடிப்பவர்களெல்லாம் இப்போது வேலையில் முனைந்திருக்கின்றனர். 'தம்மால் பிறருக்கும் உபயோகமுண்டு' என்பதைக் காட்டிக்கொள்ள இதைப் போன்ற தருணம் இனி அவர்களுக்கு வெகு நாட்களுக்கு வாய்க்காதல்லவா? ஒரு மனிதன் போக வேண்டிய இடத்துக்கு ஐந்து பேர் ஓடுகின்றனர். வேலை நடப்பது கொஞ்சம்; கூப்பாடு தான் அதிகம். ஒன்றும் இல்லாத விஷயங்கள் மீது மணிக்கணக்காக வாதங்களும் தர்க்கங்களும் நடைபெறுகின்றன. கடைசியில் வக்கீல்தான் தீர்ப்புச் செய்கிறார். "இந்த நெய் நன்றாயில்லை" என்கிறான் ஒருவன். "இதைவிட நல்ல நெய் கடையில் கிடைக்குமானால், நான் என் காதை ஒட்ட அறுத்துக்கொள்கிறேன்" என்கிறான் மற்றொருவன். "இதில் துர்நாற்றம் வீசுகிறதே! இப்படியா இருக்கும் உயர்ந்த நெய்?" என்கிறான் மூன்றாமவன். "உன் மூக்கு அழுகிக்கிடக்கிறது. நல்ல நெய் எப்படி இருக்குமென்று தெரியுமா உனக்கு? இங்கு வந்ததுமுதல்தானே நீ நெய் சாப்பிட்டுவருகிறாய்? இல்லாவிட்டால் நீ நெய்யையே கண்டிருக்கமாட்டாயே" என்கிறான் நான்காம் ஆசாமி. இப்படியாகச் சச்சரவுகள் வலுத்துக் கொண்டேபோக, வக்கீல் வந்துதான் அவைகளைத் தீர்க்கவேண்டியிருக்கிறது.

இரவு மணி ஒன்பது. உதயபானுலால் அறையில் உட்கார்ந்து செலவுகளைப்பற்றித் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார். அவர் சாதாரணமாக ஒவ்வொரு நாளுமே இப்படிச் செய்வது வழக்கந் தான். ஆனால் பிரதிதினமும் அதில் ஏதாவது மாறுதலோ கூடுதலோ செய்யவேண்டித்தான் வரும். அவருக்கு எதிரே **கல்யாணி** புருவத்தை நெளித்துக்கொண்டு நின்றிருந்தாள். வெகு நேரங் கழித்துப் பாபு தலை நிமிர்ந்து, "பத்தாயிரத்துக்குக் குறையாதுபோல் இருக்கிறது. ஒரு வேளை அதிகமானாலும் ஆகலாம்" என்றார்.

கல்யாணி: இந்தப் பத்து நாட்களுக்குள் ஐயாயிரம் பத்தாயிரம் ஆகிவிட்டது. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இன்னும் ஒரு மாதத்தில் அது ஒரு லக்ஷத்துக்கு எட்டிவிடும்போல் இருக்கிறதே.

உதயபானு: நான் என்ன செய்வது? ஊரார் சிரித்தால் அது நன்றாயிருக்குமா? யாராவது ஒரு குறை கூறத் தொடங்கினால் ஊரார் என்ன சொல்லுவார்கள் தெரியுமோ? 'பேர் பெரிதே தவிரக்

காசுக்கு வழியில்லை' என்றுதான் சொல்லுவார்கள். நம்மிடமிருந்து ஒரு காசுகூட வரதக்ஷிணை வாங்காதபோது, விருந்தினர்களை ஆதரிப்பதிலும், அவர்களுக்கு மரியாதை செய்வதிலுமாவது குறையில்லாமல் பார்த்துக்கொள்வது நம் கடமையல்லவா?

கல்யாணி: பிரமன் உலகத்தை ஸ்ருஷ்டித்த நாள்முதல் இன்று வரையில், பிள்ளை வீட்டுக்காரர்களைச் சந்தோஷப்படுத்தியவர்களே இல்லை. கலியாணத்திற்குக் குறைகள் கூறுவதற்கும், வசைமொழிகள் பொழிவதற்கும் ஏதாவது ஒரு காரணம் அவர்களுக்குக் கிடைத்து விடும். தன் வீட்டில் கூழுக்கு வழியில்லாதவன் கூடக் கலியாணத்திற்கு வந்தால் மஹாராஜாவாகிவிடுவான். 'எண்ணெயில் மணமில்லை', 'இந்த உபயோகமற்ற ஸோப் இவர்களுக்கு எங்கேதான் கிடைத்ததோ?', 'வேலைக்காரர்கள் நாம் சொல்வதைக் காதில் வாங்கிக்கொள்வதே இல்லை', 'விளக்குகள் புகைவிட்டுக்கொண்டு மங்கலாக எரிகின்றன', 'நாற்காலிகள் நிறைய வண்டி வண்டியாக மூட்டைப் பூச்சிகள்', 'கட்டில்களெல்லாம் திரேதாயுகத்தவைபோலத் தளர்ந்திருக்கின்றன', 'சம்பந்திகளின் விடுதியில் காற்றையே காணுேமே! ஒரே குமைச்சல்; இப்படியா!'—இவ்வாறுன ஆயிரக் கணக்கான குற்றச்சாட்டுக்கள் வந்துகொண்டேயிருக்கும். அவர்களை எவ்வளவு தூரந்தான் நம்மால் தடுக்கமுடியும்? இத்தகைய குறைகளுக்கு இடமில்லையென்ருலோ, வேறு விதமான குறைகள் கூறத் தொடங்குவார்கள். 'என்ன, இந்தத் தைலம் தாசிகள் உபயோகிக்கும் தைலம் மாதிரியாகவல்லவோ இருக்கிறது? எங்களுக்குச் சாதாரணமான தைலம் போதாதா?', 'தம் பணப்பெருமையை இப்படித்தானு காட்டவேண்டும்? எவ்வளவு உயர்ந்த ஸோப் அனுப்பியிருக்கிருர்கள், பாருங்கள்! நாங்கள் ஸோப்பையே பார்த்ததில்லைபோல் இருக்கிறது!', 'வேலையாட்களா இவர்கள்! எப்போது பார்த்தாலும் யமதூதர்கள் மாதிரி நம் பிராணனை வாங்கிவிடுகிருர்களே!', 'கண்கள் கூசும்படி என்ன விளக்குகள் ஐயா இவை! ஐந்தாறு நாட்கள் இந்த விளக்கில் இருந்தால் போதும்! கண்கள் குருடாவதற்குக் கேட்கவேண்டுமா?', 'நமக்கென்று இந்த விடுதிதானு கிடைக்கவேண்டும்! நாம் செய்த பாவமையா பாவம்! என்ன இப்படியா சூறைக் காற்றடிக்கும்!'—இப்படிக் குறைகள் பேசுவதற்குக் கணக்கே இல்லை. அவர்கள் செய்யும் பரிகாசங்களைப்பற்றியோ, நாம் யோசனை செய்யவே வேண்டாம்.

உதயபானு: சரி; என்னை முடிவில் என்ன செய்யவேண்டுமென்று சொல்லுகிருய்?

கல்யாணி: அதுதான் சொல்லுகிறேனே! ஐயாயிரத்துக்குமேல் செலவழிப்பதில்லையென்று உறுதியாகத் தீர்மானித்து விடவேண்டி

யதுதான். கையிலோ தம்பிடி இல்லை. எல்லாம் கடன் வாங்கி நடக்கிறது. நம் வாழ்க்கையிலேயே அடைக்க முடியாதபடி ஏன் அவ்வளவு கடன் வாங்கவேண்டும்? தவிர, இன்னும் குழந்தைக ளில்லையா நமக்கு? அவர்களுக்கும் ஏதாவது செய்யத்தானே வேண்டும்?

உதயபானு: அதற்கெல்லாம் என்ன இப்போது? நான் என்ன இன்றைக்கே செத்துப் போகிறேனு?

கல்யாணி: சாவதையும் பிழைப்பதையும் யார் கண்டார்கள்?

உதயபானு: அப்படியானுல் நீ அதைத்தான் கோருகிருய் போலிருக்கிறது?

கல்யாணி: இதில் ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம் வரவேண்டும்? எல்லோரும் ஒரு நாள் சாகவேண்டியவர்கள்தாமே? நாம் என்ன இங்கே சாகாவரம் பெற்று வந்திருக்கிருேம்? கண்களை மூடிக்கொண்டால் மாத்திரம் மேல்வரும் காரியங்கள்தாம் நின்று விடுமா? நான் தினமும் பார்த்துக்கொண்டுதான் வருகிறேன்: தந்தைமார் இறந்து போக, அவர்களின் குழந்தைகள் சோற்றுக்கு வழியின்றித் தெருத்தெருவாய் அலைகிருர்கள். மனிதன் முன்பின் யோசியாமல் அப்படிப்பட்ட காரியங்கள் ஏன் செய்யவேண்டும்?

உதயபானு, "என் சாவு நாட்கள் நெருங்கிவிட்டன வென்று நீ குறி சொல்லுகிருய்போலிருக்கிறது! சுமங்கலிகளாக வாழ்வதில் பெண்களுக்கு வெறுப்பு ஏற்படுவதை இதுவரையில் நான் கேட்டதே இல்லை. இது எனக்குப் புதுமையாயிருக்கிறது. விதவையாய் வாழ்வதிலும் ஏதாவது சுகம் இருக்கத்தான் செய்யும்!" என்று எரிந்து விழுந்தார்.

கல்யாணி: ஏதாவது உலகவிஷயத்தைச் சொன்னுலே, நீங்கள் விஷத்தைக் கக்குகிறீர்கள். 'இவளுக்கு எங்கும் போக்கு இல்லை; நான் போடும் சாப்பாடு தவிர வேறு வழியில்லை' என்று நீங்கள் நினைப்பதுதானே இதற்குக் காரணம்? அல்லது வேறு ஏதாவது உண்டோ? ஏதாவது ஒன்று சொன்னுல் போதும்; உடனே தலையை மிதிக்க வேண்டியதுதான். நான் வீட்டு வேலைக்காரி; சாப்பாடு, துணி இவைகளோடுதான் எனக்கு உறவுபோலிருக்கிறது? எவ்வளவு தாழ்ந்து போகிறேனே, அவ்வளவுக் கவ்வளவு மேலேறுகிறீர்கள். உதவாக் கட்டைகளெல்லாம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்; நான் வாய் திறக்கக் கூடாது. மதுமாமிசங்களில் எவ்வளவு வேண்டுமானு லும் அழிக்கலாம்; 'இம்' என்று சொல்லக் கூடாது. இவை களெல்லாம் நம் குழந்தைகளின் தலையில்தானே வந்து விடியும்?

உதயபானு: நான் என்ன உனக்கு அடிமையா?

கல்யாணி: நான் மாத்திரம் உங்களுக்கு வேலைக்காரியா?

உதயபானு: பெண்கள் வாக்கையே மந்திரமாகக் கொள்ளும் கணவர்களின் கோஷ்டியில் சேர்ந்தவனல்ல நான்.

கல்யாணி: கணவர்களிடம் செருப்படி பெறும் மனைவிமார் களில் நானும் ஒருத்தியல்ல!

உதயபானு: இது ஏதடா இழவு! நான் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன்; என் இஷ்டப்படி செலவழிக்கிறேன். மற்றொருவருக்கு இதைப் பற்றிப் பேச என்ன அதிகாரம்?

கல்யாணி: சரிதான்; உங்கள் வீட்டை இனி நீங்களே சமாளித்துக்கொள்ளுங்கள். என்னைப்பற்றிச் சிந்துவார்களே இல் லாத இந்த வீட்டைத் தூரத்திலிருந்தே கும்பிடுகிறேன். இந்த வீட்டில் உங்களுக்கு எவ்வளவு அதிகாரமுண்டோ அவ்வளவே—அதைவிட ஓர் எள்ளத்தனைகூடக் குறையாத—அதிகாரம் எனக் கும் உண்டு. நீங்கள் உங்கள் மனத்தில் ராஜாவானால், நானும் என் மனத்தில் ராணி. இந்த வீட்டை நீங்களே கட்டிவைத்துக்கொள் ளுங்கள். எனக்குச் சாப்பாட்டுக்கு ஒன்றும் குறைவில்லை. உங்கள் குழந்தைகளாயிற்று, நீங்களாயிற்று; கொன்றால் கொல்லுங்கள், காப்பாற்றினால் காப்பாற்றுங்கள். என் கண்களினால் நான் இனி ஒன்றையும் பார்க்க மாட்டேன்; மனத்துச்கும் துன்பம் இராது. கண் போனாலும் போகட்டும்; பீளை விடும்!

உதயபானு: நீ சமாளிக்காவிட்டால், குடியே முழுகிப்போய் விடும் போலல்லவோ பேசுகிறாய்? நான் ஒருவனாகவே இப்படிப் பட்ட பத்துக் குடித்தனங்களைத் தாங்கமுடியும்.

கல்யாணி: யார், நீங்களா! இன்றைக்குச் சொல்லுகிறேன்: இன்னும் ஒரு மாதத்தில் இந்தக் குடித்தனம் நாசமாகாவிட்டால், என்னைக் கேளுங்கள்.

இதைச் சொல்லும்போதே கல்யாணியின் முகம் சிவந்தது. சரேலென்று எழுந்து அவள் அறையை விட்டு அகன்றாள். வக்கீலவர்கள் வழக்குகளைக் குறைக்கும் நெடுக்கும் விசாரிப்பதில் கெட்டிக்காரரே யொழிய, ஸ்திரீகளின் சுபாவத்தை அறிவதில் அவருக்கு அவ்வளவு போதாது. இந்த வித்தையில்தான், மனிதன் கிழவனாகியுங்கூடப் பிரயோஜனமில்லாமற் போவது வழக்கம். இப்போதாவது கொஞ்சம் தாழ்ந்து போயிருந்தாரானால், கல்யாணி சாந்தமாய்ப் போயிருப்பாள். அது அவரால் செய்யக் கூடவில்லை. போதாக்குறைக்கு அவள் போகும்போது இன்னு மொரு குண்டை வீசி எறிந்தார்; "பிறந்தகத்துப் பெருமையாக் கும்!" என்றார்.

கல்யாணி வாயிற்படியில் நின்றுகொண்டே கணவனைச் சிவந்த கண்களால் நோக்கி, "பிறந்தவீட்டுக்காரர்கள்தாம் என் விதிக்கு உடந்தைகளா? அவர்கள் சாப்பாட்டுக்குக் காத்திருக்கும்படி நான் அவ்வளவு தாழ்ந்து போய்விடவில்லை!" என்ற வார்த்தைகளைக் கொட்டினாள்.

உதயபானு: அப்படியானால் எங்கேதான் போகப் போகிறாய்?

கல்யாணி: என்னைப் பற்றி நீங்கள் யார் கேட்பதற்கு? ஈசுவரனுடைய சிருஷ்டியில் எண்ணிலடங்காத ஜீவன்களுக்கு இடம் இருக்கும்போது என் ஒருத்திக்குத்தானா இடமில்லை?

இதைச் சொல்லிவிட்டுக் கல்யாணி அறையை விட்டு வெளியில் சென்றாள். அவள் முற்றத்தில் வந்து ஒருதரம் ஆகாயத்தை நோக்கினாள். அந்த வீட்டிலிருந்து அவள் எவ்வளவு கொரேமாக நீக்கப்படுகிறாள் என்பதற்கு நக்ஷத்திரங்களைச் சாக்ஷியாக வைத்துக் கொண்டாள் போலும்!

இரவு மணி பதினொன்று. வீட்டில் எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. இரண்டு பிள்ளைகளின் கட்டில்களும் அவளது அறையில்தான் இருப்பது வழக்கம். அவள் தன் அறையில் நுழைந்தாள். சந்திரபானு தூங்கிக்கொண்டிருந்தான். எல்லோரையும் விடச் சிறியவனான சூரியபானு, கட்டிலினின்றும் எழுந்து உட்கார்ந்திருந்தான். தாயைக் கண்டவுடனே அவன், "எங்கே அம்மா போயிருந்தே நீ?" என்று கூவினான். கல்யாணி தூரத்திலிருந்தே, "எங்கேயும் இல்லை, கண்ணே! உங்கள் அப்பாவிடம் போயிருந்தேன்" என்றாள்.

சூரியபானு: நீ போயிட்டயே; எனக்கு இங்கே ஒரே பயமாயிருந்தது. நீ ஏன் போனே, சொல்லு.

தாயின் மடியில் ஏறக் குழந்தை இரு கைகளையும் நீட்டித் தாவியது. கல்யாணியினால் தன்னைத் தடுக்க இயலவில்லை. அவளுடைய கொதித்த மனம், தாயின் அன்பாகிய அமுத வெள்ளத்தில் ஆழ்ந்துவிட்டது. சினத்தின் வெப்பத்தினால் உலர்ந்த இருதயத்தின் மெல்லிய தண்டுகள் மீண்டும் பசுமை பெற்றன. அவள் கண்களில் நீர் நிரம்பியது. குழந்தையை மடியிலேந்தி மார்போடு அணைத்த வண்ணம், "என்னை ஏன் நீ கூப்பிடவில்லை, கண்ணே!" என்றாள் அவள்.

சூரியபானு: நான் கூப்பிட்டேன், அம்மா. உன் காதிலே விழுந்தால்தானே! சொல்லு, இனிமே எங்கேயும் போகமாட்டியே?

கல்யாணி: இல்லையடா, கண்ணு! இனி எங்கும் போகமாட்டேன்.

கல்யாணி குழந்தையுடன் கட்டிலில் படுத்துக்கொண்டாள். தாயின் இருதயத்தோடு அணைக்கப்பட்ட குழந்தை பயம் நீங்கி உடனே தூங்கிவிட்டது. கல்யாணியின் மனத்தில் பலவேறு எண்ணங்கள் உதித்தன. கணவனின் வார்த்தைகள் அவளை வீட்டை விட்டுப் போகத் தூண்டின. ஆனால் குழந்தைகளின் முகத்தைக் கண்டவுடனே, வாத்ஸல்யத்தினால் அவள் மனம் கரைந்துவிட்டது. 'குழந்தைகளை எப்படி விட்டுப் போவது? என் ரத்தினங்களை யார் காப்பாற்றுவார்கள்? இவைகள் யாரிடம் இருக்கும்? காலங் காலையில் இவர்களுக்குப் பாலும் ஹல்வாவும் யார் ஊட்டுவார்கள்? இவர்களோடு தூங்கி இவர்களோடு கண்விழிப்பவர்கள் யார்? பாவம், குழந்தைகள் எனக்காக ஏங்கிப் போகும். இல்லை; குழந்தைகளே! உங்களை விட்டுப் போகமாட்டேன். உங்களுக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளுவேன். நிராதரவு, அவமானம், தூற்றல்கள், வசைமொழி, மிரட்டல்—எல்லாவற்றையும் உங்களுக்காகப் பொறுத்துக்கொள்வேன்' என்று எண்ணமிட்டாள் அவள்.

அங்கே கல்யாணி குழந்தையுடன் படுத்துக்கொண்டாள். ஆனால் வக்கீலுக்கோ தூக்கமே வரவில்லை. மனத்தைப் புண்படுத்தும் வார்த்தைகளை அவர் விரைவில் மறப்பவரல்ல. 'ஹூம்! அப்படியா! இவ்வளவு அகந்தையா! இவள் புருஷனும் நான் மனைவியும் போலல்லவா இருக்கிறது! ஒரு வார்த்தை சொல்வதே ஆபத்தாய் முடிகிறதே! நான் இவளுக்கு அடிமையாக இருக்க வேண்டுமா? வீட்டில் தான் ஒருத்திதான் இருக்கவேண்டும், மற்றவர்களையெல்லாம் துரத்தியடிக்க வேண்டும் என்ற எண்ணம் போலிருக்கிறது! இத்தனை பொறுமையா! இவன் எப்படியாவது செத்தால், நாம் தனியாய்ச் சுகமாக வாழலாமென்று கோருகிறாளே! எவ்வளவுதான் மறைத்து வைத்தாலும் அகத்திலிருப்பது வாயிலிருந்து எப்படியோ வெளிவந்துதான் விடுகிறது. நானும் எவ்வளவோ நாட்களாகப் பார்க்கிறேன்; இப்படிப் பொல்லாப்புச் சொல்வதே இவள் வழக்கமாகிவிட்டது. பிறந்தகத்து அபிமானமெல்லாம் அங்கே போனாலல்லவா தெரியும்? இங்கே எல்லாரும் மரியாதையாகத்தான் பேசுவார்கள். அங்கே போய் அவர்கள் குடலையறுத்தால், அப்போது தெரியும் விஷயம்! அழுதுகொண்டே திரும்பி வருவாள். என்ன அகம்பாவம்! என்ன கர்வம்! இவள்தான் வீட்டைத் தாங்குகிறாளாம்! நான்கு நாள் நான் வீட்டை விட்டுப் போனால் தெரியும், இவள் படும் பாடு! நான்கே நாட்கள்; அதற்குள் இவள் ஆணவமெல்லாம் அடங்கிவிடும். இவள் கர்வத்தை ஒழிக்கத்தான் வேண்டும். வைதவ்யத்தின் சுகத்தையும் கொஞ்சம்

அனுபவித்துப் பார்க்கட்டுமே! என்னை இப்படிச் சபிப்பதற்கு இவளுக்கு எப்படித்தான் தைரியம் வந்ததோ? இவளுக்கு என்மீது அன்பே இல்லை. அல்லது, எவ்வளவு சபித்தாலும் இவன் வீட்டை விட்டு நகரமாட்டான், அதிலேயே ஒட்டிக்கொள்வான் என்று நினைத்திருக்கவேண்டும். ஆம், அதுதான் இருக்கும். சம்சாரத்தில் ஒட்டிக்கொள்ளும் மனிதன் நானல்ல. இப்படிப்பட்ட ஜீவன்களோடு போர் புரியும் இந்த வீடு பாழாகப்போனால்தான் என்ன? இது வீடா? நரகமா? மனிதன் வெளியிலிருந்து களைத்துச் சளைத்து வந்தால் வீட்டில் சுகம் கிடைக்குமென்பார்கள். இங்கே சுகத்துக்குப் பதிலாகத் திட்டுத்தான் கிடைக்கிறது. என் சாவுக்காக விரதம் கொண்டிருக்கிறாள். இதுதானா இருபத்தைந்து வருஷ தாம்பத்திய வாழ்க்கையின் முடிவு? அவ்வளவுதான்; இனிப் புறப்பட வேண்டியதுதான். இவள் கர்வம் முழுவதும் சாம்பலாகி மனம் குளிர்ந்த பின்புதான் நான் திரும்பிவருவேன். இதற்கு நாலைந்து நாட்களே போதாவா? 'எப்படிப்பட்டவன் கையில் சிக்கினோம்?' என்பது அப்போது தெரியும்."

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே, வக்கீல் எழுந்திருந்தார். பட்டு அங்கவஸ்திரத்தைத் தோளில் மாட்டிக்கொண்டார். கையில் கொஞ்சம் ரூபாய் எடுத்துக்கொண்டார். தம் கார்டை எடுத்து வேறு சட்டைப் பையில் போட்டார். பிரம்பை எடுத்துக் கொண்டு பேசாமல் வெளியே கிளம்பினார். வேலைக்காரர்களெல்லோரும் கும்பகர்ணனுக்குச் சீட்டு எழுதியிருந்தார்கள். நாய் சப்தம் கேட்டு விழித்துக் கொண்டது. அதுவும் அவரைப் பின் தொடர்ந்தது.

இவையெல்லாம் ஈசனின் விளையாட்டென்பதை யார் அறிவார்? வாழ்க்கையாகிய நாடக மேடையின் அந்த இரக்கமற்ற சூத்திரதாரன், செல்ல வியலாத ஒரு மறைவிடத்தில் உட்கார்ந்து, தன் சிக்கல்கள் நிறைந்த குரூர விளையாட்டுக்களை நடத்திக்கொண்டிருக்கிறான். போலியே உண்மையாகப் போகிறதென்பதும், அபிநயமே ஸத்தியமாக உருவெடுக்கப் போகிறதென்பதும் யாருக்குத் தெரியும்?

நிசி சந்திரனைத் தோல்வியுறச்செய்து தன் ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்திருந்தது. அதன் பிசாசுச் சேனைகள் பிரகிருதியின்மீது தம் அதிகாரங்களைச் செலுத்திவந்தன. நல்வினைகள் முகத்தை மூடிக் கொண்டு பதுங்கின. தீவினைகள் வெற்றிக் கோலத்துடன் தாண்டவமாடின. காட்டில் கொடிய விலங்குகள் இரைதேடி அலைந்தன. நகரங்களில் கொடிய மனிதப்பிசாசுகள் தெருக்களில் அலைந்து திரிந்தன.

பாபு உதயபானுலால் வேகமாகக் கங்கைக்கரைக்குச் சென்று கொண்டிருந்தார். அவர் தம் சட்டையைக் கழற்றித் துறையில் வைத்துவிட்டு, ஐந்து நாட்களுக்கு மீர்ஜாபூருக்குப் போய்விடுவதென்று தீர்மானித்தார். அவருடைய ஆடையைக் கண்டு ஜனங்கள் அவர் மூழ்கி இறந்தாரென்றே நம்புவார்கள். சட்டைப் பையில் அவருடைய கார்டு ஒன்று இருந்தது. அடையாளம் கண்டு பிடிப்பதில் சிரமம் ஏற்படாது. ஒரு நிமிஷத்தில் ஊர் முழுவதும் சமாசாரம் பரவிவிடும். 'மணி எட்டு அடித்தவுடனே என் வீட்டுவாயிலில் ஊரே வந்து கூடிவிடும். அப்பொழுதல்லவா பார்க்கவேண்டும், மகாராணி என்ன செய்கிறாளென்பதை?'

இவ்வாறு நினைத்துக்கொண்டே, பாபு தெருக்களின் வழியாகப் போய்க் கொண்டிருந்தார். திடீரென்று தம் பின்னால் யாரோ வருவது தெரிந்தது. 'யாரோ வழிப்போக்கன்' என்று முதலில் கருதினார். ஆனால் மேலே செல்லச் செல்ல, அவர் திரும்பும் சந்துகளிலெல்லாம் அந்த மனிதனும் திரும்பிக்கொண்டிருந்தான். அவன் ஏன் தம்மைத் தொடர்ந்து வரவேண்டுமென்ற சங்கை அவருக்கு உதித்தது. அவன் ஏதோ கெட்ட எண்ணத்தோடு வருகிறானென்பதும் தெளிவாயிற்று. அவர் உடனே பையிலிருந்து பாட்டரி விளக்கை ஏற்றி அம்மனிதனை நோக்கினார். பலசாலியான அம்மனிதன் தன் தோளில் ஒரு குண்டாந் தடியைத் தாங்கி வந்து கொண்டிருந்தான். பாபு அவனைக் கண்டவுடனே திடுக்கிட்டார். அவன் ஊரிலே பேர் போன ஒரு துஷ்டன். மூன்று வருஷங்களுக்கு முன்பு ஒரு கொள்ளை வழக்கில் அவன் அகப்பட்டுக் கொண்டிருந்தான். உதயபானுவே அந்த வழக்கில் சர்க்கார் தரப்பு வக்கீல். அவனுக்கு மூன்று வருஷச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போதிலிருந்தே அவன் அவரைத் தீர்த்துவிடுவதென்று தீர்மானித்திருந்தான். நேற்றுத்தான் சிறையிலிருந்து விடுபட்டு வந்தான். இன்று தெய்வவசமாகப் பாபு தன்னந்தனியே நள்ளிரவில் அகப்பட்டுக் கொண்டதால், இன்றே தன் எண்ணத்தை நிறைவேற்றி விட நிச்சயித்தான். இப்படிப்பட்ட தருணம் பிறகு வாய்க்காது. உடனே அவன் அவரைத் தொடர்ந்து சென்றான். அவன் அவரை அடிப்பதற்குத் தடியை ஓங்கின சமயத்தில், அவர் பாட்டரி விளக்கின் வெளிச்சம் அவன் முகத்தில் வீசியது. அந்தத் துஷ்டன் சிறிது வியப்புற்று, "பாபுஜி, என்னைத் தெரிகிறதா தங்களுக்கு? நான்தான் மதயீ" என்றான்.

பாபு, "நீ ஏன் என் பின்னாலேயே வருகிறாய்?" என்று அவனை அதட்டிக் கேட்டார்.

மதயீ: ஏன்? ரோட்டில் போகிறவனைக் கூட நீ தடை செய்வாயா என்ன? இந்தத் தெருவு உன் அப்பனுடையதா?

பாபு இளவயதில் குஸ்திகள் போட்டவர். இப்போதும் அவர் வாட்டசாட்டமாகவேதான் இருந்தார். அவருடைய நெஞ்சழுத்தமும் சாமானியமானதன்று. ஆகவே பிரம்பைக் கையில் சமாளித்

துக்கொண்டு, "இன்னும் உன் மனம் திருப்தியடையவில்லை போலிருக்கிறது. இந்தத் தடவை ஏழு வருஷம் சிறைவாசம் கிடைக்கும்" என்றார்.

மதயீ: ஏழு வருஷமானாலும் சரி, பதினாலு வருஷமானாலும் சரி, உன்னை உயிரோடு மாத்திரம் விடுவதில்லை. ஆம்; நீ என் காலில் விழுந்து இனி யாரையும் சிறைக்கு அனுப்புவதில்லையென்று சத்தியம் செய்து கொடுத்தாயானால், உன்னை விட்டுவிடுகிறேன். சொல், ஒப்புக் கொள்ளுகிறாயா?

உதயபானு: உனக்குக் கேடுகாலந்தான் கிட்டியிருக்கிறது.

மதயீ: எனக்கல்ல, உனக்குத்தான் மரணகாலம் சமீபித்திருக்கிறது. சொல், சத்தியம் செய்கிறாயா?—ஒன்று.

உதயபானு: நீ போகிறாயா அல்லது போலீஸ்காரனைக் கூப்பிடட்டுமா?

மதயீ: இரண்டு!

உதயபானு: (கர்ஜித்து) விலகிப் போடா, துஷ்டா, என் எதிரிலிருந்து!

மதயீ: மூன்று!

'மூன்று' என்ற ஒலி கிளம்பியதுதான் தாமதம்; பாபுவின் தலையில் ஓங்கிய தடியடி வீழ்ந்தது. அவர் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தார். 'ஐயோ! கொன்று விட்டானே!' என்பதுதான் அவர் வாயிலிருந்து வெளிவந்தது. மதயீ அருகில் சென்று பார்த்தான். மண்டையுடைந்து குருதிவெள்ளம் பெருகிக்கொண்டிருந்தது. நாடி ஓடுவதாகவே தெரியவில்லை. வேலை தீர்ந்துவிட்டதென்று அவன் அறிந்துகொண்டான். மணிக்கட்டிலிருந்த பொன் கைக் கடிகாரத்தையும் சட்டையிலிருந்த பொன் பித்தான்களையும் விரலிலிருந்த மோதிரத்தையும் கழற்றி எடுத்துக்கொண்டு, ஒன்றுமே நடவாததுபோல, அவன் அங்கிருந்து கம்பி நீட்டிவிட்டான். ஆம். கொஞ்சம் இரக்கங் கொண்டு பிணத்தைச் சாலையோரமாக ஒதுக்கிவிட்டான். ஐயோ பாவம்! அவர் என்ன நினைத்துக்கொண்டு புறப்பட்டார்? என்ன ஆகி விட்டது! வாழ்க்கையே! உன்னை விட அதிக சாரமற்ற பொருள் உலகத்திலேயே இல்லை. காற்றின் ஒரு வீச்சில் அணையும் விளக்கைப் போலவே நீயும் கணநேரத்தில் அழியும் பொருளாவாய். நீர்மேற் குமிழி அழிவதற்கும் சிறிது நேரம் பிடிக்கும். ஆனால் வாழ்க்கையில் அவ்வளவு சாரம் கூட இல்லை. மூச்சை நம்ப முடியுமா? 'தூங்குகையிலே வாங்குகிற மூச்சு, அது சுழி மாறிப் போனாலும் போச்சு' என்பதில் எவ்வளவு உண்மை இருக்கிறது! அந்த அழியுந்தன்மையின் அஸ்திவாரத்தின்மீதே நாம் எத்தனை மனக் கோட்டைகள் கட்டுகிறோம்! கீழே போகும் மூச்சு மீண்டும் மேலுக்கு வருமா என்பது நமக்குத் தெரியாது. ஆயினும் நாம் நம்மை அமரர்களாகக் கருதி எவ்வளவு தூரம் வரையில் யோசனை செய்கிறோம்!

(தொடரும்)

: வாழ்க்கை முறை :

—: மூலக் கற்பனை :—

* வே. ஸாரநாதன், எம்.ஏ. *

ஒருவன் தன் வாழ்க்கையின் அம்சங்களெல்லாம் ஒற்றுமைப் பட்டு இசைந்து ஒருங்கு சேர்ந்து செல்வதை லக்ஷியமாய் வைத்துக் கொண்டு தன் வாழ்நாளைச் செம்மையாய்க் கழிக்கவேண்டும். வாழ்க்கையைக் கடத்துவது ஒரு கலையில் தேர்ச்சியடைவதைப் போன்றது. நாம் படிப்பில் விருத்தியடைவதும், குணாதிசயங்களைப் பெறுவதும், ஞானமார்க்கம் புகுவதும், கீதம் சிற்பம் முதலியவை களிற் பயில்வது போன்றனவே. இவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவகை நுட்பமான அறிவாற்றலும் அப்பியாசமும் வேண்டும். நம்முடைய ஆத்மா தனக்காக மேன்மையும் அழகும் வாய்ந்த சரீரம் என்ற கோயிலைக் கட்டிக்கொண்டு அதில் வாழ வந்திருக்கிறது.

கோயிலுக்குச் சிற்பம்போல் வாழ்க்கைக்கு 'அளவின்கண் நிற்றல்' என்ற அப்பியாசம் இன்றியமையாதது. ஆங்கிலக்கவி யாகிய மில்டன் அதையே புகழ்ந்து, "உன் வாழ்நாளில் அதிசீக்கிர மாகவே நீ அளவின்கண் நிற்பதற்குக் கற்றுக்கொள்ளவேண்டும்; நல்ல இயல்புள்ள சுகத்தை அடையக் கற்றுக்கொள்" என்னும் பொருள்படப் பாடியிருக்கிறார். இதை வாழ்க்கைச் சிற்பம் என்று கூறலாம். இவ்வகையான வாழ்க்கைக் கட்டுமானம் அல்லது சிற்பத்தினால் நம் மனம் பூரித்து, நமக்கு இன்பக்கிளர்ச்சிகள் உண்டாகி, பிறகு சாந்தப்பட்டு, மனித சுகம் பெருகுகிறது; நம் வாழ்க்கையிலும் உள்ளத்திலும் உடலின்பம், உள்ளத்தின் இன்பம் என்ற இருவகை இன்பமும் இசைந்து ஓடுகின்றன - நம் மானிடப் பயிற்சியில். அப்பொழுது நம் வாழ்க்கைக்குச் சம்பூர்ணமான கற்பனாசக்தியின் விலாஸம் கிடைத்துவிடுகிறது; இறுதியில் ஞான வாழ்வும் பரிணமிக்கிறது.

மானிடம், மானிடப்பயிற்சி, மனித இயல்பைப் பயன்படுத்தல் என்பது, நாம் நம்மையே கண்காணித்தல், ஜாக்கிராவஸ்தையில் கூரிய முனையில் வசித்தல் என்ற பயிற்சிதான். எந்தச் செயலிலும் நடுநிலைமையில் நிற்பது, தராதரம் பார்ப்பது, சுற்றும் நோக்குவது, அதனுடன் துடித்தெழும் உயிரைப்போல் நம் சாமான்யமான

வழக்கங்களைப் பிளந்து செல்லும் மனம், நெஞ்சின் கிளரொளி இளமை-இவைகளே மானிடத்தின் முன்னேற்றம்; மனித உயர்வுக்கு அடையாளம்; நயத்தக்க நாகரிகம். யுகயுகமாக மனிதவர்க்கம் எதில் முன்வந்ததென்ருல், குறைந்த அளவு உள்ள அனுபவத்திலிருந்து நிறைந்த திருப்தி அளிக்கிற அனுபவத்தைக் கைப்பற்றுதலில்தான். அவ்விதமே மனித வாழ்க்கையின் பொருளுடைமை எண்ணமுடியாத அளவுக்கு வந்துவிடுகிறது. உள்ளத் தெளிவு உண்டாகிறது. இது பொதுவாழ்க்கையின் இயல்பு. ஒரு தேசத்தினரின் சரித்திரத்திலும் இதைக் காணலாம். தனிமனிதனின் வாழ்க்கையின் போக்கும் இத்தகையதே. இந்திரியங்களின் வலிமையும் நுட்பமான நுகர்ச்சியும் அதிகரித்து வருவதுடன் மன அடக்கமும் மனிதனுக்கு உண்டாகின்றது. இவ்விருவிதமான சக்திகள் ஒன்ருேடு ஒன்று லயித்து இனிய கீதம் பிறப்பிக்கவேண்டும். அதற்குரிய மூல கீதம், மூலத்துவனி, மூலசுவரம், மூலக்கருத்து, மூலக்கற்பனை, ஓவியப்பொருள் என்ற ஒன்று உண்டு. அதை ஒவ்வொரு வாழ்க்கைக் கலைஞனும் தனக்காகவே கண்டுபிடித்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜாதியாரும் அப்படியே தங்கள் சரித்திரத்தின் மூலக்கற்பனையைத் தெரிந்து தெளிகிருர்கள். ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் இவ்வழியில் தங்கள் சூக்ஷ்மமான தேசியத் தந்திரத்தை நன்கு உணர்ந்திருக்கிருர்கள்.

சங்கீதத்திலும் ஓவியத்திலும் அடிப்பரப்பு வாய்ந்த ஒரு மூலக்கற்பனை ஒவ்வொரு கிருதியிலும், சித்திரத்திலும் மண்டிக்கிடக்கும் என்று சொல்லலாம். ஓர் இராகம் முழுவதும் இசை ஊற்றுப்போன்ற ஒரு சுவரத்தில் அடங்கி உயிர்ச் சோதியுடன் இருக்கும். அந்த இராகத்தின் இசை ஸ்தானம் இந்தச் சுவரந்தான் என்று சொல்ல முடியும். அவ்விதமே ஒருவன் வாழ்க்கையிலும் ஒரு மூலக்கருத்து அல்லது கற்பனை ஓடிக்கொண்டிருக்கும். முக்கியமாக ஓவியத்திலிருந்து ஓர் உதாரணத்தைக் கவனிப்போம். ஒரு சித்திர அமைப்பானது தன் அங்கங்களில் அழகிய ஒழுங்கு எவ்வளவு உண்டோ அவ்வளவு சிறப்பையே அது அடைகிறது. அவ்விதமே வாழ்க்கையும் மேற்கூறிய அங்கங்களின் ஒருமிப்பிலும் அதற்குக் காரணமான ஓவிய மூலக்கருத்து அல்லது கற்பனையிலும் பொருளுடையதாகிறது.

வாழ்க்கையின் வெவ்வேறு காலங்களில் உண்டாகும் மூலக்கற்பனையானது அவ்வாழ்க்கையைப் புதுப்பிக்கிறது. 'சிறுவனுக்கு விளையாட்டில் ஆசை; இன்பம் தேடும் வாலிபனுக்கு இன்பந்தரும் பெண்ணிடத்தில் ஆசை; வயது முதிர்ந்தவனுக்குக் கவலைப்படுவதில் ஆசை; பரம்பொருளிடத்தில் ஆசை ஒருவனுக்கும் இல்லை' என்று

வடமொழிச்செய்யுள் ஒன்று கூறுகிறது. இன்னும் இதைவிடச் சிறிய மூலக்கற்பனை ஒவ்வொரு காலத்தில் நம் வாழ்க்கையில் புகுந்துவிடுகிறது. லோபியாயிருத்தலே மேன்மை என்று நடப்பது; வீரம் வேண்டுமே என்று ஓடியாடுவது; மனம் கரைவது; பெண்கள் கண்களுக்கு இனியனுவேனே என்று பிரயாசைப்படுவது; தனிப் புகழ் நமக்குக் கிட்டுமா என்று கவலைகளைப் பயில முயல்வது; இவ்வாறு நம் முயற்சிகளுக்கெல்லாம் ஓர் ஆதிகாரணம் ஏற்படும். அது உலகத்தினரின் கண்ணுக்குத் தென்பட்டாலும் நாமே அதை நன்கு அறிவதில்லை. அது தசாநாதன் சூழ்ச்சியோ என்று நாம் நினைக்கக்கூடும். எப்படியானாலும் அந்த அந்தத் தசையில் ஒருவித வாழ்க்கைச் சித்திரத்தை அமைத்துக் கொள்கிறோம்.

முயற்சி, வினைகளைச் செய்தல் என்பது நாம் எக்காலமும் கையாளுவதாகும். உலகமே ஓடிக்கொண்டிருக்கிறது; இருப்பில் இல்லை. மாறுதல்கள் ஏராளமாக உண்டாகின்றன. இந்நிலையில் மனிதன் தன் குணங்களைத் தானே நிறுவிக்கொள்ளவேண்டும்; தன் இயல்பைப் பரிபாலித்துக்கொள்ளவேண்டும். ஏதோ ஒரு சான்றைப் பார்த்து நடந்துகொள்ளமுடியாது. 'இமிடேஷன்' அவனுக்குப் பயன் அளிக்காது. தன் புகழுடம்பு என்று கருதவேண்டும். தன் லக்ஷியத்தைத் தீர்மானம் செய்துகொண்டு அதற்கேற்பத் தன் குணாதிசயங்களை அமைத்துக் கொள்ளவேண்டும்; நல்வழியிலோ, கெட்டவழியிலோ, நாம் எவ்விதப் பயனைத் தேடுகிறோம் என்பதைக் கவனிக்கவேண்டும். உறப்பான மனிதத்தன்மை இவ்விதமே விளைகின்றது. பௌருஷப் பயிற்சியற்றவன் மனிதவர்க்கத்திற்குத் தாழ்ச்சியை உண்டாக்குகிறான்.

கருமம் செய்வது நமது இயல்பு. அது நாம் கட்டாயமாய் ஏற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்பு. சாமானியமான சரீர சுகங்களுக்காகவும் மனித சமூக உறவாட்டத்தில் கலந்து களித்தலுக்காகவும், குடும்ப நன்மைக்காகவும் பாடுபட்டுக்கொண்டே இருத்தல் அவசியமாயிருக்கிறது. மிருகங்களுக்கும் இவை தீராத கரும விலங்குகளல்லவா? இவ்விதம் கருமங்களுக்கு அடிமைப்பட்டு இருக்கும்போதே, நாம் உள்ளத்தில் 'நாகரிகம் யாது? அது எப்படி நமக்குக் கைகூடும்? பொருள்களின் உண்மையை அறிந்து அவ்வறிவால் பிரதிபலிக்கும் அபிருசிகளைப் பெறுவது எப்படி?' என்று எக்காலமும் யோசித்துப் பார்க்கவேண்டும். எக்கருமங்களையும் பிரியத்துடன் செய்யவேண்டும். ஆனால் நம் நிதானபுத்தியை மட்டிலும் கைவிடுவது கூடாது. கருமமே கண்ணாயிருப்பதுடன் பொருள் யாவற்றையும் நன்கு மதித்துப் பார்க்கும் இயல்பே பிரதானம். எப்படி மதப்பற்றுடன், 'அன்பே பிரதானம்' என்ற பூரண

உணர்ச்சியும் வேண்டுமோ, அப்படியே முயற்சியுடையார் என்று புகழ்பெறுவதுடன், திருவுடைய குணங்களைப் பூண்டவர் என்ற உயர்வையும் பெறவேண்டும்.

வாழ்க்கையின்பம் அடங்காத மிருகங்களுக்கு உரியதன்று. அவை மயக்கம், துக்கம், மடி முதலியவை நிறைந்த ஒரு நிலையிலிருந்து, திடீரென்று சீறுதல், வெகுளி, மூர்க்கம், ரௌத்திரம் என்ற நிலைக்குள் புகுந்துவிடுகின்றன. நடுநிலைமை என்பது மனிதனுக்கே சாத்தியமானது. புத்திப் பயிற்சி செய்தல், தன் கருத்துக்களையும் ஆசைகளையும் பூர்த்தி செய்துகொள்ளுதல், உலகத்தில் எந்த ஸ்தானம் தனக்குரியது என்று நிர்வகித்தல், உலகத்துப் பொருள் எவ்விதம் தனக்குச் சேவை புரியும் என்று அறிதல் என்பவை யாவும் மானிட சுகத்திற்கு அடிப்படையானவை. நாம் புத்திநெறி வழுவாது இருந்தால், நமக்கு வாழ்க்கைச் சுகம் பிறக்கும். அதோடு சுகம் நிற்காது என்றும், எப்போதாவது அதைப் பறிகொடுக்கவேண்டும் என்றும், நாம் தனியாய் ஊன்றுகோலின்றி நிற்கவேண்டியதாகும் என்றும், பிரபஞ்சத்திற்கும் நமக்கும் இடையே ஒரு பிளவு ஏற்பட்டு நாம் கைதாழ்வோம் என்றும் ஆலோசிக்க வேண்டும். 'இங்கே அபாயம்' என்ற நோட்டீசு அடிக்கடி வாழ்க்கையின் நிலைமைகளில் போட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனித்துவரின் நாம் சுகிகளாகவும் விவேகிகளாகவும் ஒருங்கே அமைவோம். ஹிந்துமதத்திற்கு மூலபுருஷர்களான வேதரிஷிகள் 'எல்லாப்பொருள்களும் நமக்குச் சேவை புரியும்; நாமும் அவற்றிற்குச் சேவை புரியவேண்டும்' என்ற உண்மையைப் புகட்டினர்களே யொழியக் கேவலம் வைராக்கியத்தைப் புகட்டவில்லை.

வாழ்க்கையின் ஒழுங்கு அல்லது சிற்பம் மனிதன் தன் புத்தியின் வலிமையினலேயே நிறுவிக்கொள்ளவேண்டியதாகும். புத்தி இருவகைப்போக்கு உடையது. பொருளுலகில் ஒரு பொருளுக்கும் மற்ருென்றிற்கும் உள்ள மாறுபாடுகளைப் பகுத்து ஆராய்ந்து பார்த்துத் திருப்தி அடைதல் புத்தியின் வழி. அதனுடைய மற்ருெரு வழி என்னவென்ருல் இப்பொருள்களைச் சேர்த்துப் பார்த்து அவற்றின் அன்யோன்ய உறவை அறிவாற்றலால் சுவீகரித்து ஒரு தத்துவ வழியை நிர்மாணிப்பது. பகுத்தறிவு ஒன்று; சமஷ்டி அறிவு, சிற்பஞான அறிவு மற்ருென்ருகும். கலை அறிஞரால் தம் புத்தியை இவ்விருவிதமாகவும் பிரயோகிக்க இயலும். பல்விதப் பொருள்களின் உருவலாவண்யத்தை அப்படியே தனித்தனியாய்ச் சிற்பவேலையில் விளக்குவது சிற்பத்தொழிலின் வழிகளில் ஒன்று. இயற்கை உறப்புத் தத்துவம் என்று இது வழங்குகிறது.

மனிதவாழ்க்கையிலும் இந்தப் பயிற்சியைக் கையாளலாம். கலக்க மற்ற போகமார்க்கம் என்று இவ்வாழ்க்கை மார்க்கத்தைக் கூறலாம். மற்றொரு வாழ்க்கை மார்க்கமாவது சிற்பஞானியின் சமஷ்டி அறிவுக்கு ஒத்திருக்கும். ஆனால் இது மிகக் கடினமான வழி. உயரிய ஓவியம், உயரிய சங்கீதம்போன்றது. ஒருவர் கூறியிருப்பதை இறுதியாகச் சொல்வேன்: நல்ல ஓவியம் என்பது புத்தி என்ற கருவியினாலேயே - அதிலும் எளிதல்ல - அனுபவிக்கக்கூடிய ஒரு சங்கீதம், ஓர் இராகம்! அப்படியே உயரிய வாழ்க்கையிலிருந்தே பொருளுலகைச் சமஷ்டி அறிவினால் பார்க்க முயலவேண்டும். நம் புலன்கள் பொருள்களைப் பாகுபட்டனவாகக் காட்டுகின்றன. ஒரு பொருளைப் பார்ப்பதுடன் அப்பொருளைத் துளைத்து ஞான அறிவை உட்புகுத்திப் பொருளுலகுக்கு ஆதாரமான செம் பொருள் அல்லது அத்வைத உண்மையைக் கைப்பற்ற வேண்டும். தனிப் பொருள்கள் அச்செம்பொருளின் சின்னங்களல்லவா?

இந்தச் சந்தர்ப்பத்தில், வாழ்க்கைச் சிற்பத்திற்கு அவசிய மான மூலக்கற்பனை அல்லது மூலக்கருத்து, வாழ்க்கை என்ற இராகத்திற்கு மூலமான சுவரம், வாழ்க்கை ஓவியத் திற்கு மூலமான நாடகப்பொருள் யாது? வாழ்க்கையை ஓவியத் திற்கு ஒப்பிட்டுப் பேசுவது ஒரு சிறிது எளிது. மூலக்கற்பனை, சித்திரவாய்ப்பு அல்லது நெசவு, வருணம், சிற்பம் அல்லது வரைதல் என்ற சொற்கள் மேற்கத்திய சங்கீதக்கலைச் சொற்களாக உப யோகப்படும்போது, வேறு அர்த்தங்களைப் பெற்று விடுகின்றன. ஓவியக்கலைச் சொற்களாக வைத்துத்தான் இங்கே உபயோகித்திருக் கிறோம். மூலக்கற்பனை என்றால் ஒரு புஷ்டியான நாடகபாவம் அல்லது கருத்து என்பது. வாழ்க்கைக்கு மூலக்கற்பனை என்பது, போகம், யோகம், வைராக்கியம், அல்லது இவற்றின் ஒரு பகுதி யாகிய எந்த லக்ஷியமானாலும் சரி; இது வாழ்க்கைக்கு ஒற்றுமை என்ற அழகை அளிக்கிறது. மேலும் மனிதனின் வெவ்வேறு தசைக்கு வெவ்வேறு மூலக்கற்பனை இசைந்ததாகும்.

கடைசியாக, நம் வாழ்க்கையின் இசை, அகில சிருஷ்டியின் அகாதமான இசையுடன் ஒத்து ஒலிப்பதுடன் அதில் லயிக்கவும் வேண்டும். மரணம் என்பது இவ்விரண்டு இசைகளும் லயித்து ஒன்றுபடும் காலம். மரணம் வரும் முன்னரே, நம் வாழ்க்கைக்கும் அகில உலக வாழ்க்கைக்கும் இசை ஒப்பந்தம் உண்டாகவேண்டும். நம் நாட்டுப் பூர்ணாவதார புருடராகிய கிருஷ்ணபகவானும் அவரை விடச் சற்றுச் சாமான்யமான அயல்நாட்டு ஜீவன்முக்தராகிய அர்ச். பிரான்ஸிஸ் மகானும் இதற்கு உன்னதமான உதாரணங்களாவார் கள். அவர் முழு வாழ்க்கையானது ஒரு பங்கமற்ற சிற்ப வேலையின் ஆழ்ந்த, பிரகாசமான ஒற்றுமையழகையும், இசை இன்பத்தையும் பெற்றிருந்தது. இந்தச் சிற்ப அழகையும், கீதப்பொலிவையும் நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு சிறிது சாதகம் செய்யலாம்.

திருச்சி அகில இந்திய ரேடியோவில் 7-12-39-இல் பேசியது; அனுமதி யுடன் பிரசுரிக்கப்பட்டது.

சிறுவர் பகுதி

: ஏமாற்றின குரங்கு :

* என். பஞ்சாபகேசன் *

ஒருநாள் ஒரு குரங்குக்கு ஆகாரமே அகப்படவில்லை. அது நெடுநேரம் சுற்றிச் சுற்றி வந்தது. கடைசியில் ஓர் ஓடை அருகில் வந்து தண்ணீரைக் குடித்தது. பிறகு அதனருகிலுள்ள ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு குருட்டுயோசனை பண்ணிக்கொண்டிருந்தது.

அன்றைத்தினம் காட்டில் மற்ற மிருகங்களுக்கும் ஆகாரம் கிடைக்கவில்லைபோல் இருக்கிறது. ஓர் ஆண் சிங்கமும் ஒரு பெண் சிங்கமும் காடெல்லாம் அலைந்துவிட்டு ஓடைப்பக்கம் வந்தன. மானோ, முயலோ தண்ணீர் குடிக்கவந்தால் அதை அடித்துச் சாப்பிடலாமென்று எதிர்பார்த்தன. ஆனால் ஒன்றும் வரவில்லை. அந்தக் குரங்குதான் இருந்தது. சிங்கங்களின் பசிக்கு அந்தக் குரங்கு எவ்வளவு? அவை காத்துக் காத்து ஒன்றும் வராமற் போகவே, 'சரி, இதைத்தான் சாப்பிடுவோமே!' என்று மெல்லப் பதுங்கி அதனிடம் வந்தன. குரங்குக்கு அவை வரும் சப்தம் எப்படியோ காதில் விழவே ஓடிப்போய் அம்மரத்தின்மேல் ஏறிக்கொண்டது.

ஆண் சிங்கம் துரத்திக்கொண்டு வந்தது. அப்படியும் அதனால் குரங்கைப் பிடிக்க முடியவில்லை. குரங்கு மரத்தின் உச்சிக்குப் போய்விட்டது. சிங்கம் மிக வலிமையுள்ள பிராணிதான். இருந்தாலும் அதனால் மரம் ஏற முடியாதல்லவா? இரண்டு சிங்கங்

களும் கீழே உட்கார்ந்துகொண்டு கொட்டாவி விட்டன. குரங்கிற்குமட்டும் பயந்தான். அது கீழே பார்த்துக்கொண்டே இருந்தது.

ஏமாற்றப்பட்ட கோபத்திலே ஆண் சிங்கம் உர் உர் என்று கர்ஜித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டது. பெண் சிங்கம்மட்டும் சிறிது யோசனை செய்தது. 'மரம் ஏற நமக்குத் தெரியாது. அதனால் மரத்தின் உச்சியிலிருக்கும் இந்தக் குரங்கைப் பிடிக்கமுடியாது. ஆனால் மரத்தின் உச்சியையே நம்மிடம் கொண்டு வந்துவிட்டால், பிறகு குரங்கு எங்கே போகமுடியும்?' என்று யோசித்தது.

உடனே அது அடிமரத்தைக் கடிக்கத் தொடங்கியது. சுற்றிச்சுற்றிக் கடித்து நன்றாக வெட்டி விட்டது. நடுவில்மாத்திரம் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்தது. 'பெண் சிங்கம் இவ்வளவு கஷ்

டப்பட்டதே; நாம் அதற்குக் கொஞ்சம் உதவி செய்வோம்' என்று ஆண் சிங்கமும் அந்த மரத்தைத் தன் பலம்கொண்டமட்டும் ஆட்டிற்று. 'சடசட' என்று மரம் ஆடிற்று. குரங்கிற்குப் பாதி உயிர்

போய்விட்டது. டப்பென்று மரம் முறிந்தது. அடபாவமே! அது ஓடைக்கு அக்கரைப் பக்கம் சாய்ந்துவிட்டது. ஓடையின் அகலத்தைவிட மரத்தின் நீளம் கொஞ்சம் அதிகமாக இருந்ததால், அதன் நுனி அக்கரைப் பக்கம் சாயுமுன் குரங்கு கீழே குதித்து எடுத்தது ஓட்டம்.

சிங்கங்கள் இரண்டும் ஓடையில் குதித்தன. அவைகளுக்கு வந்த கோபத்தில் எப்படியாவது இந்த அற்பக் குரங்கைப் பிடித்துவிடுவது என்று கிளம்பின. ஆனுல், பாவம்! அவை ஆகாரம் இல்லாமையால் பலம் குன்றிப்போயிருந்தன. அதனுல் வேகமான காட்டு ஓடையில் அடித்துக்கொண்டு போகப்பட்டன.

தானே அந்த மரத்தை ஆட்டித் தன் பலத்தினுல் வீழ்த்தித் தப்பித்துக்கொண்டதாக அந்தக் குரங்கு தன் சகபாடிகளிடம் சொல்லி, "முன் ஒரு காலத்தில் ஒரு முயல் சிங்கத்தை அதன் நிழலைக் காட்டிக் கிணற்றில் தள்ளியதாம். அதைக் காட்டிலும் நான் பெரியவன். முயல் ஒரு சிங்கத்தைத்தான் கிணற்றில் தள்ளிற்று; நான் இரண்டு சிங்கங்களை ஓடையில் தள்ளினேன்" என்று பெருமையடித்துக்கொண்டு திரிந்தது.

பண்டைச் சோழ மன்னர்கள் (முதற்பாகம்): [கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியின் தமிழ்ப் போதகாசிரியர் ல. ஸ்ரீநிவாஸ ஐயர் எழுதியது; 140 பக்கங்கள்; விலை ரூ. 1. கிடைக்குமிடம்: லலிதா பிரதர்ஸ் லிமிடெட், கும்பகோணம்.]

தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவருள் ஒருவரான சோழர் பழைய காலம் முதற்கொண்டே பெருமை வாய்ந்தவர்கள். எத்திசையும் புகழ்பரக்க ஒரு ஸாமராஜ்யத்தை நிறுவி ஆண்ட இம்மன்னர்களின் வரலாறு மிகவும் முக்கியமானதே. ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயர் அவர்கள் சோழர்கள் வரலாற்றைப் புராணகாலம், சங்ககாலம், பிற்காலம் என மூன்று பகுதிகளாக வகுத்துக்கொண்டு ஒவ்வொரு பகுதியிலும் சிறப்புற்று விளங்கியவர்களின் சரித்திரத்தைக் கூறுகிறார். இப்பொழுது வெளிவந்துள்ள முதற் பாகத்தில் புராண காலத்திலும் சங்க காலத்திலும் வாழ்ந்தோரைப்பற்றிக் கூறுகிறார்.

தேவாஸுர யுத்தத்தில் தேவர்கள் பக்கத்தில் போர்புரிந்த முசுகுந்தன், 'மகனை முறை செய்த மன்னவன்' மனுநீதிச் சோழன், 'தன்னகம் புக்க குறுநடைப் புறவின்' பொருட்டாகத் துலைபுக்க சிபிச்சோழன், தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், காவிரி புரந்த வள்ளல் காந்தமன் ஆகிய ஐந்து புராணகாலச் சோழர்களும், பொன்னிக்கரை கண்ட பூபதிச் சோழன், கரிகாற் பெருவளத்தான், பிலமதனிற் புக்குத் தன் பேரொளியால் நாகர் குலமகளைக் கைப்பிடித்த கோன் கிள்ளிவளவன், பிசிராந்தையார்பால் அவரைப் பாராமலே நட்புப் பாராட்டிய கோப்பெருஞ் சோழன், சிவநேசச் செல்வனான புகழ்ச்சோழன், ஆழ்வார்களும் நாயன்மாரும் ஒருங்கு போற்றும் சோழன் செங்கணான் ஆகிய ஐந்து சங்ககாலச் சோழர்களும் இந்தப் பாகத்திற் காணப்படுகிறார்கள்.

சங்ககாலத்துச் சோழர்களது சரித்திரத்தில் ஆசிரியர் கொண்டுள்ள முடிபுகளுட் சில சமீபகால ஆராய்ச்சியாற் பெற்றவற்றினின்றும் வேறுபட்டுள்ளன. இதனை நோக்கும்பொழுது ஆசிரியர் இந்த நூலை வெகு காலத்துக்கு முன்னரே எழுதி வைத்திருந்து இப்பொழுதுதான் வெளியிட்டார் என்று தோன்றுகிறது. அடுத்த பதிப்பில் இக்குறை நிவர்த்தியாகிவிடும் என்று நம்புகிறோம்.

பழந்தமிழ் நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்ட மேற்கோள்கள் பல இந்த நூலில் காணப்படுகின்றன. உரை நடை மேற்கோள்களுக்கேற்ப உயர்ந்ததாக இருக்கிறது.

கல்லூரி மாணவர்களுக்குப் பாடபுத்தகமாக வைப்பதற்கு மிகவும் தகுதியானது இந்தப் புத்தகம். நடை லகுவாக இருந்தால் பொதுமக்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும்.

நம் முன்னோரளித்த அருஞ்செல்வம் (இரண்டாம் பாகம்)—இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்—1500-1796: [பேராசிரியர் எஸ். எ. பெக்மன், ஜி. வி. மெண்டிஸ் ஆகியோர் ஆங்கிலத்தில் எழுதியதை நவாலியூர், சோ. நடராஜன் தமிழில் மொழிபெயர்த்தது; XX + 256 பக்கங்கள். விலை சதம் 80. கிடைக்குமிடம்: கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பெனி, லிமிற்றட், குமார வீதி, கோட்டை, கொழும்பு, இலங்கை.]

உலக சரித்திரத்திலே இலங்கை ஒரு முக்கிய ஸ்தானத்தை வகித்து நிற்கின்றது. கடற்படையின் வலிகொண்டு பதினாறும்நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து ஐரோப்பிய ஆதிக்கத்தை உலகம் எங்கும் பரவச் செய்யக்கூடிய குடியேற்ற நாட்டு முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் முனைந்தன. 'கடல்யுத்தத்தைப் பொறுத்தவரையில் இந்து சமுத்திரம் மிக முக்கியமான ஒரு ஸ்தானத்தில் அமைந்திருக்கிறது'. அதனால் இங்கே கடலில் ஆதிக்கம் செலுத்த விரும்புவோருக்கு இலங்கையின் உதவி அவசியமானது. இதை அறிந்த போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர் (டச்சுக்காரர்), ஆங்கிலேயர் ஆகியோர் அந்தத் தீவைக் கைப்பற்றி ஆட்சி புரிய முயன்றனர்.

போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர் ஆகிய இருவரும் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட சரித்திரப்பகுதியைக் கூறுகிறது இந்தப் பாகம். அவர்கள் ஒருவர்க்கொருவர் நிகழ்த்திய போர்ச்செயல்கள், உள்நாட்டு மன்னர்களுடன் செய்த சண்டைகள் எல்லாம் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகம் இலங்கைப் பாடசாலைகளின் ஆளுநரதத்துக்கு ஏற்ற தாய் வித்தியாபகுதியாரின் 1936-ஆம் ஆண்டுப் புதிய பாடத்திட்டத்துக்கிசைய எழுதப் பெற்றது. பள்ளிக்கூடங்களின் பாடத்திட்டங்களுக்கிசையத் தமிழ் நாட்டிலும் சமீபகாலத்தில் பல சரித்திர நூல்கள் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. இவ்விரண்டுவகை நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 'நம் முன்னோரளித்த அருஞ் செல்வம்' சிறந்து விளங்குவது புலனாகும்.

இந்நூலின் ஒரு பாதி உலக சரித்திரம். இலங்கைச் சரித்திரத்தில், போர்த்துகீசியருக்கும் டச்சுக்காரருக்கும் இடையில் நிகழ்ந்த போர்களை நன்கு அறிந்துகொள்ள, அவர்களுக்கிடையில் உலகசரித்திரத்தில் நேர்ந்த போட்டிகளையும் நாம் அறியவேண்டியது அவசியமே. ஆசிரியர்கள் அதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு செவ்வனே எழுதி முடித்திருக்கிறார்கள்.

இந்திய சரித்திரத்திலும் பதினெட்டாம் நூற்றாண்டை, ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் நாட்டின் ஆதிக்கத்தைப் பெறப் போட்டியிட்டுப் போர்புரிந்த காலம் என்று கூறலாம். அவ்விருவர்களும் இந்தியாவில்மட்டுமல்லாமல், உலகில் எந்தப் பாகங்களில் இருந்தார்களோ அங்கெல்லாம் சண்டை போட்டார்கள். அவர்களுக்கிடையில் சண்டை ஏற்பட்ட காரணம் முதலியவற்றை இங்கே வெளியிடப்படும் இந்துதேச சரித்திர நூல்களில் சிறிதும் காணமுடியவில்லை.

இப் புத்தகம் அழகாக எழுதப்பட்டிருக்கிறது. இது மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும். நான் நாலைந்து தடவை திருப்பித் திருப்பி வாசித்துப் பார்த்தேன். இவ்விதமான நூலை மொழிபெயர்த்த நடராஜனையும், வெளியிட்ட பிரசுரகர்த்தர்களையும் நாம் பாராட்டவேண்டும்.

—தி. நா. சு.

பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் (முதற் பாகம்): [கவிராஜ பண்டிதர் ஜகவீர பாண்டியனார் எழுதியது; 332 பக்கங்கள்; விலை ரூ. 2. கிடைக்குமிடம்: திருவள்ளுவர் நிலயம், 8, மேலச்சித்திரை வீதி, மதுரை.]

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரராகிய கட்டபொம்மு ஊமைத்துரை ஆகியவர்களின் பெயர்கள் தமிழ்நாட்டிலே பிரசித்தமானவை. வீரத்துக்குப் பெயர் பெற்றவர்கள் அவர்கள். இன்றைக்கு நூற்றுநாற்பது ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேய வர்த்தகக்கம்பெனியாருக்கும் இப்பாளையக்காரர்களுக்கும் பெரும்போர் நிகழ்ந்து அதன் முடிவில் இவர்கள் அழிக்கப்பட்டார்கள். கோட்டையும் தரைமட்டமாக்கப்பட்டது.

கி.பி. 1790-ஆம் ஆண்டுமுதல் 1799-ஆம் ஆண்டு வரையில் பாளையக்காரராக இருந்த வீரபாண்டியக் கட்டபொம்மு நாயக்கரின் சரித்திரத்தைக் கூறுகின்றது இந்த நூல். அவர் தம்பி ஊமைத்துரையின் சரித்திரத்தையும் அவர் வீழ்ச்சியையும் இரண்டாம் பாகம் கூறும் என்று அறிகிறோம். அது விரைவில் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறோம்.

வீரபாண்டியக் கட்டபொம்முவின் சரித்திரம் பெரிதும் தெற்குச் சீமையில் வழங்கும் கர்ணபரம்பரைச் செய்திகளை ஆதாரமாகக்கொண்டு விளங்குகின்றது.

இந்த நூலில் நடுநடுவே அழகிய செய்யுட்கள் பல எடுத்தாளப்பட்டுள்ளன. அவை வீரம் பொருந்திய மக்கள் மேன்மையை நன்கு விளக்குகின்றன, அவை இதன் ஆசிரியர் செய்யுள் வடிவில் இயற்றி யிருக்கும் பாஞ்சாலங்குறிச்சி வீரகாவியம் என்னும் வீரபாண்டியத்தினின்றும் எடுக்கப்பட்டவை.

பாஞ்சாலங்குறிச்சியின் பெயரைச் சொல்லுவதற்கே பயந்திருந்தனர் தமிழ்மக்கள். அவ்விதமான பயத்தை விட்டுத் தைரியமாக அந்தச் சரித்திரத்தை எழுத முன்வந்த இதன் ஆசிரியரை நாம் பாராட்டவேண்டும்.

தானவிரதம்: [மோசூர் நா. சுப்புக்குட்டியம்மாள் எழுதியது. கிடைக்குமிடம்: எம். நாகேசுவர ஐயர், நம்மானேரி கிராமம்; மோசூர்; விலை அணா 2.]

ஸ்ரீகிருஷ்ண துலாபார வரலாற்றைக் கீர்த்தனங்களாகவும் விருத்தங்களாகவும் அமைத்த சிறு நூல் இது. இதனை இயற்றியவர் ஒரு முதிய சுமங்கலி. தமிழ் நாட்டில் பெண்மணிகளிடம் இயல்பாகவே கவித்வம் அமைந்திருக்கின்றதென்பதற்கு இப்புத்தகம் ஓர் அடையாளம். இலக்கண இலக்கியப் பயிற்சியினால் உண்டாகும் அதிவிசித்திர சிருஷ்டியில்லாத ஸ்வபாவமான ஓர் அழகை இப்பாட்டுக்களினிடையே காணலாம். இவர் இன்னும் பல சரித்திரங்களை எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இவர் சமீபத்தில் காலமானாரென்பதைக் கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

சித்திரகவி விளக்கம்: [ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி.எ. அமைத்தது; ஸ்ரீ ந. பலராம ஐயர் இயற்றிய உரையைக்கொண்டது; கிடைக்குமிடம்: வி. சு. சுவாமிநாதன், புத்தகவியாபாரி, மதுரை. விலை அணா 5.]

தண்டியலங்காரத்திலும் பிற அலங்காரநூல்களிலும் காணப்படும் சித்திர கவி இலக்கணங்களை நன்குவிளக்கி அவற்றின் உதாரணங்களுக்கேற்ற சித்திர அமைப்பையும் கொண்டுவிளங்குவது இப்புஸ்தகம். நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பெற்றிருக்கிறது.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் சரித்திரச் சுருக்கம்: [ஸ்ரீ வி. சு. நடராஜ சாஸ்திரி எழுதியது; கிடைக்குமிடம்: வி. சு. சுவாமிநாதன், மதுரை; விலை அணா 2.]

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்துவிளங்கிய ஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியாரைத் தமிழுலகம் நன்கு அறியும். பரிதிமாற் கலைஞனென்னும் புனைபெயர் பூண்ட அவர் பல செய்யுள் நூல்களையும் வசன நூல்களையும் எழுதியிருக்கின்றார். அவருடைய குமாரர்கள் இச்சரித்திரச் சுருக்கத்தை எழுதி மிகவும் அழுத்தமான காகிதத்தில் பலபடங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கு விலை இரண்டணாவென்று வைத்

திருப்பது வெறும் பெயரளவிற்கே யென்று தெரிகின்றது. இவர்கள் தம் அருமைத்தந்தையாரிடத்து வைத்துள்ள பக்தி மிகப் பாராட்டற்பாலது.

இயற்கை இன்பம்: [ஸ்ரீ மு. இராமலிங்கம் எழுதியது; கிடைக்குமிடம்: மு. ராமலிங்கம், நெ. 35 p. Anson Road, Teluk Anson (F.M.S.)]

இந்தப் புஸ்தகம் இயற்கை இன்பம் என்று பெயரிட்டு எழுதப்பெற்றுள்ள ஒரு பெரிய புஸ்தகத்தின் ஐம்பதாவது அத்தியாயமென்றும், அதன் பெயர் 'சரியா, பிழையா?' என்பதும் தெரிகின்றது. ஏதோ மனம்போன போக்காக எழுதப்பட்டதாகத் தோன்றுகின்றதே ஒழிய ஒரு வரையறையான கருத்தை விளக்கும் புஸ்தகமாக இல்லை. ஒவ்வொரு பக்கத்திலும் எழுத்துப் பிழை, வாக்கியப் பிழை, போதாததற்கு அச்சுப் பிழை இவை மலிந்துள்ளன. "இந்தப் புஸ்தகத்தை இந்த நிலையில் வெளியிட்டது சரியா? பிழையா?" என்று இதை வெளியிட்ட மனோன்மணி ஸ்வாமியைக் கேட்கவேண்டுமென்று தோற்றுகின்றது.

சொல்விளக்கம்: [மயிலை சே. சோமசுந்தரம் பிள்ளை தொகுத்தது. கிடைக்குமிடம்: 'தமிழ்க்கடல்' ஆபீஸ், 130, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை. விலை அணா 3.]

தமிழ்நாட்டில் பலர் ஆங்கிலத்திலே பிழையற எழுதுவதை முக்கியமாகக் கவனிக்கின்றனரே யொழியத் தமிழில் பிழையற எழுதுவதை ஒரு தவறாகக் கருதுவதில்லை. பல தமிழ்ப் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் சந்திப் பிழைகளும், ரகர றகர, ழகர ளகரப் பிழைகளும் மலிந்துகிடக்கின்றன. இந்தச் சிறுபுத்தகத்தில், மேலே சொன்ன பிழைகளை நீக்கி எவ்விதம் தெளிவாகவும் எளியநடையிலும் எழுதுவது என்பதை ஆசிரியர் நன்றாக விளக்கியுள்ளார்.

சங்கீத பாடப் புத்தகம் (அபிநயப்பாட்டும் நாட்டுப்பாட்டும்): முதல் பாகம் 1, 2, 3-ஆம் வகுப்புக்களுக்குரியது. இரண்டாம் பாகம் 4, 5-ஆம் வகுப்புக்களுக்குரியது. சர்க்கார் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தை அனுசரித்து எழுதப்பெற்றது. கிடைக்குமிடம்: வி. ராமுடு ஐயர், உதவித் தலைமையாசிரியர், இ. ஆர். ஹைஸ்கூல், தெப்பக்குளம், திருச்சி. முதல்பாகம் விலை அணா 0-2-0. இரண்டாம்பாகம் அணா 0-3-0.

பிரபுத்த பாரதத்தில் தமிழ் மணம்

'பிரபுத்த பாரதம்' என்னும் சிறந்த ஆங்கில வேதாந்தப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியைத் தமிழறிஞரும் துறவியும் யாழ்ப்பாணத்திற் பிறந்தவருமாகிய ஸ்ரீ விபுலானந்த சுவாமிகள் இந்த வருஷ முதல் ஏற்றுக்கொண்டு நடத்தி வருகிறார்கள். இமாசலத்திலுள்ள மாயாவதியில் அப்பத்திரிகை வெளியாகின்றது. இவ்வருஷம் அதன் 45-ஆம் ஆண்டு தொடங்கியுள்ளது. தமிழ்ப் புலமை மிக்க சுவாமிகள் ஆசிரியரானதன் அடையாளம் இவ்வாண்டின் முதல் இதழிலேயே இருக்கிறது. தொண்டரடிப்பொடி யாழ்வார் அருளிய திருப்பள்ளியெழுச்சியின் ஆங்கில மொழிபெயர்ப்பு அதில் உள்ளது. இரண்டாம் இதழில் திருவிளையாடல், சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் மதுரையைப்பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளைச் சுருக்கமாகக் கூறும் கட்டுரை ஒன்று வெளிவந்திருக்கிறது. இவ்வாறே தமிழ்நாட்டு இலக்கியச் செய்திகள் தொடர்ச்சியாக வருமென்றே நம்புகிறோம்.

இந்து சாதனப் பொன்விழா மலர் (1939): [கிடைக்குமிடம்: இந்து சாதனக் காரியாலயம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.]

பல அறிஞர்களுடைய கட்டுரைகளும் கதைகளும் அடங்கிய இம்மலர் சிறந்த முறையில் வெளியிடப்பட்டுள்ளது. பல ஆப்டோன் படங்களும் பரமசிவனுடைய மூவர்ணப்படமும் கண்களைக் கவர்கின்றன.

ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய் பாராட்டு மலர்: [எழும்பூர் ஜகந்நாத பக்தஜன சபையார் வெளியிட்டது. விலை ரூ. 1—0—0.]

இம்மலரில், பிரவித்திபெற்ற ஹரிகதா காலக்ஷேப நிபுணரும் பாகவதருமான ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய் அவர்களைச் சிறப்பித்துப் பல பெரியோர்களும் ஸங்கீத விற்பன்னர்களும் எழுதிய கட்டுரைகளும் வாழ்த்துக்களும், அவரைப்பற்றிய வரலாறும் பல படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன. பிரசுர கர்த்தர்களின் நன்முயற்சியை நாம் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

வாலாஜா இந்துமத பாடசாலையின் பொங்கல் மலர்: [நிர்வாகஸ்தர்கள்: ஸ்ரீ மாசிலாமணி முதலியாரும் ஸ்ரீ பஞ்சாக்ஷர முதலியாரும்.]

1916-இல் இவர்கள் ஸ்தாபித்த இந்தப் பாடசாலை இப்பொழுது பல பெரியோர்களாற் புகழப்பெற்று வருகிறது. சாதாரண வாழ்க்கைக்கு இன்றியமையாத கைத்தொழில்களையும் தமிழ்க் கல்வியையும் இங்கே போதிக்கிறார்கள். அவற்றைப்பற்றிய விவரத்தை இச்சிறு வெளியீட்டிற் காணலாம். இதன் நிர்வாகஸ்தர்களுடைய உழைப்பும் ஊக்கமும் பாராட்டற்பாலன.

ஐயரவர்கள் தேகநிலை

ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்குச் சில காலமாகத் தேக அசௌக்கியம் உண்டாகி ரண சிகிச்சை செய்யும்படி நேர்ந்தது. சமீபத்தில் ராயபுரம் ஆஸ்பத்திரியில் ஸ்ரீமான் கனகஸபேசையரவர்கள் ஆபரேஷன் செய்தார். இறைவனருளால் ஐயரவர்கள் இப்பொழுது குணமடைந்து வருகிறார்கள். அவர்கள் இந்த அசௌக்கியததிலும் தமிழை மறக்கவில்லை. முன்பு எழுதி வைத்திருந்த கட்டுரை ஒன்றை இந்த மாதக் கலைமகளுக்கு உதவியிருக்கிறார்கள்.

அவர்கள் பூரண சௌக்கியமுற்று இன்னும் நிறைவேற்ற எண்ணியுள்ள காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம். தமிழ் நாட்டினர் அனைவரும் இங்[illegible] பிரார்த்திப்பார்களென்று நம்புகிறோம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
211859



Retail Branch 285, China Bazaar

23 வருஷமாக

சென்னையில் பிரபலமானவர். எதிர்கால பல நிபுணர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி வருஷப்பலன் ரூ. 3. எதிர்காலக் கேள்வி 6-க்கு ரூ. 1. பொதுப்பலன் ரூ. 10. ஆயுள் வரை புக்திவாரிபலன் எழுத ரூ. 25 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை).

ஜோதிஷரத்னம்
பண்டிட் M. R. K. மூர்த்தி.
38, தேவராஜ முதலித் தெரு,
பி. டி. மதராஸ்.

கிளை ஆபீஸ்: 1, ஆடம் தெரு,
மயிலாப்பூர்.

கலைமகள் சித்திரப் படங்கள்

ஆரம்பப் பாடசாலைகளுக்கு இன்றியமையாதவை

பத்துப் படங்கள் தயாராக இருக்கின்றன.
ஒவ்வொன்றும் அளவு 30×24 அங்குலம்.

1. காக்கா காக்கா எங்கே போனாய்? (கதை, சம்பாஷணை.)
2. பானையின் கதை.
3. ஈயின் கதை.
4. வாகனங்கள் (தரை மார்க்கம்.)
5. வாகனங்கள் (ஜல மார்க்கம், ஆகாய மார்க்கம்.)
6. அரிசியின் கதை.
7. கதை கதையாம்.
8. தபால் கார்டின் கதை.
9. என்ன காக்கா?
10. வாலறுந்த குரங்கு.

இவை கதை சொல்லுதல், படங்களை ஒட்டின சம்பாஷணை செய்தல், பொது அறிவு, வாசிப்பு இவைகளுக்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளன.

படம் ஒன்று 9 பை; ஒரு செட் 0-6-0; தபாற் செலவு 0-3-0

மானேஜர், கலைமகள் ஆபீஸ் மயிலாப்பூர், சென்னை.

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள்

108-பக்கங்கள் ஆராய்ச்சியுடன்

விலை ரூ. 4—0—0

		ரூ.	அ.
1.	குறுந்தொகை: விரிவான உரை, சங்கநூல்களைப் படித்தறிவதற்குக் கண்ணாடிபோல் உதவும் ஆராய்ச்சி முதலியவற்றுடன் ...	7	8
2.	தணிகாசல புராணம்: திருத்தணிகைக் கந்தப்பைய ரென்னும் வித்துவானால் இயற்றப்பெற்றது ...	0	10
3.	திருக்காளத்தி இட்டகாமிய மாலை: பக்தி ரஸம் ததும்பும் நூல் ...	0	2
4.	குழைக்காதர் பாமாலை: சிறையிலிருந்த புலவர் மன முருகிப் பாடியது ...	0	4
5.	புகையிலை விடுதூது: புகையிலையின் சிறப்பைக் கூறுவது ...	0	2
6.	நல்லுரைக் கோவை—4-ஆம் பாகம்: 20 ரஸமுள்ள கதைகளும் கட்டுரைகளும் அடங்கியது ...	0	12
7.	மணிமேகலைக் கதைச் சுருக்கம்: மாற்றி எழுதிய புதுப்பதிப்பு ...	0	8

தியாகராஜ விலாஸம், திருவல்லிக்கேணி, சென்னை.

கலைமகள் வருட சந்தா

(தபால் செலவுடன்)

இந்தியா, ஸிலோன் ரூ. 4-0-0

பர்மா ரூ. 4-8-0

பினாங்கு, சிங்கப்பூர், நேடால் ரூ. 6-0-0

தனி ஸஞ்சிகை அணா 6

அல்லது 36 சதம்

கலைமகள் காரியாலய வெளியீடுகள்

—:o:—

		ரூ.	அ
1.	முருகன் ஓர் உழவன்—ஸ்ரீமான் வேங்கட ரமணி அவர்கள் எழுதிய அரிய நாவல் ...	1	8
2.	குமுதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதிய நாவல் - வங்காளியிலிருந்து ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்த்தது ...	1	8
3.	மாயாவிநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது - ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது	1	8
4.	பைரவி—சரத்சந்த்ர சட்டர்ஜி எழுதியது (த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்த்தது)...	1	8
5.	விதியின் செயல் முதலிய கதைகள்—ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், ஐ.ஸி.எஸ். எழுதியது ...	0	6
6.	ரிஷப விஜயம்—ஓர் இனிய நாடகம் - ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது ...	0	12
7.	அற்புத உலகம்—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ. பி.எல். எழுதியது. ஸர் ஸி. வி. ராமன் முதலிய பேரறிஞர்கள் புகழ்ந்து பாராட்டும் அரிய புஸ்தகம் ...	1	0
8.	ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள்—50 உபந்யாஸங்கள் கொண்ட புஸ்தகம் ...	1	8
9.	ஸ்ரீ சங்கர விஜயம்— ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்கள் திருவாய்மலர்ந்தருளியது ...	0	10
10.	சியாமளா தண்டகம்— வடமொழி மூலமும் தமிழுரையும் - ஸ்ரீ அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், எம்.ஏ., எல்.டி. மொழிபெயர்த்தது ...	0	1
11.	கலைமகள் சிறுவர் படங்கள்—10 படங்களடங்கிய ஸெட் ஒன்றுக்கு ...	0	6
12.	த்வாதசோபநிஷத்—தமிழில் என். எஸ். ராஜாராமையர் மொழிபெயர்த்தது ...	2	0

தபாற் கூலி வேறு

"கலைமகள" சந்தாதார்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

இந்தியாவில் கோஹினூர்போன்ற மருந்து

பைரவி

ஸ்ரீ சரத்சந்திர சட்டர்ஜி எழுதிய

அரிய நவீனம்

விலை ரூ. 1-8-0 தபாற்செலவு வேறு.

மானேஜர்-கலைமகள்-மயிலாப்பூர்

முக்கிய அறிவிப்பு

சந்தா நேயர்கள் பலர் தமக்குப் பிரதிகள் கிடைக்காவிடின் குறிப்பிட்ட பிரதி கிடைக்கவில்லையென்று பல மாதங்கள் கழித்துக் கடிதம் எழுதுகிறார்கள். விலாச மாறுதலையும் அவ்விதமே முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிறார்கள். விலாச மாறுதலை இங்கிலீஷ் மீ 10-ஆம் தேதிக்குள் தெரிவிப்பது நலம். கலைமகள் இதழ் ஒவ்வொன்றும் தமிழ்மீ முதல் தேதி (இங்கிலீஷ் மீ சுமார் 16-ஆம் தேதி) வெளிவரும். 20 தினங்களுக்குள் இதழ் கிடைக்காவிடின் கடிதம் எழுதினால் அதை மீண்டும் அனுப்ப இயலும்.

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் வங்காளியில் எழுதிய

குமுதினி

ஸ்ரீமதி ரங்கநாயகி

மொழிபெயர்த்தது

ரூ. 1—8—0

சுமார் 400 பக்கங்கள்—நல்ல கிளேஸ் காகிதம்

கலைமகள் சந்தாதார்க்கு மாத்திரம், ரூ. 1—2—0

(தபால், வி. பி. செலவு தனி.)

மாயா விநோதினி

மிகவும் சிறந்த நாவல்

ரவீந்திரநாத் டாகுர் எழுதியது

ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது

விலை ரூ. 1-8-0

ரிஷப விஜயம்

ஒரு அரிய இனிய நாடகம்

ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது

விலை ரூ. 0-12-0

தபாற் கூலி வேறு.

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்

Regd. No. M. 2748] [Vol. XVII, No.

ஆந்திரதேசத்தில் வெற்றிக்கொடி பறக்கிறது!

சென்னை பிராட்வே டாக்கீஸில்

குதூகலமான 4-வது வாரம்

நடைபெறுகிறது

ஸ்ரீ ஜகதீஸ் பிலிம்ஸாரின் உணர்ச்சிததும்பும்

தெலுங்கு சமூகப்படத் தயாரிப்பு

மள்ளி பெள்ளி

அல்லது

மறுமணம்

ஒய். வி. ராவ்	:	காஞ்சனமாலா
ராஜரத்னம்	:	பாலிஜபள்ளி
சத்யநாராயண	:	ரங்கஸ்வாமி

மற்றும் பலர் நடிப்பது

'சிந்தாமணி' தயாரித்துப் பெரும்புகழ்பெற்ற

ஒய். வி. ராவின்

டைரக்ஷன்.

தமிழ் நாடெங்கும் விரைவினில் எதிர்பாருங்கள்

மயிலாப்பூர், மெட்ராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு, ரா. நாராயணசா
ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் பதிப்பித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.